Registered at G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.




புத்தகம் 10 ஏவிளம்பி ஞூ சித்திரை மாதம் 16 திகதி 28-4-57 ஞாயிற்றுக்கிழமை றம்ழான் பிறை 27 இதழ் 47

# பட்டாளத்தைக் காட்டி பயமுறுத்தி

## தமிழ் இனத்தின் சுதந்திர வேட்கையை தணித்துவிட முடியாது

## அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கை குறித்து டாக்டர் நாகநாதன் அறிக்கை

## போராட்டத் திட்டங்கள் இரகசியமானவை சமயம் வரும்போது வெளியிடப்படும்



டாக்டர்
இ. எம். வி. நாகநாதன்



பிரதமர்
எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா

(சுதந்திரன் அரசியல் நிருபர்)

"காக்கி உடைகளையும், கரிய பிரங்கித் துப்பாக்கிகளையும் தாங்கிய படைகளையும், பட்டாளங்களையும் கொண்டு பயங்காட்டி, ஒரு இனத்தின் உயிருக்குயிரான சுதந்திரப் போராட்ட வேட்கையைத் தணித்துவிடலாம் என்று பிரதமர் பண்டாரநாயகா எண்ணுவது நகைப்பிற் கிடமானதாகும்.

விடுதலைத் தாகம்கொண்ட நம் வீரர்களையும் வீராங்கனைகளையும், உயிரைத் திரணமாக மதித்து, காந்திய கவசம்தாங்கி அஹிம்ஸா யுத்தம்புரிய ஆவேசம் கொண்டு நிற்கும் நமது தலைவர்களையும், தேச பக்தர்களையும் பலாத்கார நடவடிக்கைகள் ஒருபோதும் வெல்லமுடியா. அப்படி வென்றன என்பதற்கு சரித்திரத்திலேயே சான்று இடையாது.

சாத்வீகத் தொண்டர் படையின் முன்னர், சர்வ சக்திவாய்ந்த பிரிட்டிஷ் இராணுவமே செயலற்றுப் போன அதிசயத்தைப் பண்டாரநாயகா உட்பட இந்த சந்ததியினர் அனைவரும், அண்டை நாடான இந்தியாவில் நிதர்சனம் கண்ட பின்னரும், நமது பிரதமர் பழைய பத்தாம் பசலித்தனமான அடக்குமுறைகளில் நம்பிக்கைவைத்து, அவற்றின்மூலம் தமது ஆட்சித்தேரை ஆடாமல் அசையாமல் ஓட்டிவிடலாம் என்று கனவு காண்கிறார் என்றால், அவர்மீது நாம் இரக்கப்படவேண்டும், பட்சாத்தாபப்படவேண்டும், அனுதாபப்படவேண்டும்," என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் சுதந்திரன் அரசியல் நிருபரிடம் கூறினார்.

டாக்டர் நாகநாதன் மேலும் தொடர்ந்து தெரிவித்ததாவது: "தமிழரசுக் கட்சியின் ஆகஸ்ட் போராட்டத் திட்டங்கள் பரம இரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன. சமயமும் சந்தர்ப்பமும் வரும்போது அவை பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் அறிவிக்கப்படும். அதுவரை பொதுமக்கள் பொறுமையாயிருக்கவேண்டும். தமிழரசுக் கட்சியினரின் உத்தேச போராட்டத் திட்டங்கள் என்று சில பத்திரிகைகள் பல கற்பனை நடவடிக்கைகளை வெளியிடுகின்றன. அவை ஆதாரமற்றவை. தமிழரசுக் கட்சியின் போராட்ட நடவடிக்கைகள் அனைத்தும் சாத்விகமானவையாக இருக்கும் என்றும், பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளக்கூடியனவாக இருக்கும் என்றும் தான், நான் இப்போது கூறமுடியும்."

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கடந்த இரு வாரங்களாக தொண்டர் படை திரட்டிவருவதும், இப்படையில் ஆயிரக்கணக்கான வாலிபர்களும், வயோதிபர்களும், பெண்களுமாக இதுவரை சுமார் நாலாயிரம் தொண்டர்கள் சேர்ந்துவிட்டதும் அரசாங்கத்திற்கு பெரிய கிலியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

இதுவரை தொண்டர் படை வடமாகாணத்தின் சில தொகுதிகளிலும், வவுனியாவிலும், மூதூர்த் தொகுதியிலும் மட்டுந்தான் திரட்டப்பட்டிருக்கிறது; மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளிலும், யாழ்ப்பாணத்தின் எஞ்சிய பகுதிகளிலும், மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலும் படை திரட்டப்படும்போது தொகை 25,000க்கு அதிகமாகிவிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஜரூர் நடவடிக்கை

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தைத் தொடர்ந்து பிரதமர் திரு. பண்டாரநாயகா புதன்கிழமை காலையில் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு பூர்வாங்க ஏற்பாடுகளை ஜரூராகக் கவனித்தார் என்று தெரியவருகிறது.

வருகிற ஆகஸ்ட் 20ல் தமிழரசுக் கட்சியினர் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்ததும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதென்ற திரைக்குப் பின்னால் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆங்காங்குள்ள கேந்திரஸ்தானங்களில் இலங்கை இராணுவப் படையினரை நிறுத்தி வைப்பதென்று ஒரு அந்தரங்கத்திட்டத்தைப் பிரதமர் வகுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படையினர் பொலீஸாருக்கு உடந்தையாகப் பணிபுரிவார்கள் என்று பிரதமர் மந்திரிசபை சகாக்களிடம் தெரிவித்தாராம்.

### நிலைமை முற்றிவிட்டது

"சட்டமறுப்பு இயக்கம் ஒன்றை நடத்துவதற்காக தமிழ் அரசுக் கட்சியினர் தமிழ்பேசும் மக்களைத் தயார்செய்துகொண்டு வருகிறார்கள். நிலைமை முற்றிவிட்டதாக எனக்குக்கிடைக்கும் அந்தரங்க பொலீஸ் செய்திகள் அறிவிக்கின்றன. அரசாங்கம் இன்னுமின்னும் அலட்சியமாக இருக்கமுடியாது. உருவாகிவரும் அபாயகரமான நிலைமையைப் பற்றி விசேஷ கவனம் செலுத்த வேண்டும்" என்று பிரதமர் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சர் சபைக்கூட்டத்தில் பிரலாபித்தாராம்.

அப்போது அமைச்சர் ஒருவர், "தமிழ்அரசுக்கட்சியைச் சட்டவிரோதமாக்கிவிட்டால் என்ன? தமிழரசுக் கட்சியின் வங்கி நிதிகளைத் தடுத்து முடக்கி விட்டால் என்ன?" என்றெல்லாம் ஆலோசனை கூறினாராம்.

### சொல்லுகிறபடி செய்கிறவர்கள்

அதற்குப் பிரதமர் பண்டாரநாயகா, "என்ன தடையைப் போட்டாலும் அதை மீறுவதென்று தமிழ்அரசுக் கட்சித் தலைவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். சொல்லுகிறபடி செய்யக்கூடிய உறுதி வாய்ந்த தலைவர்கள் பலர் அக்கட்சியில் இருக்கிறார்கள். நாமாக ஏதாவது தடை போட்டால் அதை மீற, அதாவது அவர்கள் விரும்பும் சட்டமறுப்பை இலகுவாகச்செய்ய, நாமே சந்தர்ப்பமேற்படுத்திக் கொடுத்தவர்களாவோம். மேலும் அவர்கள் சாத்வீக அடிப்படையிலேயே சட்டமறுப்பு செய்யப்போவதாகச் சொல்லிவருகிறார்கள். இது ஜனநாயகத்துக்குட்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு விசேஷ பயிற்சி

### பிரதமரின் அவசர கட்டளை

இலங்கை இராணுவத்தின் சகலபிரிவுகளுக்கும்பிரதமர்பண்டாரநாயகா ஒருஅவசர கட்டளையை அனுப்பியிருக்கிறார் என்று தெரியவருகிறது. இக் கட்டளையின் பிரகாரம் ஜூன் மாத பிற்பகுதியிலிருந்து இலங்கை இராணுவத்தினர் அனைவரும் இலங்கையின் தென் பகுதிக்கு அழைத்துச்செல்லப்பட்டு விசேஷ பயிற்சி அளிக்கப்படுவார்கள்.

தமிழ் அரசுக் கட்சியினர் ஆகஸ்டில் நடத்தப்போகிற சட்ட மறுப்புப் போராட்டத்தைப் பொலீஸாரோடுசேர்ந்து சமாளிப்பதற்காக இராணுவத்தினருக்கு தக்க பயிற்சியளித்து தயாராய்வைத்திருக்கும்படி இராணுவத் தலைவர்களுக்கு பிரதமர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

ஜனத்திரளைக் கட்டுப்படுத்துவது எப்படி? குழப்பங்களைத் தவிர்ப்பது எப்படி? அரசாங்க காரியாலயங்களைப் பாதுகாப்பது எப்படி? சட்ட மறுப்புத் தொண்டர்களைக் கலவரமின்றிக் கலைப்பது எப்படி? கண்ணீர்ப்புகை பிரயோகிப்பது எப்படி? இப்படியான சேவைகளில், பலவித பொலீஸ் பயிற்சிகள் இராணுவத்தினருக்கு அளிக்கப்படுமாம்.

பயிற்சி முடிந்ததும் இராணுவத்தினர் ஆகஸ்ட் முதல் வாரத்தில் தமிழ் பகுதிகளில் முகாமிடுவர் என்று நம்பப்படுகிறது.

அத்தோடு, பொலீஸ் இலாகாவைச்சேர்ந்த உயர்தர அதிகாரிகள் பலருக்கு ஜூன் மாதத்திலிருந்து எவ்வித லீவும் வழங்கப்படமாட்டாது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளாராம்.

## புதிய ரூபாய் நோட்டுகளும் சிங்கள மயம்

இலங்கையில் புதிதாகப் புழக்கத்துக்கு வரவிருக்கும் ரூபாய் நோட்டுகளிலும் சிங்கள மொழியின் ஆதிக்கமே தலை காட்டும் என்று சுதந்திரனுக்கு நம்பகமான செய்தி கிடைத்திருக்கிறது.

புதிதாக வெளியிடப்பட்டுத் தற்போது புழக்கத்திலுள்ள 85 சதம், 35 சதம், 10 சதம், 4 சதம் ஆன நால்வகை முத்திரைகளிலும் இலங்கை என்று குட்டி எழுத்தில் மட்டும் தமிழில் குறித்துவிட்டு ஏனையவற்றையெல்லாம் சிங்களத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் போட்டிருப்பது தெரிந்ததே.

அதேபோலப் புதிதாக வெளியிடப்படவிருக்கும் ரூபாய் நோட்டுகளிலும் சிங்கள மொழிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று தெரிகிறது. எங்காவது ஒரு மூலையில் தெரிந்தும் தெரியாமலும் இருக்கும்வகையில் இலங்கை என்று மட்டும் தமிழில் போட உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அறியக்கிடக்கிறது.

ரூபாய் நோட்டுகளின் பெறுமதி மற்றும் விபரங்கள் யாவும் சிங்களத்தில் 'பளிச்' சென்று தெரியக்கூடியவகையில் போடப்படுமாம்.

இலங்கை மத்திய வங்கியிலிருந்து கிடைத்த தகவல்படி ரூபா 1-00, 2-00, 5-00, 10-00, 50-00, 100-00 நோட்டுகள் அனைத்தும் தற்போது புழக்கத்தில் இருப்பவற்றிற்குப் பதிலாக உபயோகத்துக்குவரப் போதுமான அளவில் விரைவில் அச்சிட்டு வெளியிடப்படும் என்று தெரியவருகிறது.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வாளோடு முன்தோன்றி மூத்த தமிழ்க்குடி வந்த மூதின் மகளிர்

## மகன் போர்க்களத்திலிருந்து திரும்பியதால் குலப்பெருமை போயிற்றே என்று பதறி அழுத தாய்

## காளைகள் காதற் களத்தில் இன்றேல் போர்க்களத்தில் என்று பதிலிறுக்கும் பண்பு

சங்க காலத் தமிழர் வாழ்வின் கண்களாகக் காதலும், வீரமும் விளங்கின. அவர்கள் வாழ்வு முழுதுமே காதல் மணங் கமழ்ந்தது. வீரம் புகழ் பாடியது. "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். "விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும் தன் நாளை எடுத்து" என்பதே அவர்களுடைய வீரவாழ்வுக்குச் சால்புடைச் சான்றாக நிற்கிறது.

காதல் இருபாலார்க்கும் உரியது. இருபாலாரும் காதல்கொள்ளலாம். இருபாலரும் இருந்தாற்றான் காதல்கொள்ளவும் முடியும்! சங்ககால மங்கையர் காதல் வாழ்வே துய்த்தனர். அவர்களுடைய அகவாழ்வே களவாகவும், கற்பாகவுந்தான் இருந்தது.

### "மூதின் மகளிர்"

தண்டமிழ்ப் பெண்டிர் ஒற்றைக் கண்ணராக மட்டும் இருக்கவில்லை. இரு கண்களும் பெற்றிருந்தனர். காதலைப்போலவே வீரத்தையும் கண்ணுகக்கொண்டிருந்தனர். காதல் எப்படி இயற்கையாகவே அவர்களுடைய உள்ளத்தில் ஊடுருவி இருந்ததோ, அதுபோலவே வீரமும் உளத்தில் விரவியிருந்தது. "அடல்வேல் ஆடவர்க்கன்றியும் அவ்வில், மடவரன் மகளிர்க்கும் மறம் மிகுத்தன்று" என்றதற்கு இலக்கணமும் அமைத்தார்கள். இத்தகைய வீரமகளிரைத்தான் 'மூதின் மகளிர்' என்று புலவர்கள் போற்றிப் புகழ்கிறார்கள்.

### உள்ளத்திண்மையே வீரம்

தமிழர் வாழ்வின் புறத்துறைவைப்பாக இருக்கும் புறநானூற்றில் பல மூதின் மகளிரைச் சந்திக்கிறோம். அவர்கள் வீங்கிய தோளுடனும், ஓங்கிய வாளுடனும், தாங்கிய வேலுடனும் செருமுகம் சென்று ஒருமுகமாய்ப் போரிட்டு, மாறுகொண்டவர்களைக் கூறுகொண்டவர்கள் அல்லர். உளத் திண்மையினால் வீரர்களாய் விளங்குகிறார்கள். உளத்திண்மை தானே உண்மையான வீரம்? "பரியது கூர்ங்கோட்டது. ஆயினும் யானை வெரூஉம் புலி தாக்குறின்" "உரமொருவற்கு உள்ள வெறுக்கை" என்று வள்ளுவரும் உளத்திண்மையையே உண்மை வீரமாகக் கொண்டிருத்தல் காண்க.

### புறமுதுகிட்ட செய்தி: கலக்கம்

இதோ ஒரு தாயைப் பார்க்கிறோம். அவள் ஆவலோடு வீட்டு வாயலில் நின்றுகொண்டிருக்கிறாள். அவ்வழியே போர் வீரர்கள் போந்தார்கள். என் மகன் வரவில்லையா? என்று ஆவலுடன் அவர்களிடம் கேட்கிறாள். யாது காரணத்தாலோ "உன் மகன் தோற்றுப் புறமுதுகிட்டான்" என்று அவர்கள் அறைகிறார்கள்.

"தோற்றான்" என்று சாற்றியிருந்தாற் கூட அவள் கோபப்பட மாட்டாள். வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு ஒன்றே என்பது அந்த மறக்குடி மகளுக்குத் தெரியும். ஆனால், "புறமுதுகிட்டான்" என்பதைக் கேட்டதும் அவள் அனலானாள்.

### புகழுடம்பு கண்டு மகிழ்ச்சி

"அவன் புறமிட்டிருப்பானேயானால், என் மார்பகத்தை அறுத்தெறிவேன்" என்று அவர்களிடம் சினந்து கூறி, வாளெடுத்துப் போர்க்களம் போனாள்; புரட்டிப்

பாக்கியசாமி

புரட்டிப் பார்த்தாள், அங்கு கிடந்த பிணங்களை. ஆ! மகிழ்ந்தாள்! அவள் மகன் அங்கே புகழுடம்புடன் இருந்தான்.

"நரம்பெழுந் துலறிய
நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின்
முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன்
என்று பலர் கூற
மண்டமர்க் குடைந்தனன்
ஆயின்உண்ட என்ஆகம்
அறுத்திடுவென் யானெனச்
சினைஇக்கொண்ட வாளொடு
படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள்
சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கைகாணூஉ
ஈன்ற ஞான்றினும்
பெரிது உவந்தனளே"

### வாடுமுலை சுரந்தது

இதோ மற்றொரு தாய் இவளும் மகனைப் பார்க்கப் போர்க்களம் போந்தவள்தான். இவள் மகனும் போர்க்களத்திற்றான் கிடந்தான். அவனைப் பார்த்ததும் அவளுடைய வாடுமுலை ஊறிச்சுரந்ததாம்.

"வருபடை போழ்ந்து
வாய்பட விலங்கி
இடைப்படை யழுவத்துச்
சிதைந்துவே றாகிய
சிறப்புடை யாளன்
மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை
தாய்க்கே"

என்றிதனைப் புறத்தில் ஔவையார் அழகாக அறைந்திருக்கிறார்.

"ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே" என்பதை உணர்த்தவும், உளத்துண்டான அம்மகிழ்ச்சி உடலிலும் ஊடுருவியதாலும், "வாடுமுலை யூறிச்சுரந்தவ" என்றாரென்றும், 'ஊறியது என்னுமல்' "ஊறிச் சுரந்தன' என்றமையால் மகிழ்ச்சி மிகமீதுற்றதென்றுங் கொள்க. சிதைந்து வேறாகியவனைக் கண்டல்ல, சிதைந்து வேறாகிய சிறப்புடையாளன் மாண்புகண்டு அத்துணை மகிழ்ச்சி அடைந்திருக்கிறாள். "தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்றார் பெருநாவலர். அவள் மகன் பொன்றாப் புகழடைந்ததால், அத்துணை மகிழ்ச்சியடைந்தாளென்க.

### ஆனந்தக் கண்ணீர்

இதோ, இன்னொரு தாய், இவளுடைய மகனும் போர்க்களந்தான் போயிருந்தான் அவனுடன் சென்று திரும்பியவர்கள், அவன் யானையை, எதிர்த்து இறந்துபட்டான், என்றார்கள். அது கேட்டு விண்ணீர்த்துளியினும் விஞ்சிய கண்ணீர்த் துளிகளை உதிர்த்தாள், பெற்ற மகன் வெற்றிவீரனாய் உற்ற புகழெய்தியதில் அவளுக்கு அவ்வளவு மகிழ்ச்சி!

"மீனுண் கொக்கின் தூவி
யன்ன
வால் நரைக் கூந்தல்
முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டனன்
என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே
கண்ணீர்
நோன்கழை துயல்வரும்
வெதிரத்து
வான்பெயத் தூங்கிய
சிதரினும் பலவே"
—புறநானூறு

### முதுமையில் வீரம்

இங்கே நாம் பார்த்த மூன்று தாய்களும் வயது முதிர்ந்தவர்கள். ஒருவர்க்கு நரம்புகள் தளர்ந்திருக்கின்றன. மற்றொருவர்க்கு வாடுமுலை, இன்னொருவர்க்கு கொக்கின் சிறகுபோல் தலை நரைத்திருக்கிறது. இதை உன்னிக் கவனிக்கும் பொழுது, இளமையிற் காதல் கண் ஒளி வீசி, முதுமையில் வீரக் கண் ஒளி வீசுமோ என்ற கருத்து எழத்தான் செய்கிறது. இவர்களை முதுமையாளர் என்று எப்படி இயம்ப முடியும்? வீரம் என்பது உருவத்திலும், பருவத்திலும்இல்லை, உளத்திண்மையிற்றான் இருக்கிறதென்று முன்பே மொழிந்திருக்கிறோம். ஆகவேதான், இவர்களை உருவத்திலும் பருவத்திலும் இவர்கள் முதுமையாளராக இருந்தாலும், மூதின் மகளிரெனப் புலவர்கள் போற்றினார்கள்போலும்.

### காதல்களம் இன்றேல் போர்க்களம்

இங்கே இன்னொரு தாயைப் பார்ப்போம். இவளும் வாயிலில் நின்றுகொண்டுதானிருக்கிறாள். அப்பொழுது அங்கொரு இளம் பெண் வருகிறாள். அவள் தன் காதலனைத் தேடி வந்திருக்கிறாள். அவன், அந்தத் தாயின் மகன் 'நின்மகன் யாண்டுளனோ?' என்று தாயிடம் அவள் வினவுகிறாள், சிறிது நாணத்துடன். "அவன் எங்கே இருப்பான் என்று எனக்குத் தெரியாது! ஆனால், அவன்........உன்னிடம் வரவில்லையா? அப்படியானால் அவன் போர்க்களத்திற்றான் இருப்பான்" என்று அத்தாய் குமிழ்ச்சிரிப்புடன் குறும்பாகக் கூறுகிறாள். காதல் களத்தில் காளை இல்லாவிட்டால், போர்க்களத்திற்றானே இருப்பான்!"

"சிற்றில் நற்றூண்பற்றி
நின்மகன் யாண்டுளனோ
என வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினும் அறியேன்
ஓரும்
புலி சேர்ந்து போகிய கல்லளை
போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ
போர்க்களத்தானே"

என்பது புறத்தில் காவற்பெண்டின் கூற்று.

### சிறுவனையும் அனுப்பிய தாய்

எல்லாத் தாய்மாரையும் மிஞ்சுகிறாள். இன்னொரு தாய் தந்தையையும் கொழுநனையும் இழந்த இவள் மகனையும் போர்க்களத்திற்குப் போவென்று அனுப்புகிறாள்:

"கெடுக சிந்தை கடிதிவள்
துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேனாள் உற்ற செருவிற்
கிவள்தன்னை
யானை யெறிந்து களத்
தொழிந்தனனே
நெருநல் உற்ற செருவிற்
கிவள் கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுப்
பட்டனனே இன்றும்
செருப்பறைகேட்டு விருப்புற்று
மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது
விரித்துடீஇ
பாறுமயிர்க் குடுமி எண்ணெய்
நீவி
ஒரு மகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்
கென விடுமே"

இதைப் படிக்கும் பொழுது உண்மையிலேயே நமது சிந்தை கெடுகிறது. ஒரு பெண்ணுக்கு இளமையில் தந்தையும், மங்கைப் பருவத்தில் கணவனும் முதுமையில் குழந்தையுந்தான் ஆதாரமாக இருக்கிறார்கள். இத்தாயோ முதல் நாள் தந்தையை இழந்தாள்; மறு நாள் கணவனை இழந்தாள்; இன்று மகனையும் அழைத்துப் போர்க்களத்துக்கு அனுப்புகிறாள். அந்த மகனும் எப்படிப்பட்டவன்? இதற்கு முன் போர்க்களத்திற்குப் போனவன் அல்லன்; போரும் வயதுடையவனும் அல்லன், தாயே வேலெடுத்துத் தருகிறாள். உடை உடுத்தி விடுகிறாள்; தலைவாரி விடுகிறாள், என்றால், இவற்றிலிருந்தே அவன் எவ்வளவு இளையவன் என்பதை நாமே நன்குணரலாம். இவற்றையெல்லாம் விடக் கொடுமையானது, இதுதான், அவள் ஒரு மகனை அல்லது இல்லோள். முன்வரிகள் சிந்தையைக் கெடுக்கின்றன. இவ்வரியோ உளத்தை உலியாகப் பிளக்கிறது.

இத்தாயின் செயலை வீரம் என்பதா, வெறி என்பதா? வீரம் மிகுந்தால் வெறிதானே மிஞ்சும்! புலவரும் விருப்புற்று மயங்கி, என்றுதான் கூறுகிறார். இம்மயக்கத்தினாற்றான் முதலில் செய்வதறியாது வேல் கைக் கொடுக்கிறாள். பிறகு தான் இப்படியா போர்க்களம் அனுப்புவது என்றெண்ணி வெளிது விரித்துடீஇ பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவிச் செருமுகம் நோக்கிச் செல்

(6-ம் பக்கம் பார்க்க)


தமிழ்
சிரேஷ்ட பரீட்சை
கடந்த பரீட்சையின்
வினா விடைகள்:

| | |
|---|---|
| தமிழ் மொழி | ரூ. 3-00 |
| சைவ சமயம் | ரூ. 3-00 |
| ஆங்கிலம் | ரூ. 3-00 |
| எண் கணிதம் | ரூ. 3-00 |
| ஆங்கிலக் கட்டுரைகள் | ரூ. 3-00 |
| தமிழ்க் கட்டுரைகள் | ரூ. 3-00 |

ஆங்கிலப் பரீட்சைக்கு வினா-விடைகள், குறிப்புகள் எல்லாப் பாடங்களிலும் கிடைக்கும்.
★ ஆங்கிலம்
★ ஹிந்தி
பேச, வாசிக்க, எழுத தபாலில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.
சாந்தி கல்லூரி,
தபால் பெட்டி: 1398,
கொழும்பு.



வாடிக்கைக்காரர்களுக்கோர் அறிவித்தல்

7-4-57 முதல் எங்கள் டெலிபோன் இலக்கம் 281 என மாற்றப்பட்டுள்ள தென்பதை அறியத் தருகிறோம்.

சிறந்த வேலைப்பாடும், உத்தரவாதமுமுள்ள அழகிய பவுண், வைர ஆபரணங்களுக்கு, எந்நேரமும் எங்களிடம் விஜயஞ் செய்யுங்கள். அழகை அழகு செய்ய, அருள் பெருக, அன்பு வளர, அழைக்கிறோம.

எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்,
தங்க மாளிகை
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திரளும் தொண்டர் படை கண்டு மிரளும் அரசாங்கம்!

## 3000க்கு மேற்பட்ட தேசபக்தர்கள் முன்னணியில் சேர முன் வந்தனர்

## பிரதமரும் பிற அமைச்சரும் நடத்திய அவசர அந்தரங்க மந்திராலோசனை

### என்ன நடவடிக்கை மேற்கொள்ளலாமென்று பல மணித்தியாலங்கள் பதைபதைப்பு

[ சுதந்திரன் நிருபர்கள் தந்த விவரத் திரட்டு ]

ஈழத் தமிழகமெங்கணும் வீரத் தொண்டர்களைத் திரட்டும் வேலை வெற்றிகரமாக ஆரம்பித்து நடந்து வருகிறது. ஆயிரமாயிரம் வாலிபர்கள் அணிவகுத்து தமிழரசின் அஹிம்சைப் படையில் நான் முந்தி, நீ முந்தி என்று தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுகின்றனராம். தொண்டு கிழவர்களும் தொண்டர் படையில் இடம் பிடித்து விடத் துடிதுடித்து நிற்கின்றனராம். பல்கலைக் கற்ற பெண்கள் திலகங்கள் எங்களையும் சேருங்கள், தங்கத் தமிழ் நாட்டின் பங்கங்களையும் சிங்கத் தமிழர் கூட்டத்திலே என்று வீராவேசத்தோடு விண்ணப்பித்து நிற்கின்றனராம். இந்தச் செய்திகளைக் கேட்கும் போது எந்தத் தமிழனுடைய மார்புதான் மலையென வீங்காது? எந்தத் தமிழனுடைய இதயந்தான் இறும்பூதெய்தாது? எந்தத் தமிழனுடைய தமிழ் இரத்தந்தான் ஈழத் தமிழகத்தின் புதிய சரித்திரத்தை எழுத இதோ தயார் என்று பீறிட்டுப் பாயாது?

### மூதூர் தொகுதி ஆசீர்வாதம்

தமிழரசுத் தொண்டர் படை இயக்கம் முந்தி முந்தி மூதூர்த் தொகுதியிலேதான் முகிழ்ந்திருக்கிறது. கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின் தமிழரசுக் கட்சியினர் முதன் முறையாக மூதூர்த் தொகுதிக்கு கடந்த வாரந்தான் சென்றனர். அங்கு அவர்கள் கண்ட ஆர்வமும், ஆதரவும், கிடைத்த வரவேற்பும் அவர்களைப் பிரமிப்படையச் செய்தனவாம். திருகோணமலையிலிருந்து தமிழரசுத் தலைவர்கள் மூதூருக்கு கடல் மார்க்கமாகச் சென்றனர். துறையிலே மூதூர் வாழ் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் திரளாகக் கூடிநின்று தலைவர்களை மலர்மாலை சூட்டி வரவேற்று, ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். தலைவர்கள் பல கிராமங்களுக்குச் சென்றபோது அங்குள்ள மக்கள் தாராளமாகப் பண உதவி செய்து ஆகஸ்ட் போராட்டத்தை ஆசீர்வதித்தனர்.

### தமிழைப் பலியிட முஸ்லிம்கள் தயாராயில்லை

அர்ச் அந்தோனியார் பாடசாலையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இக் கூட்டத்திற்கு மூதூரைச் சேர்ந்த ஜனுப் எம். ஐ. எம். மஷூர் தலைமை தாங்கினார். அவர் பேசுகையில், இலங்கைவாழ் முஸ்லிம்களின் மதபாஷை அரபி என்றும், தாய்ப்பாஷை தமிழேதான் என்றும், தாய்ப்பாஷையைப் பலியிட்டு அந்நிய சிங்கள பாஷையை ஏற்றுக்கொள்ள மூதூரில் உள்ள முஸ்லிம் மக்கள் ஒரு போதும் முன்வரமாட்டார்கள் என்றும் கூறினார். தமிழ் மொழியின் பாதுகாப்புக்காகவும், தமிழ் பிரதேசங்களிலிருந்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்காகவும் முஸ்லிம்கள் மத வேறுபாடுகளை மறந்து இனவழி ஒற்றுமைப் பட்டு; இந்துக்களுடனும், கிறிஸ்தவர்களுடனும் தோளோடு தோள் நின்று போராட வேண்டும் என்றும் ஜனுப் மஷூர் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் தமிழரசுத் தலைவர்களுடன் ஜனுப்களான எம். மல்லாறு, டி. பதுர்தீன், திருவாளர்கள் வ. அ. இராசரத்தினம், எம். மாணிக்கம், செல்வி செல்வமணி வடிவேல் ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர்.

### சமஷ்டி அரசியல்

மூதூர்த் தொகுதியில் தோப்பூர் என்பது ஒரு பரிபூரண முஸ்லிம் கிராமம். இக்கிராமத்திலும் தமிழரசுக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் திரண்டு ஆதரவு கொடுத்தனர். கூட்டத்திற்கு தோப்பூர் கிராமக் கமிட்டித் தலைவர் ஜனுப் முகம்மது அலன் தலைமை வகித்துப் பேசுகையில் தமிழரசுக் கட்சியினரோடு முஸ்லிம்கள் முற்றாக ஒத்துழைத்து இந்த நாட்டில் ஒரு சமஷ்டி அரசியல் திட்டம் உருவாக ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

### தொண்டர் படையில் முஸ்லிம்கள்

மூதூரைத் தவிர மேன்காமம், கிளிவெட்டி போன்ற மற்றும் பல கிராமங்களிலும் வரவேற்புகளும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தமிழரசுத் தொண்டர் படையில் தத்தம் பெயர்களைப் பதிவு செய்துகொண்டனர். இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் முஸ்லிம் இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### "25000 பேரே போதும்"

மூதூருக்கு அடுத்தபடியாக வவுனியாவில் படை திரட்டல் வேலைகள் நடைபெற்றன. இது சம்பந்தமாக கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா ஜெயரத்தினம் தந்தவனத்தில் நடைபெற்ற ஒரு பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் பேசுகையில் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் நியாயமானவை என்பதைத் தமிழ் மக்கள் அனைவரும் அறிவார்கள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலந்தான் அவர்களுக்கு விடுதலையும் விமோசனமும் உண்டு என்பதையும் அவர்கள் இப்போது உணர்ந்து விட்டார்கள். இலங்கையில் 25 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் ஒரு விகிதத்தினர் அதாவது 25 ஆயிரம் பேர் தமிழரசுக் கட்சியின் தொண்டர் படையில் சேர்ந்து ஆகஸ்ட் போராட்டத்தில் ஈடுபட்டால் போதுமானது. 25 ஆயிரம் தொண்டர்களைச் சிறையிலடைக்கும்படி நாம் திரு பண்டாரநாயகாவை நிர்ப்பந்திப்போம். அப்போது தெரியவரும் திரு பண்டாரநாயகாவிற்கு தமிழ் பேசும் மக்களை அவர் தமது ஆட்சியைச் செலுத்த முடியாது என்ற பச்சை உண்மை. ஒரு நொடிப்பொழுதில் நமது கோரிக்கைகள் நிறைவேறுவதை நாம் காணலாம்"

### வாலிபர்களும் வயோதிபரும்

திருவாளர்கள் வன்னியசிங்கம், அமிர்தலிங்கம், இராசதுரை ஆகியவர்களோடு வி. சிற்றம்பலம், எம். எஸ். கந்தையா, திருமதி அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினர். பெருந்திரளான வாலிபர்களும், வயோதிபர்களும் தொண்டர் படையில ஆர்வத்தோடு தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டனர்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணப் பட்டணம் ஒரே உணர்ச்சிப்பிரவாகத்தில் மூழ்கிக்கிடந்தது. "இன்று அறப்போருக்குப் படை திரட்டும் இன்ப நாள்" என்ற உணர்ச்சி யாழ்ப்பாண வாலிபர்களின் வீர உள்ளங்களிலே குமுறியது.

### வானம் வழங்கிய இன்ப வாரிதி

வெற்றி தரும் நல்ல காரியங்களை ஆரம்பிக்கும்போது தேவர்கள் ஆசீர்வதிப்பார்களாம். அவர்களுடைய கருணையின் அறிகுறி மழையாகப் பொழியுமாம். இப்படி ஒரு ஐதிகம் உண்டு. கடந்த ஆகஸ்டில் திருமலை யாத்திரைக் கோஷ்டியினர் கிழக்கிலும் வடக்கிலுமிருந்து திருமலையினுள் பிரவேசித்த போதும் வான் இருண்டு மழை மலர்கள் தூவப்பட்டதை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அதைப் போலவே யாழ்ப்பாண நகரில் தமிழரசுக் கட்சியார் படை திரட்டுகிறார்கள் என்றதும், அதுகாலவரை அங்கு நிலவிய கொடிய வரட்சி நீங்கி முதன்முறையாக வானம் வாரி வழங்கியது இன்ப வாரிதியை.

### கொட்டும் மழையில் மட்டற்ற ஆர்வம்

பொழிந்த மழையையும் பொருட்படுத்தாமல் உறுதி வாய்ந்த உள்ளத்தினரான பல்லாயிரம் வாலிபர்கள் கூடிநின்றனர். ஒருவர்கூட கொட்டும் மழையைக் கண்டு பின்வாங்கவில்லை. தொண்டர் படை சேர்க்கும் வைபவம் மாலை 5-00 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தும் பிற்பகல் 3-00 மணியிலிருந்தே பெருங்கூட்டம் ஜாம் ஜாம் என்று கூடிவிட்டது யாழ்ப்பாண முற்றவெளியில். இந்த சந்தர்ப்பத்தில் தலைவர்கள் முற்றவெளிக்கு வந்து சேர்ந்தனர்.

மழை பலமாகப் பெய்துகொண்டிருந்ததால் பொதுக்

(9-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### ஒரே சங்கம் அமைக்கலாம்

அரசினர் இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தினர் முஸ்லிம் கலாச்சாரம் என்ற போர்வையில், முஸ்லிம் கலாச்சாரத்தைப் பாதிக்கக்கூடியதும், தமிழர் முஸ்லிம் ஒற்றுமையைக் குலைக்கக்கூடியதுமான பிரிவினையை அதாவது முஸ்லிம் பெரும்பான்மைப் பாடசாலை, தமிழர் பெரும்பான்மைப் பாடசாலை என்ற பிரிவினையை நகர்ப்புறத்துப் பாடசாலைகளில் தலைமை ஆசிரியப் பதவி பெற எண்ணிக் கோரியதால், அரசினர் தமிழ் ஆசிரியர் சங்கத்தினர், பாஷை அடிப்படையில் பாடசாலைப் பிரிவுகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் நடைபெற முடியாவிடில், பெரும்பான்மைப் பிரிவைவிடத் தனிப் பிரிவே வகுப்பு ஒற்றுமையையும் கலாச்சாரத்தையும் வளர்க்கும் பிரிவாகும் என்று கோரினர். இதில் தவறொன்றும் இல்லை. 7—4—57 சுதந்திரனில் திரு க. மாணிக்கவாசகர் கூறிய பாஷை அடிப்படைப் பிரிவு, ஒரே சங்கம் என்ற யோசனையை யாம் வரவேற்கிறோம். அரசினர் இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தினர் மேற்படி நண்பர் கூறியபடி பாஷை அடிப்படையில் பாடசாலைகளைப் பிரித்தல், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஒரே சேவை வரிசைக்கிரம அட்டவணைப்படி பாஷை அடிப்படையிலேயே நடைபெறல் ஆகியவற்றிற்குச் சம்மதிப்பரேல், அரசினர் தமிழ் ஆசிரிய சங்கத்தினர் அவர்களுடன் சேர்ந்து, அவர்களில் ஒருவரின் தலைமையின் கீழ் ஒரே சங்கமமைக்கப் பூரண சம்மதம் என்பதை உறுதியுடன் கூறுகிறேன்.

— ஆ. க. சுப்பிரமணியம்
(பொதுத் தனதிகாரி)
அ. இ. அ. பா. த. ஆ. சங்கம்,
கொழும்பு 8—4—57.

### வாரப் பதிப்பு

சுதந்திரன் பத்திரிகையைத் தினப் பதிப்பாக்கும்படி சில நேயர்கள் கடிதமெழுதியுள்ளதைப் படித்தேன். ஒருபுறம் எனக்கும் இவ்வெண்ணம்தான். சுதந்திரன் வாசகர்கள் அனைவருக்கும் அப்படியேதான். இதில் எவரும் சந்தேகப்படுவதற்கில்லை காரணம், சுதந்திரன் அந்த வகையில் அமைந்திருப்பதுதான்.

சுதந்திரன் மேலுள்ள பற்று நம்மை அப்படி ஆட்டிப்படைத்தாலும், தினப் பதிப்பாக்குவது சற்றுச் சிந்திக்க வேண்டிய காரியம். சுதந்திரனில் மற்றும் தினப் பத்திரிகைகளில் வெளியாவதுபோல கொலை, விபத்து, கொள்ளை, வாகன இடையூறு, மந்திரிமார்களின் தான்தோன்றித்தனமான பேச்சுக்கள் இவை போன்ற இடம் நிரப்பும் செய்திகள் தலைகாட்டுவதில்லை. அடுத்ததாகச் சுதந்திரனில் வெளியாகும் அந்தரங்கச் செய்திகளைத் தினமும் தேடிப்பிடிப்பது சாத்தியமான காரியமாகஇருக்கமாட்டாது. எனவே சுதந்திரனை வாரப் பதிப்பாகவே தொடர்ந்து வெளியிடுவது நல்லது. வேண்டுமானால் "கேட்டுப் பாருங்கள்" பகுதியைத் தொடர்ந்து வெளியிடுவதுடன், சினிமாப் பகுதியையும் சற்றுத் திறன்பட அமைப்பது விரும்பத்தக்கதாகும்.

[illegible]
15—4—57.


## இலங்கைக் கலைக் கழகம்

### தமிழ் நாடகக் குழு

#### தமிழ் நாடக சங்கங்களுக்குப் பண உதவி

தமிழ் நாடகக் கலையை வளர்க்கும் நோக்கமாக, இலங்கையிலுள்ள நாடகச் சங்கங்களுக்குப் பணஉதவி செய்வதென இலங்கைக் கலைக் கழகத்தின் தமிழ் நாடகக் குழு தீர்மானித்துள்ளது. பண உதவி பெற விரும்பும் நாடகச் சங்கத்தினர் 20—5—57க்கு முன்னர்,

தலைவர்,
தமிழ் நாடகக் குழு
இலங்கைக் கலைக் கழகம்,
106, கிரீன் பாத்,
கொழும்பு-7.

என்ற முகவரிக்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும். அவ்விண்ணப்பத்தோடு சங்க ஆட்சித் திட்டத்தின் பிரதியொன்றினைச் சேர்த்து அனுப்பி, மேல் வருவன பற்றிய விபரங்களையும் எழுதுதல் வேண்டும்.

1. சங்கத்தின் பெயரும், முகவரியும்
2. சங்கம் நிறுவப்பட்ட திகதி.
3. சங்கத்தின இப்போதைய அலுவலாளர்களின் பெயர்களும் முகவரிகளும்
4. 1957ம், 58ம் ஆண்டில் சங்கம் நடிக்கவிருக்கும் நாடகங்களின் திரல்
5. சங்கம் இதுவரை அரங்கேற்றிய நாடகங்களைப்பற்றிய விபரங்கள்
6. அரங்கேற்றிய நாடகங்கள்பற்றிய மதிப்புரைகள்.

சு. வித்தியானந்தன்,
தலைவர்,
தமிழ் நாடகக் குழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்-பருத்தித்துறை பஸ் கம்பெனியின் கண்மூடித்தனமான போக்கு

## பாதை உரிமையைப் பாதுகாக்க சிங்கள முதலாளியிடம் தஞ்சம்

## அடிமைத் தனத்துக்கும் சுரண்டலுக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் அத்திவாரம்

### மக்களிடையே வளர்ந்துவரும் அதிருப்தியும் எதிர்ப்பும்

(சுதந்திரன் நிருபர்)

சிங்களக் குடியேற்றத்தின்மூலம் தமிழ்ப் பிரதேசங்கள் பறிபோய்க்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பஸ் கம்பனியொன்று சிங்கள முதலாளியொருவரின் காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடித் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பஸ் கம்பெனி இந்தவிதமான அடிமைத்தனத்தில் தன்னை ஆழ்த்திக் கொள்ளுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லையென்றும் இதனால் யாழ்ப்பாணத்து மக்களிடையே பெரும் அதிருப்தி நிலவி வருவதாகவும் பிரஸ்தாப பஸ் கம்பெனியின் நடவடிக்கைக்கு அவர்கள் தீவிர எதிர்ப்புக்காட்டி வருவதாகவும் நமது யாழ்ப்பாண நிருபர் அறிவிக்கிறார்.

கே. பி. எல். பெரேரா அன் சன்ஸ் கம்பெனியாருடைய பஸ் வண்டிகளை பருத்தித்துறை பஸ் கம்பெனி தனது பாதைகளில் ஓடவைப்பதற்கு வருந்தி அழைத்து வந்திருப்பதன் மூலம் தென்னிலங்கையிலுள்ள பஸ் தொழிலாளர் பலருக்கும் இங்கு சுலபமாக வேலை கிடைக்கச் செய்திருக்கிறது. பருத்தித்துறை பஸ் கம்பெனிக்குப் பாடுபட்டு உழைத்த தொழிலாளர் பலர் இங்கு வேலை கிடைக்காமல் தெருவில் திரியும் அவல நிலையில் இருக்கும்போது, அக்கம்பெனியில் சிங்களத் தொழிலாளருக்குத் தாராளமாக வேலை கிடைத்திருப்பது விபரீதத்துக்கு வித்திடுவதுபோன்றதாகும். அதுமட்டுமல்ல கே. பி. எல். பெரேரா கம்பெனி பஸ் வண்டிகள்மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு சிறு பகுதிதானும் பருத்தித்துறை பஸ் கம்பெனிக்கில்லையாம். பருத்தித்துறை கம்பெனியின் பெயரினால் சிங்கள முதலாளி தனது வண்டிகளை ஓடவிட்டு-தனது சிங்களத் தொழிலாளரை வேலைக்கமர்த்தி-லாபம் முழுவதையும் தனதாக்கிக் கொள்ள இடமளிக்கப்பட்டிருக்கிறதாம். இந்த விபரீதமெல்லாவற்றுக்கும் அத்திவாரம் போட்ட பெருமை இப்போது இலங்கைக்கு அப்பாலுள்ள அரசியற் பிரமுகர் ஒருவருக்கே சொந்தமானதென்று விஷயமறிந்த வட்டாரங்கள் சொல்லிக்கொள்ளுகின்றன.

### விபரீத வழி

மாஜி உதவி அமைச்சர் ஜவான் டி. தசநாயக்கா தனது இன்ஸ்சூரன்ஸ் கம்பெனிக்குச் சொந்தமான பஸ் வண்டிகளை இரவோடிரவாக எடுத்துச் சென்றதால் சேவையைச் சரிவர நடத்தப் போதிய பஸ் வண்டிகளின்றித் திண்டாடிய பருத்தித்துறை பஸ் கம்பெனி அந்த அரசியற் பிரமுகரிடம் விமோசனத்துக்கு வழி கேட்டதாம். அவர் காட்டிய வழியிற் சென்று கே. பி. எல். பெரேரா கம்பெனியிடம் சரண்புகவே திரு பெரேரா பருத்தித்துறைக் கம்பெனி நிர்வாகிகளின் தோளில் ஏறியிருந்து செவியைக் கடிக்குமளவுக்குத் திட்டம் தயாரித்திருக்கிறார். யார் குடி கெட்டாலும் நீ குடி மிளகு சாற்றை என்பதுபோல் தங்கள் ''பாதை அனுமதி உரிமை''யை மட்டும் (ரூட் லைசன்ஸ்) காப்பாற்றினும் போதுமென்று பருத்தித்துறை முதலாளிகள் தெண்டனிடவே அவர் தனது பஸ் வண்டிகளையும் தொழிலாளரையும் உடனடியாக இங்கு அனுப்பி வைத்தாராம். பிரயாணிகளுக்கு விளங்க முடியாத பாஷை பேசும் தொழிலாளர் தம் சொந்த வீடுபோல இப்போது பருத்தித்துறைக் கம்பெனி வீதிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். என்னதானிருப்பினும் யாழ்ப்பாணத்து வருமானம் தெற்கே செல்வதற்குப் புதிய வழியொன்று பிறந்துவிட்டதல்லவா?

### மௌனமா?

ஓரளவு நிர்வாகத் தொடர்பை மட்டும் திரு தசநாயகா வைத்துக்கொண்டபோது சீறிச் சினந்த யாழ்ப்பாணம் சிங்கள முதலாளியொருவர் முற்றிலும் ஆதிக்கம் செலுத்த முற்பட்டிருப்பது கண்டு மௌனம் சாதிக்கிறதா? இந்தக் கேள்விக்கு சரியான விடை இன்னும் சிறிதுகாலத்தில் நிச்சயம் தெரிய வரலாம் என்பதைத் தற்போதைய நிலை அறிவுறுத்துவதாக நமது யாழ்ப்பாண நிருபர் மேலும் தெரிவிக்கிறார்.

# யாழ்ப்பாணத்து இசைவிழா

## எதிர்ப்புக்கிடையே சிறப்பாக 5 நாட்கள் நடந்தேறியது

(சுதந்திரன் நிருபர்)

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் 6 வது ஆண்டு இசைவிழா இம்மாதம் 17,18,19,20,21 ந் திகதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சென்ற ஆண்டுகளை விட இந்த ஆண்டு விழா பல வகைகளிலும் சிறப்பாக அமைந்திருந்ததும் ரஸிகர்கள் கூட்டம் தினமும் அதிகரித்துக்கொண்டிருந்ததும் யாழ்ப்பாணத்தில் இசைக் கலை வளர்ச்சியில் மக்கள் எவ்வளவு உற்சாகம் காட்டிவருகிறார்களென்பதை எடுத்துக் காட்டின.

சமீபத்தில் நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் சங்கீத வித்வச் சபையைச் சேர்ந்த வித்துவான்கள் சிலர் ''சூழ்நிலைகாரணமாக'' மேற்படி ரசிக ரஞ்சன சபா இசை விழாவில் தாங்கள் கலந்து கொள்ளமுடியாமலிருக்கிறதென அண்மையில் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டிருந்தனர். விழாவில் கலந்துகொள்ள விருந்த சில வித்துவான்களிடம் அவர்களது வீடுகளுக்குச் சென்று தம் பகிஷ்கரிப்புக்கோஷ்டியில் சேருமாறு கடைசி நேரத்திற்கூட வற்புறுத்தி வந்தனர். இருந்தும், இந்த பகிஷ்கரிப்பு முயற்சி பெரும்பாலும் பலனளிக்கவில்லையென்பதை ஐந்து தினங்களும் அமோக ஆதரவுடன் நடந்தேறிய விழா நிகழ்ச்சிகள் மூலம் காணத்தக்கதாயிருந்தது. விழாவிற் கலந்து கொள்ள முடியாதென்று துண்டுப் பிரசுரத்திற் கையொப்பமிட்டவர்களிற் சில கலைஞர்கள் கூட விழாவிற் கலந்துகொண்டு இன்னிசை விருந்தளித்தார்கள். இது ஏனைய எதிர்ப்பாளருக்கெல்லாம் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டதென்றே சொல்லலாம். அது மட்டுமல்ல, இம்முறை இலங்கை வானொலியின் ஒத்துழைப்பினால் இசைவிழா நிகழ்ச்சிகளை ரஸிகர்கள் தத்தம் வீடுகளில் வானொலிப் பெட்டிகள் மூலம் கேட்டனுபவிக்கக்கூடிய வாய்ப்புங் கிடைத்தது.

எந்த நல்ல காரியத்துக்கும் எதிர்ப்புண்டாவது சாதாரண ஒரு வழக்கமாகி விட்டது. அந்த வழக்கத்துக்கமைய ரஸிக ரஞ்சன சபா இசை விழாவின் போது ஒரு கோஷ்டியினர் கிளப்பிய எதிர்ப்பு கடைசியில் அவர்களுக்கே வியப்புண்டாகும் வகையில் விழாவைச் சோபிக்கச் செய்துவிட்டது.

# ''இராஜராஜசோழனை'' மேடையேற்றியது இலங்கை மக்களின் ஆர்வமே

## மலேயா தரும் ஆதரவைப் பொறுத்து 'சத்தியசோதனை'யும் 'தளபதிசிதம்பரனு'ரும் அரங்கேற்றப்படவிருக்கின்றன

### நாடகக் குழுவுடன் மலேயா சென்றுள்ள நடிகர் டி. கே. சண்முகம் தரும் தகவல்

உங்கள் அடுத்த நாடகம் என்ன?' ரசிகர்கள் பலரும் ஆவலோடு கேட்கும் கேள்வி இது. அது சமூகமா, சரித்திரமா, புராணமா அல்லது வேறேதேனும் புதுமைச் சித்திரமா என்றெல்லாம் கேட்கிறார்கள். எங்கள் புதிய நாடக அரங்கேற்றத்தை அவர்கள் விரைவாக எதிர்பார்க்கிறார்களென்பது புரிகிறது.

1950ம் ஆண்டில் எங்கள் நிரந்தர நாடகக் குழுவுக்கு 'மூடுவிழா' நடத்திய செய்தி ரசிகர்கள் பலருக்கு மறந்தே போய்விட்டது. மூடு விழாவுக்குப் பிறகு எங்கள் நாடக வளர்ச்சியில் ஏற்பட்ட வேகம்தான் இதற்குக் காரணம். இன்றைய 'ஸ்பெஷல்' நாடகச் சூழ்நிலையில்தான் இலங்கை, பம்பாய், கல்கத்தா, டில்லி முதலிய பிறமொழி வழங்கும் பிரதேசங்களை நாங்கள் காணவும், எங்கள் கலைநிகழ்ச்சிகளை அங்கே நடத்திக்காட்டவும் முடிந்தது. சென்ற ஏழாண்டுகளில் ஆண்டுக்கொரு புதிய நாடகத்தை அரங்கேற்றி வெற்றி கண்டிருக்கிறோம். இன்ஸ்பெக்டர், மனைவி, இரத்த பாசம், கள்வனின் காதலி, தமிழ்ச் செல்வம், இராஜ ராஜ சோழன் எல்லாம் நிரந்தரக் குழுவைக் கலைத்த பிறகு அரங்கேறிய நாடகங்கள் அல்லவா? இவற்றில் மூன்று நாடகங்கள் வெ[illegible]ளித் திரையிலும் வந்[illegible]டன. திரைப் படங்களில் நடித்துக்கொண்டே இந்த நாடகங்களையும் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறோம்.

### இராஜ ராஜசோழன் ஏகாதிபத்தியம்

இராஜராஜசோழனுக்குப் பிறகு இந்த வேகத்தில் சிறிது தடை ஏற்பட்டிருக்கிறது. திருமணவிழாக்களில் நடிப்பதற்கென்று தனியாகத் தயாரித்த 'வாழ்வில் இன்பம்' ஒன்றைத் தவிர வேறு புதிய நாடகம் எதையும் அரங்கேற்ற இயலவில்லை. சென்ற இரண்டாண்டுகளாக இராஜராஜ சோழன் எங்கள் மேடையைக் கைப்பற்றிக்கொண்டு ஏகாதிபத்தியம் செலுத்தி வருகிறான். ஒவ்வொரு தடவையும் ரசிகர்கள் அவனைப் புதிதாகப் பார்ப்பதுபோல் பார்த்து மகிழ்கிறார்கள். எனவே புதிய நாடக அரங்கேற்றத்திற்கு வழக்கமாக இருந்துவந்த கால அளவு விரிந்துகொண்டே போய் விட்டது. எங்கள் பொறுப்பும் அதிகமாகிவிட்டது.

### ''சத்திய சோதனை''யும் ''தளபதி சிதம்பரனா''ரும்

ஒன்றைவிட மற்றொன்று சிறப்பாகவோ அல்லது புதுமையாகவோ இதுவரையில் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன. இனி அடுத்தபடியாக அரங்கே[illegible] [illegible]ருது பிரகாசித்துக்கொண்டிருக்கும் இராஜராஜசோழனின் ஒளியில் மங்கி மறைந்துவிடக் கூடாதே என்பது எங்கள் கவலை. காலம் கடத்திக் கொண்டே போவதன் காரணம் அதுதான்.

இரண்டு புதிய நாடகங்கள் இப்போது தயாராக இருக்கின்றன. ஒன்று சமுதாய நாடகம், மற்றொன்று வரலாற்று நாடகம். சமுதாய நாடகத்தின் பெயர் 'சத்திய சோதனை' வரலாற்று நாடகத்தின் பெயர் 'தளபதி சிதம்பரனார்'. சத்திய சோதனை வங்காளிக் கதையின் தழுவல். தளபதி சிதம்பரனார் நமது கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி.யின் வரலாற்று ஓவியம். இவற்றில் முதலாவது அரங்கேற இருப்பது சத்திய சோதனை. இது நமது பழைய பண்பாட்டின் அடிப்படையிலே எழுந்த ஒரு சிறந்த நாடகம்.

### நாம் துணை நடிகர்கள்

இராஜராஜ சோழனின் தஞ்சைப் பெரிய கோயிலின் சிறப்பை நூலறிவு பெறுத பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அறிவுறுத்தியது போல், சத்தியசோதனையின் மூலம் மாமல்லபுரத்தின் சிற்பச் சிறப்புக்களை அறிவுறுத்த முயன்றுவருகிறோம். இராஜராஜ சோழனில் நான் கதாநாயகனை நடிக்கவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த நாடகத்திலும் அப்படித்தான். தம்பி பகவதியும் நானும் 'சத்திய சோதனை'யில் துணை நடிகர்களாகவே தோன்றப் போகிறோம்.

### பெரியார்கள் பலரைச் சந்திக்கலாம்

தளபதி சிதம்பரனாரை மிகச் சிறந்த முறையில் அரங்கேற்ற வேண்டுமென்பது என் ஆசை. சிதம்பரனாரின் வரலாறு பாரத நாட்டின் தேசிய வரலாற்றுடன் பின்னிக் கிடப்பதால் அது சுதந்திர வரலாறாகவும் அமையும். மகாகவி பாரதியார், தமிழ்ச் சங்கம் கண்ட பாண்டித்துரைத் தேவர், தேசிய வீரர் சுப்பிரமணிய சிவா முதலிய மறைந்த பல பெரியார்களைச் சிதம்பரனார் நாடகத்திலே நீங்கள் சந்திக்கப்போகிறீர்கள். இப்பெரியார்களுடன் நெருங்கிப் பழகிய நண்பர்கள் பலர் இன்றும் நம்மிடையே வாழ்கிறார்கள். அவர்கள் 'தளபதி சிதம்பர'னாரை மேடையிலே காணும்போது ஓரளவாவது ஒப்புக்கொள்ள வேண்டுமல்லவா?

இப்போது எங்கள் குழுவில் நடித்துவரும் நடிக நடிகையரை மட்டும் வைத்துக்கொண்டு தளபதி சிதம்பரனாரைச் சிறப்பாக நடித்துவிட முடியாது. ஒவ்வொரு வேடத்திற்கும் தகுதிவாய்ந்தவராகப் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்வாறு புதிய நடிக நடிகையரைச் சேர்த்துக்கொள்வதில் வேறு சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. இவற்றைப் பற்றியெல்லாம் சிந்தித்து வருகிறோம். நான் எண்ணுகிறபடியெல்லாம் இனிது நடைபெறுமானால் 'தளபதி சிதம்பர'னாருக்குத் தமிழகம் மகத்தான வரவேற்பளிக்கும் என்பதில் ஐயமில்லை.

வ. உ. சி. பாத்திரத்தை நானே தாங்கவேண்டும்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தம் பற்றி மூண்டுள்ள புதிய யுத்தம் !

## இந்தியா, இலங்கை, வியன்னு வழக்குகள் தரும் விளக்கம்

## சினிமாவைச் சுட்டிக் காட்டும் கொழும்பு றீஜென்ட் வீதி—விக்டோரியாப் பூங்கா போஷக வாலிபர்களும் வாலைகளும்

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று நடக்கப் போகிறது ஆகஸ்டில். அது அரசியல் துறையில் சத்திய யுத்தம் சமூகத்துறையில் இப்பொழுதே நடந்து கொண்டிருக்கிறது மிகப் பெரிய வாய் யுத்தமொன்று. வெளியூர்களில் இருக்கும் பலருக்கு அது தெரியாமலிருக்கலாம் கொழும்பு பெரியாஸ்பத்திரி, தாதிகள் விடுதியாகியவற்றை அடுத்துள்ள றீஜென்ட் வீதியை மாலை நேரங்களில் வலம் வரும் 'பாஷனபிள்' வாலிபர்களுக்கும் கொழும்பு விக்டோரியாப் பூங்காவைப் பிரதட்ஷை செய்யும் இளம் காதல் ஜோடிகளுக்கும் அனேகமாக அது நன்கு தெரிந்த விஷயம். தெரிவது மட்டுமென்ன? யுத்த பீதியால் அவர்களுக்குக் குலை நடுக்கமல்லவா எடுக்கிறது. ஆம், அதுதான் முத்தம்பற்றிய சமூக சாத்விக யுத்தம்!

முத்தமிடுவது தவறு-இல்லையா? ஒழுக்கக் குறைவானதா? தண்டனைக்குரியதா? என்ற சர்ச்சை வாலிபர்கள், வாலைகள் பலரின் மனதைச் சமீபகாலமாகக் குடைய ஆரம்பித்திருக்கிறது. இந்த முத்தமிடும் சமாச்சாரம் நீதிமன்றங்களுக்குப் போக ஆரம்பித்ததோடு விஷயத்திலே விறுவிறுப்பும் அதை விவாதிப்பதிலே ஒரு சுறுசுறுப்பும் ஏற்பட்டு வருகிறது.

### வட இந்திய வழக்கு

அண்மையில் வட இந்தியாவில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் ஒரு வாலிபன் இளம் யுவதி ஒருத்தியைப் பூங்கா ஒன்றிலே முத்தமிட்டதாகப் பொலீஸார் அவன்மீதுவழக்குத் தொடர்ந்திருந்தனர்.

விசாரணையின்போது வாலிபன் தான் மங்கையை முத்தமிட்டதை ஒப்புக்கொண்டான் மங்கை தான் அதற்கு விருப்பம் தெரிவித்ததாகவும் அனுசரணையாக நடந்துகொண்டதாகவும் கூறினள், இருவரும் இஷ்டப்பட்டு முத்தம் பரிமாறியதில் குற்றம் காண முடியாமலிருந்தது.

வழக்கைத் தொடர்ந்திருந்த பொலீஸ் ஜவான் எழுத்து பகிரங்க இடமான பூங்காவிலே முத்தம் பரிமாறப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி எதிரிக்குத் தக்க தண்டனை விதிக்குமாறு நீதிபதியை வேண்டினர். நீதிபதி அதை நிதானமாகக் கேட்டுவிட்டு எதிரியை விடுதலை செய்து தீர்ப்புக் கூறினர்.

### தண்டிக்க நியாயமில்லை

"பூங்கா பொதுஇடமாயிருந்தாலும் அங்கும் மறைவிடம் இருக்குமல்லவா! இந்த வழக்குக்கு சாட்சியங்கள் எதுவுமில்லாததிலிருந்தே எதிரிகள் மறைவான இடத்திலேயே முத்தம் பரிமாறிக்கொண்டனர் என்பது புலனுகிறது. பொலீஸ் ஜவான் மறைவிடத்தில் நடந்த நிகழ்ச்சியைக் கண்டு கொண்டார் என்ற ஒரு காரணத்துக்காக எதிரிகள் ஒழுங்கு தவறி நடந்தார்கள் என்றுகொள்வதற்கோ, அவர்களைத் தண்டிப்பதற்கோ நியாயமில்லை" என்றவாறு நீதிபதி தமது தீர்ப்பில் கூறினராம்.

இதைக்கொண்டு பார்த்தால் பொது இடங்களில் பகிரங்கமாக முத்தமிடுவது தான் ஒழுக்கக் குறைவானதும் தண்டனைக்குரியதுமான செயல் என்பது புலனுகிறது.

### வியன்னு வழக்கு

சமீபத்தில் வியன்னு தேசத்து சுப்ரீம் கோட்டிலும் இத்தகைய வழக்கு ஒன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வாலிபர் ஒருவர் யுவதி ஒருத்தியைப் பலமாக முத்தமிட்டு கீழ்த்தரமாகத் தாக்கியதாக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

பிரஸ்தாப வழக்கை விசாரித்த நீதிபதி முத்தமிடுவது, அது இலேசாகச் செய்யப்பட்டாலும் சரி பலமாகச் செய்யப்பட்டாலும் சரி அது கீழ்த்தரமான தாக்குதலாகாது என்றுகூறி அதைத் தள்ளுபடி செய்தார்.

### முத்தமிடுவது சமுதாயப் பண்பு

நீதிபதி தமது தீர்ப்பில் மேலும் சொன்னர்: "முத்தமிடுவது அதைப்பொறுத்த மட்டில் ஆண் பெண் உறவு சம்பந்தமான ஒரு குற்றமாக ஒருபோதும் ஆகமாட்டாது இந்த நாட்டுப் பழக்க வழக்கங்கள் முத்தமிடுவதை ஒரு சமுதாயப் பண்பாக ஆக்கியிருக்கின்றன. இதனுல்,முத்தமிடுவதைக் குற்றமென்றே அல்லது ஒழுக்கக் குறைவான செயலென்றே கொள்வதற்கில்லை.

"முத்தமிடுவது உரியகண்ணியத்தோடும் ஒழுங்கான முறையிலும் பண்போடு நடைபெறுவிட்டாலும் கூட அதை ஆண் பெண் உறவு சம்பந்தப்பட்ட ஒரு குற்றமாக எடுத்துக்கொள்ள முடியாது"

இவ்வாறு நீதிபதி தமது தீர்ப்பில் அழுத்தந் திருத்தமாகக் கூறினராம்.

### பாரதப் பண்பு

உள்ளத்திலே ஊறும் அன்பை உரியவரிடத்தில் பொழிந்து உணர்ச்சித் தாகத்தைத் தணித்துக் கொள்ள முத்தத்தைப் பெரும்பாலும் கவியாக்கிக் கொள்வது பாரதப் பண்பு. மறைவிடத்தில் மனமொத்தவர்கள் (அடுத்தவருக்கு உபத்திரவமில்லாமல்) முத்தம் பரிமாறிக்கொள்வதில் தவறில்லை என்று தீர்ப்பளித்த இந்திய நீதிபதி பாரதப் பண்பைப் புறக்கணிக்கவில்லை. குற்றஞ் சாட்டப்பட்ட காதலர்களும் அப்பண்புக்குப் புறமாக நடந்து கொள்ளவில்லை.

### முத்தம்: ஓர் ஆயுதம்

வியன்னுவில் எந்த முத்தம் சமுதாய நடைமுறைப் பண்புகளில் ஒன்ருகக் கருதிவரப்படுகிறதோ அதே முத்தத்தை அந்த நாட்டு வாலிபனெருவன் ஆயுதமாகப் பாவித்து அப்பாவிப் பெண்ணெருத்தியைத் 'தாக்கினன்.' முத்தத்தை அவன் தனதுமுரணன நோக்கத்துக்குப்பயன்படுத்திவந்தபோதிலும் முத்தத்தை முத்தமாகவே கருதி அதை விட்டு வைக்க வேண்டிய இடத்திலே விட்டுவைத்து நீதிபதி தீர்ப்பளித்தார். எனவே வியன்னுவில் முத்தமிட்டவன் சட்டத்தின்முன் தப்பிப் பிழைத்தான். அவன் பாக்கியசாலி. இந்தியாவிலும் அப்படியே. மனதுக்குப்பிடித்தமங்கைநல்லாளை, மறைவிடத்திலே, முத்தமிட்ட இளைஞன் தப்பிப் பிழைத்தான். அவன் கொடுத்துவைத்தவன் ஆனுல் இலங்கையிலே......?

வத்துகாமத்தைச் [illegible] வாலிபன் ஒருவன் [illegible] யிலே ஓரணங்கை முத்தமிட்ட குற்றத்துக்காகச் சுளையாக ரூபா 75|—அபராதம் கட்டினன்.

கல்பகலா என்ற தோட்டத்தைச் சேர்ந்த மெய்யப்பன் என்ற வாலிபத் தொழிலாளி 19 வயதுப் பெண்ணெருத்தியைப் பலவந்தமாகக் கட்டித்தழுவி முத்தமிட்டதாகக் குற்றஞ் சாட்டி அவன் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மெய்யப்பன் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தமது கட்சிக்கார எதிரி அடக்கமுடியாத ஆசைக்குப் பலியாகிவிட்டார் என்ற ரீதியில் பேசி விடுதலை கோரினர்.

நீதிபதி, எதிரி மெய்யப்பன் செய்தது குற்றமெனக் கண்டு அவருக்கு ரூபா 75-00 அபராதம் விதித்தார். அந்த ரூபா 75-00-ல் ரூபா 25-00 பெண்ணைக் கட்டிப் பிடித்ததற்கு; ரூபா 25-00 உடம்போடு அணைத்ததற்கு; மிகுதிரூபா 25-00ம் அவளை முத்தமிட்டதற்கு.

### விரகதாபம்

இந்தத் தீர்ப்புக் கிடைத்ததும், "அட. இருபத்தைந்து ரூபா பெறுமானத்துக்கு அவளைக் கட்டிப் பிடித்து, இருபத்தைந்து ரூபா பெறுமளவில் அணைத்து, இருபத்தைந்து ரூபாவுக்கு அடக்கமாக முத்தமிட்ட நான் இரட்டிப் பங்கு எல்லாவற்றையுமே செய்திருக்கக்கூடாதா? மொத்தம் ரூபா 150-00க்கு இரட்டிப்பு இன்பமனுபவித்திருக்கலாமே" என்று ஒருவேளை அவன் எண்ணியிருக்கலாம். அதுவல்ல நமது பிரச்னை.

### சாதக பாதகம்

முத்தமிடுவது ஒழுக்கக் குறைவானசெயலா?'இல்லை' என்கிறது வியன்னு. 'ஆம்' என்கிறது இலங்கை. தமிழகத்தின் பதிலும் பெரும்பாலும் இப்படியே. இதை எதிர்ப்பவர்களும் பலர் இருக்கிறார்கள். எனவே இருதரப்பாரின் காரணங்களையும் இங்கு கவனிப்பது அவசியமாகும்.

### எதிர்ப்பாளர் கருத்து

"எதிர்ப்பாலார் சட்டப்படியும்சம்பிரதாயப்படியும் ஒருவருக்கொருவர் அந்நியராயிருக்கும் நிலையில் முத்தம் பரிமாறுவதால் கணப்பொழுது இன்பம் கிடைக்கலாம். ஆனுல் அந்த இன்பத்தோடு உள்ளத்திலே விஷமும் கலந்தே செல்கிறது.

"முத்தம் முறையாகக் கொடுக்கப்படுமானுல் அதன் சக்தி ஊடல் கூடல் இவை இரண்டினுடையதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமானதாயிருக்கும் என்பது இத்துறைவல்லாரின் கருத்து. எதிர்ப்பாலார் மனமொத்து முத்தம் பரிமாறும்போது உடல்கள் இரண்டும் ஒரளவு சேர்ந்து கொள்கின்றன. ஸ்பரிச மின்சக்தி எங்கும் டாவிப் பரந்து உடலைக் கிளுகிளுக்கச் செய்கிறது. மேலும் நெஞ்சோடு நெஞ்சு கலக்கிறது, இதனுல் உணர்வு ஒடுங்குகிறது. இந்த நிலை இல்லறத்தில் ஈடுபட்டவர்களுக்கு அதைநல்லறமாக்க வேண்டற்பாலதும் வரவேற்கத் தக்கதுமாகும். ஆனுல் இல்லறத்தில் இல்லாதவர்கள் இந்த நிலையை எய்துவரேல் அவர்கள் மனதில் குழப்பமும் ஒழுக்கத்தில் விழுப்பமும் ஏற்படுவதோடல்லாமல் அவர்கள் வாழ்க்கையும் பாழாகும்"—இது முத்தத்துக்கு எதிரானவர்கள் கருத்து.

### ஆதரவாளர் கருத்து

ஆதரவாளர்கள் கருத்துப்படி—"முத்தமிட ஆசை அரும்புவது அனைவருக்கும் இயற்கை.

இதற்கு மூண்டு கொடுத்தாற் போல பத்திரிகை விளம்பரங்கள், சினிமாப் படங்கள் முதலானவை அமைந்து விடுகின்றன. முத்தமிடும் காட்சி இல்லாத ஆங்கிலப் படமே இன்று இல்லை யெனலாம். அதிலும் அரை குறையாடை அணிந்த நிலையில் முத்தம் பரிமாறப் படும் காட்சிகள் ஏராளம். தமிழ், சிங்கள, ஹிந்திப் படங்களில் நேரடி முத்தங்கள் இல்லாவிட்டாலும் கன்னத்தோடு கன்னத்தைப் பதித்தல், மூக்கு நுனியை மட்டும் மயிரிழைத் தூரத்தில் வைத்துக் கொண்டு கண்ணொடு கண்ணினை நோக்கொக்கிக் காதல் மொழி பேசல், கட்டிப் பிடித்தல், கூந்தலைக் கோதல், அங்கங்களைப் பதமாக வருடல், மடி மீது

(12-ம் பக்கம் பார்க்க)

## "இராஜராஜசோழனை" மேடையேற்றியது இலங்கை மக்களின் ஆர்வமே

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று ரசிக நண்பர்கள் எதிர்பார்க்கிறார்கள். இன்றைய நிலையில் அந்த ஆற்றல் எனக்கு இல்லை. பாடத்தை நெட்டுருப் போடும் சக்தி குறைந்து விட்டது. பாடத்தைப் பற்றிய நினைவு நெஞ்சிலிருந்தால் நடிப்பு சரியாக இராது. எனவே சிதம்பரனுர் வேடத்தைத் தாங்க மற்றெருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நாடகம் சிறப்பாக நடைபெறுவதற்கு உள்ளேயிருந்து செய்யவேண்டிய வேலைகள் பல உள்ளன. அவற்றைக் கவனித்துக் கொள்ளவேண்டிய பொறுப்பும் என்னைச் சேர்வதால் நான் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடிப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது.

### இலங்கைதந்த ஊக்கம்

அண்மையில் ஏப்ரல் 14ம் நாள் நாங்கள் மலேயா, சிங்கப்பூருக்குப் பயணமாகிறோம். மூன்று மாதங்கள் அங்கு எங்கள் கலை நிகழ்ச்சிகளின்மூலம் கடல் கடந்து வாழும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களை மகிழ்வித்து விட்டுத் திரும்புவோம். சென்னையிலிருந்து சிங்கைக்குப் போய்ச் சேர எட்டு நாட்கள் கப்பலிலேயே இருக்கவேண்டுமெனத் தெரிகிறது. இந்த எட்டு நாட்களும் அலைகடல் மத்தியிலே எங்களுக்குப் பூரணமான ஓய்வும் அமைதியும் கிடைக்குமென நம்புகிறேன். நடைபெறவிருக்கும் புதிய நாடகங்களைப் பற்றிச் சிந்திக்கவும், அவற்றை வெற்றிகரமாக உருவாக்கவும் இந்த ஓய்வைப் பயன்படுத்திக் கொள்வேன்.

மலேயாப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பியதும் 'சத்திய சோதனை' விரைவாக அரங்கேறும். முன்பு இலங்கை மக்கள் எங்களுக்களித்த ஊக்கமும் உற்சாகமும்தான் வந்தவுடன் இராஜராஜசோழனை மேடையேற்ற உதவியது. அதே போன்று மலேயா மக்கள் காட்டும் அன்பும், ஆதரவும் இவ்விரு புதிய நாடகங்களையும் விரைவில் அரங்கேற்றத் துணைபுரியுமென நம்புகிறேன்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில்காலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு. கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சந்திர மண்டலத்துக்குச் செல்வது மனிதனின் வெறும் விஞ்ஞானக் கற்பனை

## அவன் மண்ணுலகத்துக்கு உரியவன்; இங்கு நிலைமையைச் சீர்செய்ய விஞ்ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும்

## மின்னணுக் குழாய் தந்த அற்புதங்கள்!

### இன்னும் 10 ஆண்டுகளில் உலகெங்கும் டெலிவிஷன்

விஞ்ஞானம், கல்வி, சமயம், பொருளாதாரம் முதலிய அறிவுத் துறைகளில் முதல் தரமான சர்வதேச நிபுணரை அழைத்து "அறிவின் எல்லைகள்" என்ற தலைப்பில் "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" ரேடியோ ஸ்தாபனம் தொடர்பாகப் பேச வைத்து அவற்றை அகில உலகுக்கும் ஒலி பரப்பி வருவது தெரிந்ததே.

மேற்படி தொடர் ஒலிபரப்பு நிகழ்ச்சியில் "வருங்காலத்தில் செய்திப் போக்கு வரத்து" என்ற தலைப்பில் "மின்னணு விஞ்ஞானத்தின் தந்தை"யென்று அனைவராலும் அழைக்கப்படும் திரு. லீ டி பாரஸ்ட் ஆற்றிய சொற்பொழிவு இங்கே தரப்படுகிறது.

—ஆசிரியர்

இந்த இருபதாம் நூற்றாண்டின் முன் பாதியில் செய்திப் போக்கு வரத்துத் துறைகளில் தொழில் நுட்ப முன்னேற்றமும் விஞ்ஞான முன்னேற்றமும் பிரமாதமாக ஏற்பட்டுள்ளன. மனிதனுடைய சக்திகளுக்கும் ஆவல்களுக்கும் அருஞ் செயல்களுக்கும் தொழில் நுட்பத்தால் புதுப் புது வழிகள் பிறந்திருக்கின்றன. இவ்வழிகளிலே மனிதன் செய்து முடித்திருக்கும் அருஞ் செயல்களைப்பற்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டு விஞ்ஞானிகள் கனவிலும் கருதியிருக்க முடியாது. அதே போல் நம்முடைய மக்களும் பேரப் பிள்ளைகளும் தங்கள் காலத்தில் என்னென்ன செயல்கள் செய்து முடிப்பார்கள் என்று நாமும் இந்தக் காலத்தில் அளந்து சொல்லப் பார்ப்பது நியாயமாகாது.

ஒலிபரப்பும் வித்தை ஒரு காலத்தில் ஏதோ புதுமையாக இருந்தது. இந்த நூற்றாண்டின் முன் பாதியில் ஒலிபரப்பும் வானொலி நிலையம் முதலில் ஒன்றே ஒன்றுதான் இருந்தது. அகில உலகத்திலும் இப்போது 5,000 வானொலி நிலையங்கள் ஏற்பட்டுவிட்டன.

**மின்னணுக் குழாய்**

மின்னணுக் குழாய் (Electron Tube) நம்முடைய நவீன நாகரிகத்தை எவ்வாறு மாற்றியிருக்கிறது என்பதைதான் என் சொந்த விருப்பத்தினால் ஆர்வமாய்க் கவனித்து வந்திருக்கிறேன். இந்தக் குழாயினால் ஒரு புது யுகமே தோன்றியிருப்பது போல் பல காரியங்கள் ஏற்பட்டிருப்பதால், சார்ல்ஸ் கெட்டரிங், நோபல் பரிசு பெற்ற இஸடோர் ராபி போன்ற புகழ்வாய்ந்த விஞ்ஞானிகள் பழைய காலத்தில் சக்கரத்தைக் கண்டு பிடித்ததற்கும் அதற்கும் முற்பட்ட காலத்தில் தீயைக் கண்டு பிடித்ததுக்கும் இந்தக் குழாயைக் கண்டுபிடித்தது ஒப்பாகும் என்று கூறியுள்ளார். இவையெல்லாம் மென்மேலும் முன்னேற்றங் காணும் மனிதனின் வளர்ச்சியை விரைவுபடுத்துபவையாகும்.

**லீ டி பாரஸ்ட்**

எளிமையாகத் தோன்றும் இப்புதிய கருவியினால் என்னென்ன வளர்ச்சி என்னென்ன புரட்சியான மாறுதல்கள் நிகழும் என்று என்னால் திட்டமாய்க் கூற முடியாது என்பது திண்ணம். மூன்று "மின் வாய்கள்" (Electrode) உள்ள இந்தக் குழாயும் இதன் வழியாய்க் கண்டுபிடித்த பிறவும் உலக முழுவதிலும் பல நாடுகளையும் பல கண்டங்களையும் ஒன்றோடொன்று பிணைத்துச் செய்திப் போக்குவரத்தை எப்படிப் பரப்பியிருக்கிறது என்பதை மட்டும் இங்கு நினைவுபடுத்திக் கொள்வது போதும். இவ்வாறு செய்திப் போக்குவரத்து பரவியிருப்பதால், வேற்று மொழிகளால் ஏற்படும் பழங்காலத் தடைகள் இன்று இல்லை. மிக முக்கியமான இந்த அபிவிருத்தியோடு வானொலியின் உடன் பிறந்த கருவியாகிய டெலிவிஷனும் இப்போது தோன்றியுள்ளது; தூரத்துப் பேச்சோடு தூரத்துக் காட்சியையும் இது ஒன்று சேர்த்து விட்டது..

**10 ஆண்டுகளில் உலகெங்கும் டெலிவிஷன்**

அமெரிக்காவில் அன்றாடம் பயன்படும் டெலிவிஷன் ரிஸீவர் பெட்டிகள் ஏற்கனவே 3 கோடிக்கும் அதிகமாகியுள்ளன. இன்னும் இந்த எண்ணிக்கை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக உயர்ந்து வருகிறது. இதே போல் பிரிட்டனும், மற்றும் ஐரோப்பிய நாடுகளும், லத்தீன் அமெரிக்க நாடுகளும் அமெரிக்காவைப் பின்பற்றி வருகின்றன. அஞ்சல் நிலையங்களைத் திறமையாகத் தக்க இடம் பார்த்து அமைத்தும், அயன மண்டலத்துப் பிரதிபலிப்புகளைப் பயன்படுத்தியும் கடல் கடந்து பிற நாடுகளுக்கு டெலிவிஷன் நிகழ்ச்சிகளை 'ஒளிபரப்புவது' பத்தாண்டுகளிலும் அதற்கு முன்பேயும் நடந்துவிடும்.

**விஞ்ஞானக் கற்பனை**

பூமியை விட்டுச் சந்திரன் முதலிய வேறு கோளங்களுக்

(13-ம் பக்கம் பார்க்க)

**உரை நிகழ்த்திய ஆசிரியரைப் பற்றி.....**

லீ டி பாரஸ்ட் விஞ்ஞானத்துறையில் புதிது புதிதாய்க் கண்டுபிடிப்பதில் மாவீரர். 1906-ல் வாக்குவம் குழாயைக் கண்டு பிடித்தவர் இவரே; 'மின்னணுத்துறையின் தந்தை' என்ற பெயரை இவருக்கு பெற்றுக்கொடுத்ததுவும் அதுவே. ஒரு புதிய யுகம் தோன்றியதும் அந்தப் புதுமையினால்தான்.

லீ டி பாரஸ்ட் கண்டு பிடித்த மும்மின் வாய்க் குழாயினால், மாபெருங் கப்பல்களும் பெரிய விமானங்களும் ஆள் உதவி அதிகம் இன்றி நெடு நெடுந் தொலைவு பிரயாணம் செய்கின்றன. மூடு பனி சூழ்ந்த இரவில் வழி தெரியாமல் திண்டாடும் விமானத்தைக் கண்டு பிடித்து அதுபத்திரமாகத் தரையில் இறங்குவதற்கு உதவுகிறது 'ராடர்' சாதனம். கணக்கு நிபுணர் பலபேர் இருந்து ஆண்டுக் கணக்காகச் செய்யும் கணக்குகளையெல்லாம் சில விநாடி நேரத்தில் செய்து முடித்துவிடுகின்றன இவர் கண்டு பிடித்த கணக்குக் கருவிகள்.

டெலிபோன், ஒலி பரப்புதல், டெலிவிஷன், பேசும் சலனப் படம், ராடர் முதலிய இன்றைய மின்னணுப் புதுமைகள் பலவும் விருத்தியாவதற்கு டாக்டர் லீ டி பாரஸ்ட் கண்டுபிடித்து உரிமைப் பதிவு செய்துள்ள 300 காரியங்களே காரணமாகும். வயது 84 ஆகியும் இன்னும் நமது .... அவர் கூடத்தில் புதிய வற்றை நாடி அவர் வேலை செய்து வருவதைக் காணலாம்.

# மே 10ந் திகதி சட்ட மறுப்பு!

## உத்திரப் பிரதேசத்தில் ஆரம்பித்து ஆந்திரா, ஒரிஸா, பீஹார், பம்பாய் இராச்சியங்களுக்கு விஸ்தரிக்கப்படும்

### இந்திய சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் அறிவிப்பு

மே மாதம் 10 ந் திகதி சட்டமறுப்பு இயக்கம் உத்திரப் பிரதேசத்தில் (இந்தியா) ஆரம்பிக்கப்படுமென்றும் அதைத் தொடர்ந்து ஆந்திரா ஒரிஸா, பீஹார், பம்பாய் ஆகிய இராச்சியங்களில் இவ்வியக்கம் நடைபெறுமென்றும் சோஷலிஸ்ட் கட்சித்தலைவர் டாக்டர் எம். மனோகர் லோஹியா அறிவித்தார்.

திரு லோஹியா ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் போது மேற்படி தகவலை வெளியிட்டார். அவர் தமது பேச்சில் மேலும் சொன்னதாவது:

"ஐந்து லட்சம் தொண்டர்கள் சத்தியாக்கிரகப் பணிக்கு முன்வருவார்களேயானால் மகத்தான சட்ட மறுப்புச் செய்து இன்று இங்குள்ள ஆட்சிக் கொடுமைகளை ஒழித்துக் கட்டிவிட்டு நலமான நல்லமைப்பை நமக்கென நாம் ஏற்படுத்திக்கொள்ளலாம். சத்தியாக்கிரகம் ஜனநாயகத்துக்கு முரணான செயலல்ல. ஆட்சிமுறை நடைமுறையில் தவறும் போது அதைத் திருத்தி நல்ல முறையில் அமைப்பதற்கு சத்தியாக்கிரக வழியே சிறந்ததாகும்.

"இன்றைய ஆட்சி முறையின் இடம் பெற்றுள்ள பாரபட்சக் கொள்கை, தான் தோன்றித் தனம் மற்றும் ஊழல்கள் வேருன்றி நிலைபெறுவதற்கு முன்னதாகவே சட்டமறுப்பு செய்ய வேண்டியே அதன் தேதியை மே 10 என்று அதிவிரைவிலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தையும் மற்றும் சில இராச்சிய அரசாங்கங்களையும் முறியடிக்க அடுத்த தேர்தல்வரை அதாவது இன்னும் நாலைந்து வருஷம் வரை காத்திருக்க முடியாது. இன்றைய நிலையில் மக்களுடைய எண்ணத்திலே மாற்றம் ஏற்படுவதற்கு சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்துவது மிக மிக அவசியமாகும். மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைப் பலாத்காரமற்ற முறையில் அமைதியாகப் பெறுவதற்கு சட்ட மறுப்பைத் தவிரச் சிறந்த வழி வேறெதுவும் இடையாது."

திரு லோஹியா தொடர்ந்து பேசுகையில் உத்திரப் பிரதேசத்தில் சுமார் 80 லட்சம் பேர் வேலையற்று இருப்பதாகவும் அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அவதியுறும்பலர் இருப்பதாகவும் ... தங்களுக்கெல்லாம் வேண்டிய நிவாரண ஏற்பாடுகளைச் செய்யாததற்காக அரசாங்கத்தைக் கண்டித்தார்.

# மேற்கு பாகிஸ்தானிலும் விரைவில் சட்ட மறுப்பு

## 3000 தொண்டர்கள் தயார்

## தேசீய சபைக்கு முன்னால்

### பலத்த ஆர்ப்பாட்டம்; கொடும்பாவி எரிப்பு

பாகிஸ்தானில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற அரசியல் கட்சியான முஸ்லிம் லீக் தனது கருத்தை நிலைநாட்டவும் மேற்குப் பாகிஸ்தானுக்கு சுயாட்சி பெறவும் வேண்டி நாடெங்கும் விரைவில் சட்டமறுப்புச் செய்யத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

சட்டமறுப்புச் செய்வதாலேயே நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்காது மேற்குப் பாகிஸ்தானின் சுயநிர்ணய உரிமையைப் பெறலாம் என்று முஸ்லிம் லீக் உறுதியாக நம்புகிறது.

முஸ்லிம் லீக்கின் இணைச் செயலாளரான ஜனுப் மரிவாலி அலாவி தரும் தகவல்படி இதுவரை 3000 தொண்டர்கள் சட்ட மறுப்புச் செய்ய முன்வந்துள்ளதாகத் தெரிகிறது.

இதற்கிடையில், கடந்த 23ந் திகதி தேசிய சபையில் கூட்டுத் தொகுதி முறையை ஆதரித்துப் பிரதமர் சுஹ்ரவர்த்தி பேசுகையில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாகச் சபைக்கு வெளியே முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த பலர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். திரு சுஹ்ரவர்த்தியின் கொடும்பாவி ஒன்றையும் அவர்கள் கொளுத்தினார்கள்.

மேற்குப் பாகிஸ்தானில் கூட்டுத் தொகுதி முறையைப் புகுத்துவது பாகிஸ்தான் லட்சியத்துக்கே முரணானது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

# வானோடு முன்தோன்றி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கென விடுகிறாள். இத்தகைய தாயை மூதின் மகளிராதல் தகுமோ? என்று புலவர் புகழ்வதைமறுப் பாரும் உளரோ?

'தகடூர் யாத்திரை'யி லுள்ள யாப்பொன்றில் ஒரு தாய் வருகிறாள். அவளுடைய மகன் களஞ்சென்று களிறெறிந்து திரும்புகிறான். அவனைப் பார்த்ததும் அத்தாய் அழுகிறாள், மகிழ்ச்சியால் அல்ல. மனத்துயரினாற் றான். "எம் குடிசெய்யாப் பெரும் பழியை நீசெய்தாய் எம் குடியில் போர்க்களம் சென்றவர் திரும்பியதில்லை. நீயோ திரும்பி வந்து பெரும் பழி தந்தாய்; உனைப் பெற்ற என் வயிற்றிலேயே அடித்து நான் உயிர் விடுவேன்" என்று அத் தாய் அலற்றுகிறாள்.

"வதுவல் வயிறே
வதுவல் வயிறே
நோவேன் அத்தை
நின்சன் றனனே
பொருந்தா மன்னர்
அருஞ்சமம் முருக்கி
அக்களத் தொழிதல்
செல்லாய் மிக்க
புகர் முகக் குஞ்சரம்
எறிந்து எஃகம்
அதன் முகத் தொழிய
நீ போந் தனையே அதனால்
எம்மில் செய்யாப்
பெரும்பழி செய்த
கல்லாக் காளையை
யீன்றவயிறே"

"சாதாரண யானை, உன் வேற் பட்டு, களம்பட்டது. நீயோ, எம் குடிப் பெருமையை அறியாமல் திரும்பி வந்தாயே" என்றழுகிறாள். தாய் குடிப் பெருமை அறியாததால் 'கல்லாக்காளை' என்கிறாள். இத்தாயின் வீரத்திற்கு ஈடிணையே இல்லையெனலாம்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வானோடுமுன் தோன்றி மூத்த குடியாகிய தமிழ்க்குடியில் மூதின் மகளிரை இன்னும் பார்த்துக் கொண்டே செல்லலாம். "ஈன்று புறந் தருதல் என் தலைக் கடனே, ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என்று பொன் முடியார் என்ற தாய் இலக்கணமே செய்தாளென்றால், மூதின் மகளிர் சிறப்புக்கு வேறென்ன விளம்ப வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிக் கவிகளால் இன எழுச்சிக்கு வித்திட்ட

## மகாகவி அல்லாமா இக்பால்

## பட்டம்பதவிகளில் மனதைப் பறி கொடாது தொண்டுக்காகவே வாழ்ந்த உருதுப் புலவர் திலகம்

## இன்று வாழவில்லை; ஆனால் அன்னாரின் கவிகள் வாழ்கின்றன; புகழ் வளர்கிறது.

கவிஞர்கள் மற்றெல்லோரையும்விட பொதுவாக உணர்ச்சி மிகுந்தவர்கள் என்பதை அனைவரும் அறிவர். கவிஞர்களில் ஒரு வகையினர் கட்டற்ற உணர்ச்சிப் பெருக்குடையோராய் இருப்பர். இவர்களை உணர்ச்சியில் திளைப்பவர்கள் என்று கூறலாம். இவர்கள் தங்கள் தனிச் சுதந்திரத்திலும், கனவுகளிலும், லட்சியங்களிலும், இன்ப துன்பங்களிலும் பெருமிதமடைவர். இவ்வகை உணர்ச்சிக் கவிஞர்கள் வரிசையில் அல்லாமா இக்பால் முன்னணியில் நிற்கிறார்.

### பிறப்பு வளர்ப்பு

1873ம் வருடம் பெப்ரவரி மாதம் 22ம் திகதி ஷேக்நூர் முகம்மது என்பவருக்கு மகனாக முகம்மது இக்பால் பிறந்தார். இக்பாலின் மூதாதையர்கள் காஷ்மீரைச் சேர்ந்தவர்கள். இக்பால் தக்க வயதடைந்ததும் புகழ் பெற்ற லாகூர் கல்லூரியொன்றில் கல்வி கற்கச் சேர்க்கப்பட்டார். அப்போது லாகூரில் பண்ணிசை பரப்பும் அரங்கங்கள் பல இருந்தன. இங்கு கவிஞர்கள் பலர் தாங்கள் உருவாக்கிய கவிதைகளை மக்கள் முன்னிலையில் பாடிக் காட்டி பொதுமக்களின் அபிமானத்தைப் பெறுவது வழக்கமாக இருந்துவந்தது. இத்தகைய அரங்குகளில் இக்பாலும் அடிக்கடி பங்குபற்றி வந்தார். ஓர் நாள் மேற்படி அரங்கில் அவர் பாடிய கவிதையொன்று பொதுஜன ஆதரவை அமோகமாகப் பெற்றுவிட்டது. அப்பாடல்:

''துன்பத்தால் உதிர்ந்த
என் கண்ணீர் துளிகள்
இறையருளால்
முத்துக்களாகப்
போற்றப்பட்டன.''

இக்பால் தாய் தந்தையரால் மிகவும் அன்புடன் வளர்க்கப்பட்டார்: ஆனால் எதிர்பாராதவிதமாக அவரது தாயார் அகாலத்திலேயே இறந்துவிட்டார். மகன் புகழுடன் வாழ வேண்டும்

### மன்னர்வாசி

என்ற ஆசையோடு காத்திருந்த அன்னை இறந்ததை யிட்டு ஆற்றொண்ணா துயரமடைந்த கவிஞர் தன் தாயை நினைத்துப் பாடுகையில்,

''அருமை அன்னையே
என்றும் வாழ்க்கை
என்னும் ஏட்டிலே
நீங்கள் பொன் ஒலியாக
விளங்குகிறீர்கள்
எனக்கு நெடுகிலும்
மதத்தைப்பற்றியும் உலக
வாழ்க்கையைப்பற்றியும்
போதித்தது அந்த ஒலியே''

என்று உருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

### மேற்கத்தியர்களுக்கு எச்சரிக்கை

லாகூரில் கல்வி கற்றுவந்த இக்பால் ஆங்கில இலக்கியத்திலும், அரபியிலும் தேர்ச்சி பெற்று பி. ஏ. பட்டம் பெற்றார். இத்தோடு இன்னும் அவர் படிப்பில் முன்னேற வேண்டுமென்ற நோக்கத்தோடு அவருக்கு உபகாரச் சம்பளமும் வளங்கப்பட்டது. இதனால் இக்பால் மேல் படிப்புக்காக 1905ம் ஆண்டில் இங்கிலாந்து சென்று கல்வி கற்ற மூன்றாண்டுகளிலும் பல விஷயங்களை மேல்நாடுகளில் கற்றுக்கொண்டு 1908ம் ஆண்டில் இந்தியாவுக்குத் திரும்பினார். அப்போது இக்பாலுக்கு வயது 35 ஆகிவிட்டது. இக்பால் ஐரோப்பாவில் தங்கியிருந்த காலத்தில் அங்கு பரவியிருந்த குறுகிய தேசப்பற்று, நாடு பிடிக்கும் ஆசை, குரோத மனப்பான்மை முதலானவற்றைக் கண்ணுற்றார். எனவே திரும்பி வருவதற்கு முன்னர், 1907-ம் வருடத்தில், மேல்நாட்டிலேயே, ''மேற்கத்தியர்களுக்கு எச்சரிக்கை'' என்ற கவிதையை எழுதி வெளியிட்டார்:-

''மேற்கே வாழ்பவர்களே, இறைவன் படைத்த இந்த உலகை, சந்தைக் கடை என்று எண்ணாதீர்கள். நீங்கள் உண்மை நாணயம் என்று கருதிப் போற்றுபவை மதிப்பிழந்துபோகும். மெல்லிய கொம்பில் கட்டப்படும் கூடு விரைவில் அழிவதைப் போல உங்கள் நாகரிகமும், தம் வாளினாலேயே தற்கொலை செய்துகொள்ளும்''

என்று கடுமையாக மேற்கத்திய நாடுகளைக் கண்டித்தார். இக்பால் இந்தியாவுக்குத் திரும்பிய சொற்ப காலத்துக்குள் எல்லாம் பதரப்பட்ட பதவிகள் [illegible] வற்றையும் உதறித் தள்ளிவிட்டு வக்கீல் தொழிலுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார் அவர். இப்போது இக்பாலுக்குப் போதிய அவகாசம் கிடைத்ததினால் ஒய்வு நேரங்களை கவிதைகள் எழுதுவதிலேயே செலவிட்டார். இத்தருணத்தில்தான் இக்பாலின் சிறந்த கருத்துக் கருவூலங்களான, ''தரானயெ மில்லி'' ''ஷா—வ-ஷாயிர்'' ''ஜிவாபே ஷிக்வா'' முதலிய கவிதைகள் வெளிவந்தன.

### சமுதாயப் பெருமை

''தரானயெ மில்லி'' என்ற கவிதையில் இஸ்லாமிய சமயத்தைப்பற்றிக் கூறுகையில்,

''சீனமும், அரேபியாவும் எம்முடையதே, உலகம் முழுவதும் எங்களுடையதுதான், ஏனென்றால் நாங்கள் முஸ்லிம்கள்'' என்று மார்தட்டிக் கூறுகிறார்.

முஸ்லிம்கள் யார்? அவர்களது பண்பும், பெருமையும் யாது? என்ற கேள்விகளை எழுப்பிவிட்டு அவற்றிற்குப் பதிலும் கூறுகிறார்.

''நாம் வாள் நிழலிலே வளர்ந்தோம்; வாள் நிழலிலே வாலிபமடைந்தோம்; இரு முனையும் கூர்மையான இளம் பிறையே எங்கள் சமூகச் சின்னம்'' என்று தெரிவிக்கின்றார்.

### டாக்டர் பட்டம்

கவிஞர் இக்பால் இலக்கியத்துறையில் ஆற்றிய சேவைக்காக 1922ம் ஆண்டில் அவருக்கு ''டாக்டர்'' பட்டம் வழங்கியது இந்திய அரசாங்கம். பின்னர் 1923ம் வருடம் இக்பாலின் பிரசித்திபெற்ற ''கிழக்கின் செய்தி'' வெளியாகியபோது கவிஞருக்கு ஐம்பது வயதாகிவிட்டது. இதனால் 1931ம் ஆண்டில் வக்கீல் தொழிலையும் விட்டுவிட்டார். ஆனாலும் அவரைப் பற்றிக்கொண்ட மூத்திரக் காய் கோளாறும், தொண்டைப்பிடிப்பும், மங்கிய பார்வையும் அவரை நடக்க முடியாமல் படுத்த படுக்கையாக்கிவிட்டது. பிரபல வைத்தியர்களெல்லாம் கவிஞரின் வியாதியைப் போக்கடித்துவிட தங்களாலியன்ற சகல சிகிச்சை முறைகளைக் கையாண்டும் எதுவும் பிரயோசனமில்லாது போயிற்று. பஞ்சாப் மாகாணத்தில் வசந்தம்போய் கோடை வந்தது. கவிஞரின் நிலைமை கவலைக்கிடமாகி விட்டது.

### மரணம்

இரவு வந்தது. நிமிடங்கள் மெதுவாக நகர்ந்துகொண்டிருந்தன. டாக்டர்கள் இனி கவிஞர் உயிரோடு இருப்பது இன்னும் சில மணி நேரமே என்று கூறிவிட்டனர். கவிஞரின் உண்மை ஊழியரான அல்லா பக்ஷ் கவிஞரின் தலைமாட்டில் இருந்துகொண்டு கண்ணீர் வடித்த வண்ணமிருந்தார். இரவு மணி மூன்று அடித்து ஓய்ந்தது. எங்கும் அமைதி நிலவியது. அப்போது இக்பாலின் வாயிலிருந்து கீழ்வரும் பாடல் மெதுவாக ஒலித்தது.

''பிரிந்த நாதம் மீண்டாலும்,
மீளாவிடினும்
ஹிஜாஸிலிருந்து மேல்காற்று
வீசினாலும், வீசாவிடினும்.
இந்த பக்கிருடைய வாழ்நாள்
முடிந்துவிட்டது.
வேறொரு அறிஞன்
தோன்றினாலும்,
தோன்றாவிடினும்
இவனது ஆயுள்
பூர்த்தியாகிவிட்டது.''

(12-ம் பக்கம் பார்க்க)

## ரப்பர்குழாய்மூலம் உணவருந்தி உயிர்வாழும் 17வயது தமிழ் மாது

### சத்திர சிகிச்சைக்கு வேண்டிய பணமில்லாததால் இந்த அவல நிலை

—சிங்கப்பூர்

பிரிட்டன் சென்று சத்திரசிகிச்சை செய்து கொள்ள எட்டாயிரம் வெள்ளி பணம் திரட்டாவிட்டால் 17 வயதுள்ள வனப்புமிக்க தமிழ்ப் பெண்ணொருத்தி தன் வாழ்நாள் முழுவதும் தன் வயிற்றில் செருகப்பட்டுள்ள ரப்பர் குழாய் ஒன்றின் மூலம்தான் உணவு அருந்திக்கொண்டு இருக்க வேண்டி ஏற்படும்.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையிலுள்ள மங்கையின் பெயர் கோவிந்தம்மாள் என்பதாகும். கோலாலம்பூரிலுள்ள ஈயச் சுரங்கத் தொழிலாளர் ஒருவரின் புதல்வியே இவராவர். மூன்றாண்டுகளுக்கு முன்பு நெருப்புச் சோடா தண்ணீர் குடித்ததின் பயனாக இந்தக் கதி இப் பெண்ணுக்கு ஏற்பட்டு விட்டது.

இப் பாஷாணம் இப் பெண்ணின் தொண்டையைப் பொசுக்கி விட்டது. ஆதலால், வாயின் மூலம் இம்மாது உணவருந்த முடியாது. டாக்டர்கள் இவரது உயிரைக் காப்பாற்றுவான் வேண்டி அவரது வயிற்றில் ரப்பர் குழாய் ஒன்றைச் செருகியிருந்தனர். இந்தக் குழாய் மூலம் தண்ணீர் போன்ற உணவை இவர் அருந்துகிறார்.

கோவிந்தம்மாள் கோலாலம்பூரில் ஆறு சத்திர சிகிச்சைகள் செய்து கொண்டார். ஆயினும் பயனொன்றுமில்லை.

காலனி சர்க்காரிடம் உதவி பெறலாம் என்ற நம்பிக்கையில் இம்மாது சிங்கை வந்தார்.

சின்னாட்களுக்கு முன்பு ஜெனரல் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் கே. வெள்ளச்சாமி என்பவர் இம்மாதைப் பரிசோதித்து இங்கிலாந்துக்குச் செல்லும்படி அவருக்கு ஆலோசனை கூறினார். இம்மாதிரியுள்ள நோயை அங்குள்ள நிபுணர்கள் தாம் தீர்க்க முடியும் என்றவர் தெரிவித்தார்.

ஆனால், இம்மாதுக்குக் குறைந்தபட்சம் அங்கு போவதற்கும் மற்ற செலவுகளுக்கும் 100 பவுன் வேண்டியிருக்கும்.

டாக்டர் வெள்ளச்சாமி கூறியதாவது:

இப்பெண் இங்கிலாந்து போக முடியாவிட்டால், நாங்களே அந்தச் சத்திர சிகிச்சையை இங்கு செய்துவிடுவோம். ஆனால் பலன் ஏற்படும் என்று நாங்கள் உத்தரவாதம் செய்ய முடியாது.

ஒரு தடவை செருகப்படும் ரப்பர் குழாய் ஆறுமாத காலம் பயன்படும். பிறகு வேறு ஒரு குழாய் செருகப்படவேண்டும்.

FOR YOUR

PRINTING TYPES

10. pt. 'Monotype' Times Roman
Types imported from England are high in price. The English types made by us are very much cheaper in price than types imported from England or India. Those interested will please ask for our price list of types made by us.

12 pt. 'Monotype' Times New Roman
This Foundry makes English and Tamil types of various faces. Those interested will please ask for a seperate folder showing specimen of our types.
This paragraph is composed with 12 pt. Monotype Times New Roman cast on a 12 pt body.

14 pt. 'Monotype' Times Roman
We cast types on ordinary type metal and on harder type metal. The ordinary type metal is hard enough for most purposes, and the types cast on it would be cheaper than the types cast on the harder metal. It is open to customers to choose either the ordinary or harder quality type metal.

18 pt. 'Monotype' Times Roman
Many printers will have their old types which they would wish to recast. We are prepared to accept the old types unmelted for recasting in the faces referred to in this column.

'Monotype' Times Bold and Times Italics Types can also be cast in 10 pt., 12 pt. 14 pt. and 18 pt in our Foundry.

For further details :—

The Manager,
Sutantiran Type Foundry.
194-A, Silversmith St.,
Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1957 ஏப்ரல் மாதம் 28-ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


# தமிழியக்கம் ஓங்குக

தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு கு. வன்னியசிங்கம் சமீப காலமாக எந்த மேடையில் பேசினாலும் ஒரு முக்கிய விஷயத்தை வற்புறுத்தி வருகின்றார். அதாவது, தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்துடனும், வர்த்தக ஸ்தாபனங்களுடனும் செய்யும் சகல கடிதப் போக்குவரத்துகளையும் தமிழ் மொழியிலேயே செய்ய வேண்டும் என்று அவர் கூறுகின்றார்.

இதே கருத்தைச் சுதந்திரன் பல வருடங்களுக்கு முன்பு ஆசிரியத் தலையங்கம் தீட்டி வற்புறுத்தியதை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம். கொழும்பிலுள்ள தமிழ் மறைக் கழகத்தாரும் இதே கருத்துக்கள் அடங்கிய துண்டுப்பிரசுரமொன்றை ஆயிரக்கணக்கில் அச்சிட்டு கடந்த ஆண்டில் விநியோகம் செய்திருக்கிறார்கள்.

தமிழ் மொழி உரிமை இழந்துபோகிறதே என்று நாம் பரிதவிக்கின்றோம். சிங்களம் மட்டும் சட்டத்தினால் தமிழ் பேசும் மக்களுக்கு உத்தியோகங்கள் கிடைக்க வழியில்லையே என்று கவலைப்படுகின்றோம். உள்ள உரிமையை நாம் நிலைநாட்டத் தவறிவிட்டு, உத்தியோகம் கிடைப்பதற்கான வழிகளை உதறித் தள்ளிவிட்டு பிரலாபிப்பதாலும், கவலைப்படுவதாலும் என்ன பிரயோசனம் ஏற்படப்போகிறது?

நம்மில் பலர் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதும்போது ஆங்கிலத்தில் எழுதுவதுதான் ஏற்றது, முறையானது, கௌரவமானது என்று கருதுகிறோம். வர்த்தக ஸ்தாபனங்களோடு தொடர்புகொள்ளும்போதும் இந்த மனோபாவந்தான் நமக்கு ஏற்படுகிறது. நம்மில் பலருக்கு ஆங்கிலம் எழுதத் தெரியாவிட்டாலும், 'பிட்டிசம்' எழுதுபவனுக்குக் கூலி கொடுத்தாவது ஆங்கிலத்தில்தான் எழுதுவிக்க ஆசைப்படுகிறோம். வெள்ளைக்காரன் ஆட்சியிலிருந்த போதும் வெள்ளைக்காரன் இந்நாட்டு வர்த்தகத்தைக்கட்டியாண்டபோதும், ஆங்கிலத்தில் எழுதியெழுதி நம்மிடம் ஊறிப்போன அடிமைத்தனத்தின் பிரதிபலிப்பே இந்த மனோபாவமாகும். இந்தக் கேவலமான மனப்பான்மையிலிருந்து நம்மை நாமே விடுவித்துக்கொள்ளாதவரையில் நாம் ஒரு சுதந்திர சமூகமாக மாற்றமடைவது சாத்தியப்படுமா?

நமது அருமைத் தாய்மொழியை நாமே அபிமானத்துடனும், பற்றுடனும் பிரயோகித்து அதன் உயர்வையும், உரிமையையும் நிலைநாட்டத் தயங்கும்போது, வெட்கப்படும்போது, அந்நியர் அதன்மீது அன்பும் உரிமையும் சொரிவார்கள் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு பேதமை.

தமிழ் பேசும் மக்கள், அரசாங்கத்துடனும், வர்த்தக ஸ்தாபனங்களுடனும் தமிழ் மொழியிலேயே தொடர்பு கொள்வது என்று சங்கற்பம் செய்துகொண்டால், அதனால் எவ்வளவு நன்மைகள் ஏற்படக்கூடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு அரசாங்க காரியாலயத்துக்கு ஒரு தமிழ்க் கடிதம் அனுப்பப்பட்டால் அங்கு என்ன நடைபெறும்? அந்தக் கடிதத்தைப் படிக்கவும், அதை மொழி பெயர்த்துக் கொடுக்கவும், அதற்குப் பதில் எழுதவும், அங்கு ஒரு தமிழ்க் குமாஸ்தா அவசியம் இருந்தேயாக வேண்டும். இப்படி பல்லாயிரக்கணக்கான கடிதங்கள் பல்வேறு இலாகாக்களுக்கும் பிரதி தினமும் போகுமானால் எத்தனையோ தமிழ் உத்தியோகஸ்தர்களுக்கு இடங்கிடைக்கும். அல்லது தமிழ் பேசும் மக்களின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பதற்குப் பதிலாக சிங்கள உத்தியோகஸ்தர்கள் தாமே தமிழ் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தானாகவே ஏற்படும்.

அரசாங்க காரியாலயங்களில் மட்டுமல்ல வர்த்தக ஸ்தாபனங்களிலும் இந்த நிலை ஏற்படும்படி செய்யலாம். வாடிக்கைக்காரர்களான தமிழ் பேசும் மக்கள் தாங்கள் அனுப்பும் 'ஆடர்'களையெல்லாம் தமிழில் எழுதியனுப்பினால், வியாபாரத்திலும் ஆதாயத்திலும் கண்ணுங் கருத்துமாயுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் தமிழ் உத்தியோகஸ்தர்களை வேலைக்கமர்த்தியே தீர வேண்டியிருக்கும். அல்லது வாடிக்கைக்காரர்களை அதிருப்திக்குள்ளாக்குவதால் வர்த்தகத்தை இழக்க வேண்டியிருக்கும்.

தபால் நிலையங்களின்மூலம் அனுப்பும் மணிஆடர், போஸ்டல்ஆடர், தந்தி முதலியவற்றையும் நாம் தமிழில் அனுப்பினால் இரண்டு பக்கமுமுள்ள தபால் நிலையங்களில் தமிழ் உத்தியோகஸ்தர் கடமை பார்த்துத்தான் ஆகவேண்டியிருக்கும். நாம் அனுப்பும் கடித உறைகள் அனைத்தையும் தமிழில் விலாசமிட்டால், எல்லா ஊர்களிலும் தமிழ் தெரிந்த தபால் ஊழியர்களுக்கும், சேவகர்களுக்கும் வேலை கிடைக்கும். சிங்களப் பிரதேசங்களிலுள்ள சிங்களத் தபால் ஊழியர்களும், சேவகர்களும் வேலை வேண்டுமானால் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள்ளாவார்கள்.

அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்தித் தமிழ் மொழியைக் கட்டாயமாகப்புகுத்தி வைத்திருக்கக்கூடிய ஒரு இலாகா வருமான வரி இலாகாவாகும். அரசாங்கம் வருமான வரிக் கணக்குக் கேட்டும்போது தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒருமுகமாக தமிழிலேயே வருமான வரிப் பத்திரம் வேண்டுமென்று கேட்டு சகல கணக்குகளையும் தமிழிலேயே எழுதியனுப்ப வேண்டும். இப்படி எந்தெந்த இலாகாக்களில் தமிழ் மொழியைக்கொண்டு ஆதிக்கம் செலுத்தலாம் என்பதை ஆராய்ந்தறிந்து அவ்வளவு இலாகாக்களிலும் தமிழ் இயங்கும்படி செய்ய வேண்டும்.

மேற்கூறிய தமிழ் இயக்க நடவடிக்கைகளினால் நாம் தமிழ் மொழியின் உரிமையையும், தமிழ் உத்தியோகஸ்தர்களின் அவசியத் தேவையையும் பாதுகாத்து வரலாம். எனவே, ஒரு சிறிய விஷயம் என்று எண்ணாமல் யாவரும் இதில் ஊக்கம் செலுத்தி, இதை ஒரு தேசிய சேவையாக மதித்து, எழுதுவதெல்லாம் தமிழிலேயே எழுதுவது என்று திடவிரதம் பூண்டு காரியமாற்றி வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

# 'டுஸ்னியூம்கொ' தலைவர் மந்திரி ஆவாரா?

## கொழும்பில் அடிபடும் பலமான வதந்தி

"தமிழ் பேசும் மக்கள் தங்கள் விமோசனத்திற்கு 'டுஸ்னியூம்கொ'களை அதாவது கொம்யூனிஸ்டுகளை நம்பிக்கொண்டிருப்பதைவிட ஒரு முழக் கயிற்றை நம்பி இறப்பில் தூக்குப் போட்டுக்கொள்ளலாம்" என்று இதுகால வரை டுஸ்னியூம்கொகளின்பால் அனுதாபம் காட்டி வந்த ஒரு தமிழ்ப் பிரமுகர் கவலையோடு கூறினார்.

இப்படி அவர் கூறியதற்கு கடந்த இரண்டு தினங்களாக கொழும்பில் அடிபடும் ஒரு பலத்த வதந்திதான் காரணமாகும்.

பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிப் பக்கத்தில் குந்திக்கொண்டிருந்தகொம்யூனிஸ்டுகள் சில மாதங்களுக்கு முன்னர் அரசாங்கத்தை ஆதரிப்பது என்று முடிவு செய்தார்கள் அல்லவா? அப்போதே அவர்கள் அரசாங்கத்தோடு இரண்டறக் கலக்க அடிப்போட்டுவிட்டார்கள் என்று கருதப்பட்டது. ஆனால் டுஸ்னியூம்கொகளே, "அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது. வெறுமனே ஒத்துழைக்கப் போகிறோம். அரசாங்கத்துடன் ஒன்று சேரும் நோக்கம் எங்களுக்குக் கிடையாது" என்று கதையளந்தார்கள். இந்தக் கதையையும் நம்பிய தமிழ்டுஸ்னியூம்கொகளும் நம்மிடையே இருக்கத்தான் செய்தார்கள்.

ஆனால் இப்போது கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் அடிபடும் வதந்தி வேறுவிதமாக இருக்கிறது. பண்டாரநாயகாவின் மந்திரி சபையில் வெகு சீக்கிரம் மாறுதல் ஏற்படப்போவதாகவும் டுஸ்னியூம்கொ தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா ஒரு மந்திரியாகப் போவதாகவும் சொல்லப்படுகிறது.

திரு. ஜயவீர குருப்பு தமது மந்திரிப் பதவியையும், எம். பி. பதவியையும் ராஜினமாச் செய்துவிட்டு பர்மாவுக்கு தூதுவராகச் செல்லப் போகிறாராம். மான் வேட்டை -சம்பவத்தில் அவர் கூறிய "பச்சைப் பொய்" அவரை மக்கள் கண்ணில் மதிப்பிழந்தவராக்கிவிட்டதே அவர் ராஜினமாவுக்கு காரணம் என்று விஷயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

அவருடைய இடத்திற்கு திருமதி விமலா விஜயவர்தனவை மாற்றிவிடுவதென்றும், சுகாதார மந்திரிப்பதவியை டுஸ்னியூம்கொ தலைவர் டாக்டர் விக்ரமசிங்காவுக்கு அளிப்பதென்றும் பிரதமர் பண்டாரநாயகா ஆலோசித்து வருகிறாராம்.

சுகாதார மந்திரியாக ஒரு டாக்டர் இருப்பதே சாலச் சிறந்தது என்ற அபிப்பிராயமும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

### கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் சுகவீனம்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வாயிலிருந்து இரத்தம் கொட்டும் நிலையில் சென்னை இஸபெல்லா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். இரண்டு டாக்டர்கள் கலைவாணருக்கு அருகிலிருந்து சிகிச்சையளித்து வருகிறார்கள்.

முதலில் அவருக்குப் பல்லில் இலேசான வலி ஏற்பட்டதாம். ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தாமல், ராஜா தேசிங்கு சினிமாவில் நடிப்பதற்காக நெப்டியூன் ஸ்ருடியோவுக்குச் சென்றிருந்தார்.

அங்கு நடித்துக்கொண்டிருக்கும்போது பல்வலி அதிகமாகியது. வலி தாங்கமுடியாது கலைவாணர் துடித்தார். உடனே அவர் பல் டாக்டரிடம் அழைத்துச் செல்லப்பட்டார். டாக்டர் கடைவாய்ப்பல்லைப் பிடுங்கினால்தான் பல்வலி நிற்கும் என்று சொல்லி அதைப் பிடுங்கிவிட்டார். இத்தோடு பல்வலி சற்றுக் குறைந்துவிடவே கலைவாணர் திரும்பவும் ராஜா தேசிங்கு படத்தில் நடிக்க ஸ்ருடியோவுக்கு சென்றிருந்தார்,

அங்கிருக்கும்போது பல் பிடுங்கிய இடத்திலிருந்து இரத்தம் கொட்ட ஆரம்பித்தது. ஸ்தலத்துக்கு உடனே டாக்டர் வரவழைக்கப்பட்டார். அவர் தன்னாலானதைச் செய்துவிட்டுக் கலைவாணரைக் கண்டிப்பாக ஆஸ்பத்திரியில் அனுமதித்து சிகிச்சை அளிக்கவேண்டுமென்று சிபார்சு செய்தார்.

அதன்படி இஸபெலா ஆஸ்பத்திரியில் கலைவாணர் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை அளிக்கும் டாக்டர்கள் அவர் இன்னும் சுமார் 15 நாட்களுக்கு ஆஸ்பத்திரியிலேயே இருக்கவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

# பட்டாளத்தைக் காட்டி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டது. அவர்கள் பலாக்காரத்தில் இறங்கினால் நாம் தமிழரசுக் கட்சியைச் சட்டவிரோதமாக்கலாம். அதுவரை ஒன்றும் செய்ய முடியாது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் நடவடிக்கைகளைத்தான் நாம் மேற்கொள்ள முடியும். காந்தி மகாத்மா சட்ட மறுப்பு இயக்கம் நடத்திய போதுகூட பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய தேசிய காங்கிரஸை சட்டவிரோத ஸ்தாபனமாக்கவில்லை. இதற்கு மாறாக நாம் நடந்துகொண்டால் ஜனநாயக உலக அபிப்பிராயத்திலிருந்து நாம் தப்பவே முடியாது" என்று கூறினாராம்.

அதன் பின்னரே இராணுவத்தையும், பொலிஸையும் கொண்டு சட்ட மறுப்பு இயக்கத்தை முறியடிக்கத் திட்டமிடப்பட்டது என்று தெரியவருகிறது.

### நாகநாதன் அபிப்பிராயம்

சுதந்திரன் அரசியல் நிருபர் மேற்கூறிய விபரங்கள் அனைத்தையும் தமிழ்அரசுக் கட்சிப்பொதுச் செயலாளரான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனிடம் தெரிவித்து அவருடைய அபிப்பிராயத்தைக் கோரியபோது அவர் கூறியதாவது: "காக்கி உடைகளையும், கரிய பிரங்கித் துப்பாக்கிகளையும் தாங்கியபடைகளையும்பட்டாளங்களையும்அணிவகுத்துக் காட்டிப் பயமுறுத்துவதனால், ஒரு இனத்தின் உயிருக்குயிரான சுதந்திரப் போராட்ட வேட்கையைத் தணித்துவிடலாம் என்று பிரதமர் பண்டாரநாயகா எண்ணுவது நகைப்பிற்கிடமானதாகும்."

"விடுதலைத் தாகம் கொண்ட நம் வீரர்களையும் வீராங்கனைகளையும், உயிரைத் திரணமாக மதித்து, காந்திய கவசம் தாங்கி அஹிம்சா யுத்தம் பொருத ஆவேசம் கொண்டு நிற்கும் நமது தலைவர்களையும், தேசபக்தர்களையும், பண்டாரநாயகாவின் பலாத்கார நடவடிக்கைகள் ஒருபோதும் வெல்லமுடியா. அப்படி வென்றன என்பதற்குச் சரித்திரத்திலேயே சான்று கிடையாது."

"சாத்விகத் தொண்டர் படையின் முன்னர், சர்வசக்தி வாய்ந்த பிரிட்டிஷ் இராணுவமே மண்டியிட வேண்டியதாயிற்று. இந்த அதிசயத்தை பண்டாரநாயகா உட்பட, இந்தச் சந்ததியினர் அனைவரும், அணைடை நாடான இந்தியாவில் தரிசனம் கண்ட பின்னரும், நமது பிரதமர் பழையகால இராணுவ அடக்குமுறையில் நம்பிக்கை வைத்து, அவற்றின்மூலம் தமது ஆட்சியை நிலைநாட்டிவிடலாம் என்று நினைப்பாரேயானால் அவருடைய அனுபவக் குறைவையும், அறியாமையையும் இட்டு நாம் அவர்மீது அனுதாபம் காட்டவேண்டும், இரக்கப்படவேண்டும்."

### ஒரு நொடிப்பொழுதில் சுதந்திரம்

"எதிர்வரும் ஆகஸ்ட் சட்ட மறுப்புப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் ஆயிரக் கணக்கில் கலந்துகொண்டு கடைசிவரை உறுதியோடு சாத்வீக முறையில் போராடி சிறைச்சாலைகளை நிரப்புவார்களானால் ஒருநொடிப்பொழுதில் நாம் இந்த நாட்டில் நமது கோரிக்கைகள் அனைத்தையும் பெற்றுச் சுத்த சுதந்திர புருஷர்களாக வாழ்வது திண்ணம்."

டாக்டர் நாகநாதன் மேற்கண்டவாறு கூறியதும் சுதந்திரன் அரசியல் நிருபர் அவரிடம் இரண்டு கேள்விகளைக் கேட்டார்.

1. ஆகஸ்டில் தமிழரசுக் கட்சி நடத்தவிருக்கும் போராட்டத் திட்டங்கள் யாவை?
3. தமிழரசுக் கட்சியின் உத்தேசப் போராட்டத் திட்டங்கள் என்று சில தினப்பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளில் எவ்வளவு தூரம் உண்மைகள் இருக்கின்றன?

முதலாவது கேள்விக்கு டாக்டர் நாகநாதன் பின்வருமாறு பதிலிறுத்தார்:

### பரம இரகசியம்

"தமிழரசுக் கட்சி தக்க பரிசீலனைகளின் பயனாக மிகவும் புனிதமானதும், புதுமையானதுமான திட்டங்களை வகுத்துள்ளது. திட்டங்கள் அனைத்தும் பரம இரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன. சமயமும் சந்தர்ப்பமும் அவசியமும் ஏற்படும்போதுதான் அவை வெளியிடப்படும்.

எந்த இராணுவத் தளபதியும் தன் போராட்டத் திட்டங்களை அனாவசியமாக வெளியிட்டு தன்னைப் பலவீனப்படுத்திக் கொள்ள மாட்டான். அப்படி வெளியி[illegible] வது எதிரிக்குப் பிடி கொ[illegible] பதாகும். சட்ட மறு[illegible]

(9-ம் பக்கம் பார்க்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரிகளும் பாராளுமன்றக் காரியதரிசிகளும்

## திடீரென்று பணக்காரர் ஆகிருர்களே, இது எப்படி?

## தேர்தலுக்கு முன் 'ஓட்டாண்டி'களாய் இருந்தவர்கள் இன்று உல்லாசப் பங்களாவாசிகளாகியது எவ்வாறு?

## பொது மக்கள் வரிப்பணத்தில்தாஞ....?

(சுதந்திரன் நிருபர்)

"பொது மக்களின் வரிப்பணத்தில் உல்லாசமாக உலகத்தை வலம் வரவேண்டுமாஞல் எம். ஈ. பி. அரசாங்கத்தில் சேர்ந்துகொண்டால் போதும் என்று கருதுமளவுக்கு நிலைமை முற்றி விட்டதைக் கடந்த வார சுதந்திரனில் தெரிவித்திருந்தோம். தற்போது சுதந்திரனுக்குக்கிடைத்துள்ள செய்திப்படி உலகத்தை வலம் வருவதென்ன, இங்கேஇருந்தது இருந்தபடியே பணக்காரராகவும், நிலச்சுவான்தாரராகவும் செல்வாக்கும் சுகபோகமும் பெற்றவராகவும் திகழ வாய்ப்பிருக்கிறது என்பது தெரியவருகிறது.

எம். ஈ. பி. ஆட்சிக்கு வந்த ஒரு வருட காலத்துள் மந்திரிகளும், பிரதிநிதிகளும் மேற்கொண்டிருக்கும் வேலைகளையும் அவர்களிடத்தில் சகல விதத்திலும் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கொண்டும் பார்க்கும்போது இது தெரியவருகிறது.

பல மந்திரிகளும் பாராளுமன்றக் காரியதரிசிகளும் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டுமென்ற கொள்கைக் கேற்பக் கொழும்பிலும் மற்றும் வெளியூர்களிலும் தமக்கென மாடமாளிகைகள் கட்டியெழுப்ப ஆரம்பித்திருக்கிருர்கள்.

### மந்திரியின் பங்களா

கொழும்பிலிருந்து கண்டிக்குப்போகும் பாதையில் மந்திரியொருவர் கட்டியெழுப்பியுள்ள கண்ணைக் கவரும் பங்களாவைக் காணலாம். சம்பந்தப்பட்ட மந்திரி பதவியேற்றபோது இருந்த நிலைக்கும் இன்றுள்ள நிலைக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம். இன்று அவர் மிகப்பெரிய பணக்காரர்.

### பா. காரியதரிசியின் வீடு

பாராளுமன்றக் காரியதரிசி ஒருவர் பதவியேற்றபோது சல்லிக் காசுக்கு வழியில்லாமல் இருந்தவர்; இன்று கொழும்பில் சுகவாசத்துக்குரிய பகுதியில் அருமையான இடத்திலமைந்த நிலம் வாங்கி அங்கு அழகான வீடொன்று கட்டிக் கொண்டிருக்கிருர்.

### அந்தஸ்தில் உயர்ந்தவர்கள்

பொதுத்தேர்தலின் போது பணத்துக்கு 'ததிங்கிணதோம்' போட்ட அரசாங்கக் கட்சிப் பிரதிநிதிகள் பலர் கூட இன்று பெரிய பெரிய கார்கள் சொந்தத்தில் வைத்து அவற்றில் பவனி வருமளவுக்கு அந்தஸ்தில் உயர்ந்து விட்டார்கள்.

### இத்தனையும் வரிப்பணத்திலா?

இவர்களின் பெயர்கள் சொல்லாமலே விளங்கும். அவ்வளவு பிரசித்தம் அவை. இவர்களுக்குப் பணம் திடீரென்று எங்கிருந்து வந்தது என்பதுதான் புரியாத புதிராயிருந்த போதிலும் பொது மக்களின் வரிப் பணம்தான் எடுப்பார் கைப்பிள்ளையாகிவிட்டதே நமது நாட்டில் என்று சில வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

### சொத்துரிமையைத் தெரிவிப்பார்களா?

அரசாங்க ஊழியர்கள் தமது சொத்துரிமைகளை அரசாங்கத்துக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கருத்து அரசியல் வட்டாரங்களில் அடிபடும் இந்தநேரத்தில் பிரதமர் உள்ளிட்டு மந்திரிமார், பாராளுமன்றக்கரியதரிசிகள், மற்றும் அரசாங்கக்கட்சிப் பிரதிநிதிகள் அனைவரும் அப்படிச்செய்ய வற்புறுத்தப்படுவார்களா என்ற கேள்வி பொதுமக்களால் எழுப்பப்படுகிறது.

### எழுதி அனுப்பலாம்

எதிர் வரும் ஆகஸ்ட் போராட்டத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட தரமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் சுதந்திரனில் பிரசுரிப்பதற்கு வரவேற்கப் படுகின்றன.

இலக்கிய, விஞ்ஞான, பொருளாதாரக் கட்டுரைகளும் மற்றும் பொதுக் கவிதைகள், நாடகங்கள் ஆகியனவும் வரவேற்கப் படும்

—ஆசிரியர்

# பட்டாளத்தைக்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் சாத்வீகமானதாயிருந்த போதிலும் ஓரளவிற்கு இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையை நாம் மேற்கொண்டுதான் ஆக வேண்டும். சாத்விகப் போராட்டங்களை மேற்கொள்ளும் போது எதிரிக்கு தக்க முன்னறிவித்தல் கொடுத்துத் தான் அப்படிச் செய்ய வேண்டும் என்பது காந்திய நெறி. அதன் பிரகாரம் ஓராண்டுக்கு முன்பே நாம் அரசாங்கத்திற்கு முன்னறிவித்தல் கொடுத்து எச்சரித் திருக்கிறேம். இதற்கு மேல் ஒவ்வொரு நுணுக்கத்தையும் நாம் வெளியிட வேண்டுமென்று அரசாங்கம் எதிர்பார்க்கக் கூடாது. ஆஞல் தமிழ்ப் பொதுமக்கள் அறிய உரிமை உடையவர்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகள் சரியாக வரும் போது திட்டங்கள் பகிரங்கப் படுத்தப்பட்ட பின்னர் தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். அதுவரை பொதுமக்கள் பொறுமையாய் இருக்க வேண்டும்."

### ஆதாரமற்றவை

இரண்டாவது கேள்விக்கு டாக்டர் நாகநாதன் அளித்த பதில்: "தமிழரசுக் கட்சியின் உத்தேச போராட்டத் திட்டங்கள் என்று சில பத்திரிகைகள் பல கற்பனை நடவடிக்கைகளை வெளியிடுகின்றன. அவை ஆதாரமற்றவை. கட்சியின் அதிகார பூர்வமான திட்டங்கள் வெளிவரும்வரை மற்றுஎவற்றையுமே நம்ப வேண்டாம் என்று தமிழ்பேசும்மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்ல முடியும். அதாவது தமிழரசுக் கட்சியின் போராட்ட நடவடிக்கைகள் அனைத்தும் சாத்வீகமானவையாகவும், பொதுமக்கள் அனைவரும்- உயர்ந்தவர், தாழ்ந்தவர், செல்வர், வறியோர், ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி அனைவரும் கலந்து [illegible] வுமே இருக்கும்.

# திரளும் தொண்டர் படை....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தையும் படை திரட்டலையும் ஒத்திப்போடலாமா என்று அவர்கள் ஆலோசித்தனர். ஆஞல் ஆர்வம் நிறைந்த பொதுமக்கள் அந்த ஆலோசனைக்கு இடங்கொடுக்கவில்லை. "கூட்டம் நடத்தாவிட்டாலும் எங்களைத் தொண்டர்களாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர். மழை கொட்டிக்கொண்டேயிருந்தது. ஆஞல் தொண்டர்கள் படையில் சேர்ந்து கொண்டேயிருந்தனர்.

மழை ஓய்ந்ததும் பிரமாண்டமான ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. பலரும் பேசிஞர்கள்.

### சிங்களம் படிக்கக் கூடாது

திரு. வன்னியசிங்கம் தமது தலைமையுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

"அரசாங்கத்துடனும், வர்த்தக ஸ்தாபனங்களுடனும், தனிப்பட்டவர்களுடனும், கூட தமிழர்கள் சகலரும் தமிழிலேயே தங்கள் சகல தொடர்புகளையும் வைத்துக் கொள்ள வேண்டும். அரசாங்க ஊழியர்கள் இந்த விஷயத்தில் பொது அலுவல்கள் தமிழிலும் நடைபெறத் தூண்டுதலாக இருக்கலாம். பாஷைச் சட்டம் அமுலிலிருக்கும் வரை அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்கவே கூடாது."

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது:-

### நெருக்கடியான காலம்

"தமிழர்களுக்கு மிக நெருக்கடியான காலம் எதிர்நோக்கியிருக்கிறது. ஆகஸ்டில் ஆரம்பமாகும் போராட்டம் பல மாதங்களுக்கு நீடிக்கக் கூடும். ஆயிரக் கணக்கில் தொண்டர்கள் இந்த சாத்விகப் போராட்ட அணியில் திரள வேண்டும். அமைதியான போராட்ட ஒழுங்கு நெறிகளில் இந்தத் தொண்டர்கள் பயிற்சி பெற்ருக வேண்டும். ஜாதி, மத, சமூக பேதங்களை மறந்து தமிழர்கள் ஒன்றுபட்டாலே இந்த உரிமைப் போரில் நாம் வெற்றி பெறமுடியும்."

### செயல் வேண்டும்

திரு. வி. ஏ. கந்தையா எம். பி. பேசுகையில் பேச்சை நிறுத்திச் செயலாற்றும் கட்டம் வந்துவிட்டதென்ருர்.

### மட்டக்களப்பு தயார்

திரு. எஸ். ராஜதுரை எம். பி. பேசுகையில் மட்டக்களப்புத் தமிழகம் உரிமைப் போராட்டத்துக்கு முழுமூச்சாகத் தயாராகிவிட்டதென்ருர். யாழ்ப்பாணத்து மக்கள் தாங்கள் குடியேற்றத்திட்டத்தால். நேரடியாகப் பாதிக்கப்படவில்லை என்று வாளாவிருக்கக்கூடாதென்றும் திரு. ராஜதுரை கூறிஞர்.

### முஸ்லிம்கள் ஏமாருர்கள்

ஜனுப் மஷூர் மௌலானு பேசுகையில் தமிழ் தான் முஸ்லிம்களின் தாய் மொழியென்றும் போலிச் சலுகைகளால் முஸ்லிம் மக்கள் ஏமாற மாட்டார்களென்றும் கூறிஞர்.

### "தொண்டர் படையில் சேர்க"

மாதர் முன்னணித் தலைவி திருமதி ஏ. அருணசலம் பெண்களும் தொண்டர் படையில் அதிகமதிகம் சேர வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

### இறுதிச் சவால்

திரு. ஏ. அமிர்தலிங்கம் எம். பி. பேசுகையில் தமிழர்களின் ஏகோபித்த போராட்டத்தை முறியடிக்க முடியாதென்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆகஸ்ட் போராட்டம் அரசாங்கத்துக்கு தமிழர்களின் இறுதிச் சவாலென்றும் அதன் வேகம் அரசாங்கமே கலகலத்துவிடுமளவு சக்திவாய்ந்ததாக இருக்குமென்றும் அவர் கூறிஞர். அடக்குமுறையைப் பிரயோகித்துப் பார்க்க வேண்டிய, அல்லது தமிழ்ப் பகுதிகளில் தங்கள் ஆட்சியைத் துறக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஆகஸ்ட் போராட்டத்தின்போது ஏற்படுமென்று திரு. அமிர்தலிங்கம் எச்சரித்தார். இரத்தமும், வெயர்வையும், கண்ணீரும் சிந்தி அந்த முப்படைகளால் தமிழர்கள் ஆட்சியினரின் அடக்குமுறையைத் தகர்ப்பார்களென்றும் அவர் கூறிஞர். தமிழர்களின் உழைப்புச் சக்தியாலேயே நாட்டின் செல்வத்தில் எழுபது சதவிகிதம் உருவாகிறதென்றும் திரு. அமிர்தலிங்கம் கணக்குப் போட்டுக் காட்டிஞர்.

### 3000 தொண்டர்கள்

யாழ்ப்பாணக் கூட்டத்தைத் தொடர்ந்து ஞாயிறு திங்கள், செவ்வாக்கிழமைகளில் யாழ்ப்பாணத்தின் இதர பகுதிகளிலும் தொண்டர் வாரங்கள் ஆரம்பிக்கப்பட்டன. செவ்வாய்க்கிழமைவரை சுமார் 3,000 தொண்டர்கள் படையில் சேர்ந்துவிட்டதாக தமிழரசுக்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்,

தொண்டர்கள் திரளும் செய்தி பத்திரிகைகளில் வெளிவந்ததும் கொழும்பில் ஒருவித பரபரப்பு நிலையேற்றப்பட்டது. இந்தப் பரபரப்பு அரசாங்கத்தையும் நன்ருக மிரளும்படி செய்துவிட்டது என்று தெரிகிறது.

### மந்திரிகள் பதைபதைப்பு

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சியின் ஆகஸ்ட் போராட்டம் பற்றியும் ஆலோசிப்பதென்றநிகழ்ச்சி அவசர அவசரமாகச் சேர்க்கப்பட்டதாம். இப்போராட்டத்தைத் தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்பது பற்றி பல மணித்தியாலங்கள் ஆலோசிக்கப்பட்டதென்றும் பல மந்திரிகள் பதைபதைப்போடு அபிப்பிராயங்கள் வெளியிட்டனர் என்றும் தெரிகிறது.

### அவசர அறிக்கை

முடிவில் இராணுவத்தினரைப் பயன்படுத்தி ஆகஸ்ட் போராட்டத்தை முறியடிப்பதென்றும், அதற்கிடையில் தமிழ் மொழிக்குப் பல சலுகைகள் அளிப்பதாக பிரதமர் பாராளுமன்றத்தில் ஒரு அவசர அறிக்கையை வெளியிட்டு தமிழ் பேசும் மக்களின் நல்லெண்ணத்தைத் திரட்டுவது என்றும் அதன் மூலம் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கைக் குறைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டதாம்.


ஆகஸ்ட் போராட்டத்தில்

**சட்ட மறுப்பு**

சமயத்திற்கேற்ற அரிய அரசியல் நூல்.

சட்ட மறுப்பில் பொதுமக்கள் எப்படிக் கலந்து கொள்வது? அதஞல் தமிழினத்திற்கு ஏற்படப்போகிற நன்மை என்ன? இன்னல்களும், இடஞ்சல்களும் ஏற்படுமா? ஏற்பட்டால் அவற்றைத் தாங்கிக் கொள்வது எப்படி? இவை போன்ற பல வினுக்களுக்கு விடை தருகிறது "சட்ட மறுப்பு".

பிரதி விலை ரூ. 1-25.

ஏஜண்டுகள் தேவை: தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

**தமிழ் ஆட்சிப் பதிப்பகம்**

156, செட்டியார் தெரு. கொழும்பு-11.



பழச்செடி

**விதைகள்**

வீட்டுத் தோட்டத்திற்கேற்ற பழச் செடி விதைகள் பக்கட்டுகளில் கிடைக்கும்.

கேப்-கூஸ்பெரி விதை பக்கட் ஒன்றின் விலை சதம் 25 தான்.

கிடைக்குமிடம்:

67, கச்சேரி ரேட்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவன் - தலைவி ஊடலைத் தீர்த்த விருந்து!

## பரிமாறியபோது தையலாள் தேவமங்கையாகத் தோற்றினாள்

### பழந் தமிழ்க் கவி மாங்குடிக் கிழாரின் பெருங்குடிப் பண்புணர்த்தும் பாடல்

'வீட்டில் தலைவி என் வருகைமேல் விழி வைத்துக் காத்திருப்பாள்! என்னைக் கண்டதும் அத்தான் என்று கிட்டே ஓடி வருவாள். நான் முத்தே என்று அள்ளி அணைப்பேன்! அப்போது நாங்கள் இருவரும் இவ்வையம் மறுப்போம். இந்தக் காலை மங்கி மாலை வரும்; அந்த மாலையும் மாய்ந்து இரவு வந்தால்....'

விடியற்காலையில் தேரோட்டி வரும் அந்தத் தலைவனுடைய மனம் இப்படி எண்ணுகிறது; கைகளோ, அயர்வின்றி, தேரை வேகமாகச் செலுத்துகின்றன. அவனுடைய மனத் தேருக்கும், அவன் ஏறிவரும் தேருக்கும் பலத்த போட்டி ஏற்படுகிறது! ஆம், அவனுடைய மனம், தன் இல்லக் கிழத்தியை எண்ண எண்ண தேரோட்டம் அதிகரிக்கிறது. அது ஓடுகிறதா அல்லது பறக்கிறதா என்று எண்ணும் அளவிற்கு!

**பெண் இதயம்: "புதிர்க் காடு"**

முடிவாக, அந்தத் தேர் அவன் வீட்டண்டையில் வந்து நிற்கிறது. சிறிது தொலைவில் தேர் வரும்போதே பார்த்துவிட்ட தலைவி, வீட்டினுள் சென்று மறைந்து கொள்கிறாள். இதனை அறிந்துகொண்ட தலைவன் ஏதுமறியாதவன் போல், 'முத்தே! ஒளிவிளக்கே!' என்று அழைத்துக் கொண்டே உள் நுழைகிறான். அவளோ முகத்தை 'உம்' என்று வைத்துக்கொள்கிறாள்; அவனோடு பேச மறுக்கிறாள்! 'அவர் வந்தால் நிறைய பேச வேண்டும்; நாளெல்லாம் பேசிக்கொண்டே இருக்கவேண்டும்!' என்று எண்ணியவள் இப்போது அவனுடன் பேச மறுக்கிறாள்! அவனுடன் ஊடல் புரிகிறாள்! பெண் இதயமே ஒரு 'புதிர்க்காடு' தான்!

**ஊடல் தடுக்கிறது**

அவள் கொண்டாள் ஊடல்; அவன் அடைகிறான் வேதனை! பின் இருக்காதா? ஆசையுடன், தன் தலைவியோடு குலவலாம் என்ற ஆவல் கொடி கட்டிப் பறக்கத் தேரில் 'பறந்து' வந்தானே! 'இன்பமே! என் இதய இராணியே! குடும்பம் விளக்க வந்தவளே!' என்று இப்படிப் பலப்பல பேச வேண்டும்; அவளைமகிழ்விக்க வேண்டும், தன் அன்புப் பேச்சால், என்று எண்ணி வந்தானே! இப்போதவள் ஊடல் புரிகிறாளே; அவனுக்கு இருக்காதா வேதனை?

அவனுடைய பார்வை தென் ஓசையை நோக்க, அவனுடைய கண்கள், அவள் பின்னழகைப் பார்த்துஏங்குகின்றன! அவனுக்கு எதிரே சுவையான பழக்குலை; கைக்கெட்டும் தூரத்தில்தான் இருக்கிறது! ஆனால்...அந்தப் பாழும் ஊடல் தடுக்கிறதே......!

**பேசும் தமிழில் உலக இன்பம்**

மாலை மங்கி, இரவும் வந்தது. அந்தச் சமயத்தில் ஒரு விருந்தினன் அந்த வீட்டிற்குள் நுழைகிறான்! மறுகணம் அந்தப் பேசாத பொற்சித்திரம் வாய்திறந்து பேசுகிறது!

"அத்தான்! வந்தவருடன் பேசிக்கொண்டிருங்கள்; ஒரு நொடியில் உணவுதயார் செய்து விடுகிறேன்!"

இப்படிச் சொல்விட்டுச் சிரித்துக்கொண்டே அடுக்களைக்குப் போகிறாள் அந்தச் செல்வி! உலக இன்பமெல்லாம் அவள் பேசிய தமிழில் இருப்பதைப் போன்ற ஒரு உணர்வு அவனுக்கு! வந்த விருந்தினனுக்கு வயிறுநிறைகிறது, உள்ளம் நிறைகிறது; முகத்தில் மகிழ்ச்சி நிறைகிறது! இதைக் காணும் தலைவன்—தலைவி ஊடல் மறைகிறது!

**பேச்சில் தெளிவும் அறிவும்**

நள்ளிரவு வேளை. தலைவனின் விரிந்த மார்பில் முகம் புதைத்துப் பேசுகிறாள் தலைவி:

"அத்தான்! இனிமேல் போகமாட்டீர்களே?"

"எங்கே கண்ணே?"

"நீங்கள் போகக்கூடாத இடத்திற்கு — மனைவியர் மனம் விரும்பாத இடத்

**தென்குமரன்**

திற்கு — அந்தப் பரத்தை வீட்டிற்கு!"

"என்ன உளறுகிறாய்?" அவன் திகைத்துப்போய்க் கேட்கிறான்!

"எல்லாம் தெரியும் அத்தான் எனக்கு! எல்லாம் தெரியும். செய்த தவறை இனியும் செய்யாதீர்கள்!"

அவள் நிதானமாகச் சொல்கிறாள் இப்படி. அவள் பேச்சில் தெளிவு இருக்கிறது; அறிவின் வாடை வீசுகிறது!

"தோழி சொன்னாளா?" அவன் தன் குற்றத்தை ஒப்புக்கொள்வதுபோல் கேட்கிறான்.

**தேவ மங்கை**

"ஆமாம்! இன்று அந்த விருந்தினர் வரவில்லையென்றால், நான் உங்களிடம் பேசியிருக்கவே மாட்டேனே!"

"அய்யய்யோ! என் நல்ல வேளைதான்போலிருக்கிறது. அந்த விருந்தினர் வந்தது! கண்ணே அடுக்களையில் வாழையிலையின் அடிக்காம்பை நீ அரிந்தபோது புகை உன் கரிய விழிகளைச் சிவப்பாக்கியபோது, நெற்றியில் துளிர்த்த வியர்வைத் துளிகளை உன் முன்தானையால் துடைத்துக்கொண்டபோது எங்கள் இலைகளில் உணவு பரிமாறியபோது, நீ ஒரு தேவமங்கையைப்போலவே தான் இருந்தாய்! காணக் கிடைக்காத இத்தகைய ஒரு காட்சியைக் காணவைத்த விருந்தை வாழ்த்துகிறேன். நம் ஊடல் தீர்த்த அந்த விருந்தை வாழ்த்துகிறேன்! மேலும் மேலும், "விருந்தே வா!" என்று வரவேற்கிறேன்!"

**ஊடலைத் தீர்த்தது**

இப்படி அந்தத் தலைவன் வரும் விருந்தை வரவேற்றுப் பேசுகிறான். அவன் விருந்தை வரவேற்பதாக அமைந்துள்ள பாடல் இது:

"சிறுதாழ் செறித்த
மெல்விரல் சேப்ப
வாளை ஈர்ந்தடி வல்லிதின்
வகைஇப்
புகையுண்டு அமர்த்த
கண்ணள் தகைபெறப்
பிறைநுதல் பொறித்த
சிறுநுண் பல்வியர்
அந்துகில் தலையின்
துடையினள் நப்புலந்து
அட்டி லோளே அம்மா
அரிவை;
எமக்கே வருகதில் விருந்தே
சிவப்பு ஆன்று
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்
காண் கம்மே"

"விருந்தோம்பல்" தமிழர் வாழ்வில் சிறப்பிடம் பெற்றிருந்தது. கணவன் மனைவியின் ஊடலைத் தீர்க்க உதவியது என்ற கருத்தை இப்பாடலில் அமைத்துப் பாடியிருக்கிறார் பழந்தமிழ்க் கவி மாங்குடி கிழார்.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

நவீன் முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ் ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

**இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.**

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.


## இலங்கை தி. மு. க. வில்

### பதவிப் பித்தும் கட்சிப் பூசலும்

### இங்குள்ளவர்களைக் கொண்டே அங்குள்ளவர்கள் மதிக்கப்படுகின்றனர்

### தென்னாட்டு தி. மு. க. முன்னணி பிரமுகர் திரு. டி. கே. சீனிவாசன் கருத்து

(நமது நிருபர்)

"இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக உழைக்கும் அரசியல் கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி தான் என்ற கருத்து தாய்த் தமிழகம் உட்பட எங்கும் நிலவிவருகிறது. ஆயினும் இன்னல்படும் எட்டு லட்சம் தமிழர்களுக்கு இங்கு நல்வாழ்வளிக்கப் பாடுபடவேண்டிய பெரும் பொறுப்பு இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சார்ந்ததாகும். அத்தகைய பொறுப்புவாய்ந்த கழகத்தில் பணி வளர்வதற்குப் பதிலாகப் பூசலும் உறுப்பினர்களிடையே பதவிப் போட்டியும் வளர்ந்து வருவதைக் காண வெட்கப்படுகிறேன் - வேதனையடைகிறேன் - ஏன் இங்கு வந்து மாட்டிக்கொண்டோம் என்றுகூட எண்ணத் தோன்றுகிறது."

மேற்கண்டவாறு தாய்த் தமிழகத்திலிருந்து இலங்கை வந்துள்ள தி. மு. க. பிரமுகர் திரு. டி. கே. சீனிவாசன் கொழும்பு அழகிரி மன்றத்தார் தமக்குஅளித்த வரவேற்பு உபசார வைபவத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

**அன்பளிப்பு**

வரவேற்பு உபசாரம் சென்செபஸ்தியான் வீதியிலுள்ள மன்றப் பணிமனையில் கடந்த 19-4-57 அன்று நடைபெற்றது. திரு. சீனிவாசனுக்கு மன்றத்தார் கைத்தறி ஆடை அன்பளிப்புச் செய்தனர்.

**செயலாளர் புகார்**

வரவேற்புரை நிகழ்த்திய மன்றச் செயலாளர் தாம் தி. மு. க. கருத்துடையவர்களாயிருந்தபோதிலும் அதனோடு கொண்டுள்ள தொடர்பு [illegible] யக்கவராகவும் அதற்குக் காரணம் இலங்கைத் தி. மு. க. தானென்றும் கூறினார். தி. மு. க. அதிகாரபீடத்தினரால் தாம் ஒதுக்கப்பட்டுவிட்டதாகவும் செயலாளர் மேலும் சொன்னார்.

**துர்ப்பாக்கிய நிலை**

தமக்கு அளித்தவரவேற்பு உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசிய திரு. சீனிவாசன் மேலும் சொன்னதாவது:

"அங்கிருந்து இங்கு வரும் நாம் திரும்பிப் போகும்போது வேதனையோடு போகும் துர்ப்பாக்கிய நிலைதான் எப்பொழுதும் ஏற்படுகிறது. இங்கே வந்தால் கழகம் நல்ல பணியாற்றி்று—அதன் பெயரும் புகழும் வளர்கிறது — என்ற நல்ல செய்தியைக் கேட்டுப் பூரித்து நிம்மதியாக இருந்துவிட்டுப் போக வழியில்லை. கட்சிச் சண்டை சச்சரவுகளையும் போட்டி பொறாமைகளையும் கேட்டு எனக்குப் போதுமென்றாகி விட்டது. ஏன் இங்கு வந்தோம் என்று எண்ணுவதைத் தவிர எனக்கு வேறொன்றும் தோன்றவில்லை.

**காட்டுமிராண்டிகளும் கையாலாகாதவர்களும்**

"திராவிட முன்னேற்றக் கழகம் யார் யாரையோவெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டதாம். யார் யாரோவெல்லாம் தாம் ஒதுங்கி வெளியே நிற்கிறார்களாம். திராவிட முன்னேற்றக் கழகம் எந்த ஒருவருக்காவது எழுதிக் கொடுக்கப்பட்ட தனிச் சொத்தல்ல. அது பொது ஜனநாயக ரீதியான ஸ்தாபனம். அது தவறு செய்யும்போது அதைத் திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டியது அதன் உறுப்பினர்கள் பொறுப்பு. பதவியிலிருப்பவர்கள் சரிவரப் பணியாற்றவில்லையென்றால் அவர்களை நீக்கிவிட்டு அதற்கு ஏற்றவர்களைப் பொறுக்கி எடுத்து பதவியிலமர்த்திக் கொள்ள வேண்டியதுதானே. அப்படிச் செய்யாமல் அவர்கள் நம்மை ஒதுக்கினார்கள், நாம் ஒதுங்கிக் கொண்டோம் என்று சொல்பவர்கள் கையாலாகாதவர்கள்-திறன் அற்றவர்கள் என்றுதான் பொருள். அதேபோல் ஒதுக்கியவர்களையும் நீதி நியாயம் தெரியாத காட்டுமிராண்டிகளென்றே சொல்ல வேண்டும்.

**கழகம் இல்லாதிருப்பது மேல்**

"காட்டுமிராண்டிகளும் கையாலாகாதவர்களும்

(12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திர சிறுகதை:

# வீரத் தமிழ் நங்கை

"புத்தொளி"

கி. பி. 1799ம் வருடம் செப்டம்பர்மாதம் 5ம் திகதி—பாஞ்சாலங் குறிச்சியில் வீர பாண்டியனின் தம்பி ஊமைத்துரையும் வீரரிற் பெரும் பகுதியினரும் திருச்செந்தூர் செந்திலாண்டவன் திருவிழாவிற்குச் சென்றுவிட்டனர். இதாற் பாஞ்சாலங் குறிச்சியின் படை பலம் குறைந்துவிட்டது. இதையறிந்த வெள்ளையர் இரவோடு இரவாக பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டனர். எட்டயபுரத்து எட்டப்பனின், புதுக் கோட்டை தொண்டமானின் குலத்துரோக வஞ்சகக் கூட்டம் கட்டப் பொம்மனின் போர் வீரரைக் காட்டிக்கொடுக்க இன்னொரு புறம் சதி....

வாள்முனையில்வரிகொடுப்பதாக உறுதி பூண்ட பாண்டியன் பரதேசி வெள்ளையரின் இரத்தச் சேற்றுல் சுதந்திர தேவிக்குக் கோயில் கட்டச் சங்கற்பம் செய்தான். பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையெங்கும் வீரமறவர் முற்றுகையிட்டனர்.

அன்று; அவளுக்கும்—அவனுக்கும், திருமணம் நடக்க இருந்தது. அவன் அந்த நாட்டு மன்னனின் வளர்ப்புப்பிள்ளை—படைத் தளபதி —இலட்சிய வீரன்.

மான வீரமும் மறக்குலப் பண்பும் பொருந்திப் பொலிவுறும் அந்த எழில் மங்கை தன் அன்புக் காதலன் வரவை எதிர் நோக்கி, உள்ளத்தில் உவகை இன்பம் ஊற்றெடுக்கக் காத்துக்கிடக்கிறாள்.

அப்பொழுது குதிரையின் குளம்போசை கேட்டது. அவன் வருகிறான். அவளுக்குத் தெரிந்து விட்டது. அகமும் முகமும் மலர்ந்தன. அவள் எண்ணச் சிட்டு இன்ப லோகத்துக்குச் சிறகடித்துப் பறந்தது. குதிரையை ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு அவன் அவளருகிற் சென்று அமர்ந்தான். அவளோ அவன் வந்திருப்பதைக் காணாதவள்போலத் தானும் தன்பாடுமாகப் பாராமுகமாக இருந்தாள். விசமத்தனத்தின் வெற்றி உருவாக வீற்றிருந்தாள்.

"சொக்கம்மா! சொக்கம்மா!" அவன் இவ்வாறு அழைத்தான் அன்புக்குரியவளை. அவள் விசமத்தனம் கட்டவிழ்ந்தது; கலகலவெனச் சிரித்தாள்.

"சொக்கம்மா ஏன் மௌனமாக இருக்கிறாய்" அவன் கேட்டான். அப்பொழுது மேகம் கறுத்து இருண்டது. இடையிடையே மின்னல்; இடி. வானத்தில் திடீரென ஒரு குமுறல்; குழப்பம். இனி நடக்க இருக்கும் துக்ககரமான சம்பவத்தின் அறிகுறி!

"அந்நிய நாட்டு வெள்ளையருடன் போருக்குப் போகிறேன். விடைகொடு" அவன் அவளிடம் அவசர தொனியில் சொன்னான். அவள் இடியேறு கேட்டசர்ப்பம்போல சலனக் கற்சிற்பமானாள்.

"என்ன......?" இப்படிக் கேட்ட அவளால் மேலே பேச முடியவில்லை. வாயடைத்துப்போனாள்.

"உண்மைதான் அன்பே! பாஞ்சாலங் குறிச்சியைப் பரதேசி வெள்ளையர் முற்றுகையிட்டு விட்டனர். இன்றிரவு கோட்டையையும் பிடித்துவிடுவர். அதற்கு முன்னர் நான் அங்கு செல்லவேண்டும். போரிட்டு, மாற்றாரின் முட்டறுத்து—மூலபலத்தை முறித்து, புறமுதுகிட்டு ஓடச் செய்யவேண்டும் இது என் அவா. இப்போதைய இலட்சியம்" ஆவேசத்துடன் சொன்னான்.

"அத்தான்......!நமது நல்வாழ்வின் உதயமல்லவா இன்று. திருமணம் மென்பதையும்......"

"அன்பே! நம் நாட்டை அடிமையாக்கி அரசோச்ச வந்த கும்பினி வெள்ளையரைப் போரில் வெற்றி

மினத்தையும் காப்பாற்றியபின் வெள்ளையத் தேவன் சுட்டாயமாக உன் கழுத்தில் மாங்கல்யம் மிளிர்வதைக் காண்பான்.

"உங்கள் உயிர் என்றீர்களே. என்னைப்பின் எப்படிப்பிரிந்து......!"

"சொக்கம்மா! என் சிந்தைக்கினியவளே! மறக்குல மங்கையே! நீ மானம் பெரிதென வாழ்ந்த மங்கை நல்லார் பரம்பரையல்லவா? மானம் போனபின் வாழாமை முன் இனிது என்றுஎடுத்துரைத்த தமிழ் மகனின் சந்ததியல்லவா நீ? இப்படி ஏங்கித் தவிக்க வெட்கமில்லையா உனக்கு. நான் பிறந்த பொன்னாட்டை மறந்து— உன்னுடன் தங்கியிருப்பதா? இந்த நாட்டை வெள்ளையன் சூறையாடி வெற்றி முறுவலுடன் ஆட்சிசெய்ய நான் உன்னுடன் காதற்கதை பேசிக்கொண்டிருப்பதா? இதுதானா உன்னுடைய திரம்......?"

"அத்தான்! போதும். உங்களை நான் என்னுடன் இருக்கச் சொல்லவில்லை. என்னையும் உங்களுடன் போர்க்களம் அழைத்துப்போங்கள் என்றுதான் கேட்டேன்."

சொக்கம்மா! என்மறத்தின் மாண்பே! உன்உள்ளத்தின் எண்ணத்தை உணராது உளறிவிட்டேன். என்னை மன்னித்துவிடு. நீ போர்க்களம் புகவேண்டாம். முதலில் நான் போகின்றேன். நான் போரில் மடிந்தால் என் பங்கை நீயும் உன் குலமும் ஏற்று வெள்ளையனை வெட்டி வீழ்த்தி அவனுக்குச் சமாதி கட்டுங்கள் கண்ணே! இப்போ எனக்கு விடைகொடு.

"என்னை இரவொடு பகலாக வளர்த்து வாலிபமாக்கிய தமிழ்தாயே! தங்கத் திருவிடமே! நீ வளர்த்துவிட்ட வீரகுலத்துதித்த கூட்டத்துள் என் அத்தானுக்கும் இடம் கொடு" இப்படி அவள் விக்கலுடனும் விம்மலுடனும் கூறினாள். இல்லை, அவளை அறியாமலே அவள் வாய் குழறியது.

இவ்வார்த்தைகளைக் கேட்டுக் குதூகலித்தான் வெள்ளைத்தேவன். அகமும் முகமும் மலர அவளை அன்புடன் கட்டியணைத்தான்.

"வெற்றியோடு வாருங்கள். அல்லது வீர மரணத்தோடு வாழுங்கள்" என்று கூறிவிட்டு ஓவெனக் கதறியழுதாள். கண்ணீர் பெருகியது.

"மானவீரம் இச்சொற்களில் மணக்கிறது. மறவர் குலமங்கை நீ தான். அவன் இப்படிச்சொன்னான். அவன் பிரியமுடியாமற் பிரிந்தான். அப்பொழுது வானம் வெடித்து மழை பொழிந்தது. சொக்கம்மாவின் சிந்தனை நாலாபக்கங்களிலும் வட்டமிட்டது.

ஆங்கில கும்பினி ஆதிக்க வெறியர்களுக்கும் வீரபாண்டிய கட்டப்பொம்மனுக்கும் போர்! போர்! போர்! போர்ப்படைகள் போர்க்களத்தில் போரிடுகின்றன. எங்கும் செங்குருதி போராட்டம். சாகும் சடலங்களின் சாஒலம்; கதறல்; கரகரப்பு.

கும்பினிப் பட்டாளத்தின் தளபதி லெப்டினன்ட் காலின்ஸ் தலைமையில் போர் நடக்கிறது. 'டுமீல்' 'டுமீல்' என்று துப்பாக்கி வேட்டுக்

மறுபுறம் "வீரபாண்டியன் வாழ்க!" என்ற வாழ்த்தொலி வானைமுட்ட தன் மானத் தமிழர் கூட்டம் போரில் நான்முந்தி நீ முந்தி என்று முண்டி அடிக்கிறது.

"ஆ......!ஊ......!ஐயோ!" மரண ஓலம் அங்கு எங்கும் எதிரொலிக்கின்றது. யுத்தம் தலைகால் தெரியாது மிக உக்கிரமாக நடக்கிறது. வெள்ளைத் தேவனின் வீரமுழக்கம் அந்த யுத்த களத்தில் முழங்குகின்றது.

"செந்தமிழ் நாட்டுச் செங்குட்டுவர்களே! சேர பாம்பரையினரே! பாண்டியனின் வீரர் திருக்கூட்டத்தினரே! முன்வைத்தகாலைப் பின் வைக்காது மேலும் மேலும் முன்னேறுங்கள்! மாளிகைப் பொருள்களில் ஒருசிறு பொருளாயினும் எதிரிகள் வசம் சிக்கிவிடாது காப்பாற்றுங்கள். கடைசித் துளி இரத்தம் உங்கள் உடலிலிருந்து கீழே சிந்தும் வரை போராடுங்கள். உலகத்தில் உன்னதமாக வாழ்ந்தவர்கள் நாம். பிறர்க்குப் புறமுதுகு காட்டி ஓடாத பரம்பரையினர் நாம். முடியுடை மூவேந்தர்களின் வீர இரத்தம் ஓடும் வீரர்கள் நாம். கடல் கடந்து வாணிபம் செய்தவர்கள் நாம். கப்பலோட்டியவர்கள்நாம். பர்மா தேசத்தைக் கைப்பற்றி ஆண்ட பரம்பரையினர் நாம். கங்கைக் கரையிலே, கடாரத்திலே, இமயத்தின் விளிம்பிலே தமிழ்க் கொடி நாட்டித் தலைநிமிர்ந்து வாழ்ந்த தமிழ்க் குலத்தைக் காப்பாற்றுங்கள். இப்பொழுது உங்கள் பொறுப்பு மகத்தானது.

பிறந்த பொன்னாட்டைப் பிந்திவந்தார் ஆட்சிசெய்ய நாம் அடிமைகளாக வாழக் கூடாது. அடிமை வாழ்வு தமிழன் அகராதியிலேயே காணக்கிடையாது. காட்டுங்கள் உங்கள் கட்டுப்பாடான வீரத்தை. வெட்டி வீழ்த்துங்கள் வெள்ளையர் பட்டாளத்தை. வெற்றி நமக்கே!

அப்பொழுது ஒரு இளைஞன் வெள்ளையத் தேவன் முன் நின்றான்.

"அடே! நீயார்?" தன் இனத்தைக்காட்டிக்கொடுக்கும் கயமைத்தனத்தின் சின்னமான எட்டயபுரத்து எட்டப்பன் உளவாளா?"

அந்த இளைஞன் வீராவேசம்கொண்ட வெள்ளையத்தேவன் முன் மோதிரமொன்றை நீட்டினான். மோதிரத்தைப் பார்த்த வெள்ளையத் தேவன் வியப்புற்றான்.

தகப்பன் கட்டப்பொம்மன் அவனுக்களித்த மோதிரம் அது. அவன் அதைத் தன் ஆருயிர்க் காதலி சொக்கம்மாவிடம் தன் அன்பின் சின்னமாக அன்பளிப்புச் செய்தது.

"ஆ! என் சொக்கம்மாவா உன்னை அனுப்பினாள்?" என்று வாஞ்சையுடன் கேட்டு மோதிரத்தை வாங்கினான்.

"ஆம், சொக்கம்மாதான் அனுப்பினாள். போர்க்களத்திலிருந்து உங்கள் வெற்றிச் செய்தியையோ, மரணச் செய்தியையோ முதன் முதல் கொண்டு செல்லும் பொறுப்பில் இருக்கிறேன்" இந்தவேளையில் கோட்டை

தகர்க்கப்படுவதைக் கண்ட வெள்ளையத்தேவன் "தம்பி! இப்பொழுதே ஓடு! ஒரு கணமும் தாமதிக்காதே! கோட்டை இடிகிறது. கடைசி மூச்சு உள்ளவரை போராடத் துணிந்தோம். மன்னரிடம் சென்று கோட்டையைவிட்டு வெளியேறும்படி செய்தி சொல். இந்த மோதிரத்தை அவரிடம் கொடு. ஓடு ஓடு......" ஆவேசமாக அனல்கக்கக் கத்தினான்.

இளைஞன் ஒரே ஓட்டமாக ஓடினான். போர் மேலும்மேலும்மோசமான கட்டத்தை அடைந்தது.

"ஆ......" என்று ஒரு அலறல். வெள்ளைத் தேவன் இடியிடித்தாற்போற் சிரித்தான். அப்படி 'ஆ' என்று ஓலமிட்டு உயிர் பிரிந்தவன் யார்? அவன்தான் லெப்டினன்ட் காலின்ஸ். வெள்ளையத் தேவனின் கூரிய கத்தி அவனுயிருக்கு இறுதி தேடியது.

அவன் சாவில் மகிழ்ந்திருந்த போது "ஐயோ! அம்மா என்று அவன் வாய் குழறியது. அவன் மார்பில் இரத்தம் வடிந்தது. அப்பொழுது "ஐயோ! அத்தான்—இப்படிக் கேட்டது ஒரு குரல்.

"ஆ! என் அருமைச் சொக்கம்மாவா? நீயா இளைஞனாக மாறு வேடத்தில் வந்தாய், செய்தியை மன்னருக்குச் சொன்னாயா கண்ணே?

"மட மன்னர் வெளியேறி விட்டார்" இதைக் கூறிவிட்டு விம்மி, விம்மி, அழுதாள் அவனின் இதய கீதம், இன்ப நாதம் சொக்கம்மா.

"இப்போதுதான் அமைதி ஏற்பட்டது. என் இலட்சியம் நிறைவேறியே தீரும். தமிழ் நாட்டில் எங்குமுள்ள பாளையக்காரர்களை ஒன்று திரட்டி தமிழகத்தை விட்டே வெள்ளையரை விரட்டுவார் மன்னர். வாழ்க வீர பாண்டியன்! வாழ்க தமிழ் நாடு! அவன் ஆத்மா அமரத்துவமானது.

(13-ம் பார்க்க பார்க்க)

# சித்த வைத்திய வளர்ச்சிக்கு சென்னை சர்க்கார் ஆதரவு

## சுகாதார மந்திரி மாணிக்கவேலர் உறுதி

### ஆயுர்வேத, யுனனி, ஹோமியோபதி மருத்துவ சிறப்புப் பற்றி சித்தர் விழாவில் கருத்துரைகள்

"சித்த வைத்திய முறை சிக்கனமானதும் சிறந்த பயன் தரத்தக்கதுமாகும். துரதிர்ஷ்டவசமாகப் பலர் இதுபற்றி இன்று நன்கு தெரிந்துகொள்ளவில்லை. எனினும் ஆங்கில வைத்திய முறை நீங்கலாக, ஆயுர்வேத, யுனனி, ஹோமியோபதி வைத்திய முறைகள் இன்றும் நாட்டில் செல்வாக்குடன் இருந்து வருவதைக் காண்கிறோம். எனவே சித்த வைத்தியர்கள் இம் மருத்துவ முறையின் எதிர்காலம்பற்றி நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இதை வளர்க்க முன்வரவேண்டும். அரசாங்கமும் இம்மருந்துவ முறை ஆக்கத்துக்கு இனிமேல் போதிய ஆதரவு காட்டிவரும்."

சென்னை சுகாதார மந்திரி மாணிக்கவேலர், திருவல்லிக்கேணி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலையில் அண்மையில் நடந்த சித்தர் விழாவில் பேசும் போது மேற்கண்டவாறு சொன்னார்.

சுகாதாரமந்திரி மாணிக்கவேலர் மேலும் பேசுகையில் ஆங்கில வைத்திய முறை எத்தனையோ கிராமங்களுக்கு இன்னமும் எட்டவில்லையென்றும் அவற்றிற்கெல்லாம் சித்த வைத்திய முறையே ஏற்றதென்றும் கூறினார்.

சித்த வைத்திய முறையைப் பரப்பும் நோக்கத்துடன் நடத்தப்பட்ட இவ் விழா ... தலைமையில் நடந்தது.

காலையில் திரு ஏ. கஜபதி

வலம் நடைபெற்றது. திருமூலர் மற்றும் பதினேழு சித்தர் படங்களையும் நன்கு அலங்கரித்து, புஷ்ப விமானத்தில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு வந்தனர். மத்தியானம் ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது.

பிற்பகல் மத்திய சித்த வைத்திய கவுன்சிலின் கூட்டம் டாக்டர் (சாது) தேவதாஸ் தலைமையில் நடைபெற்றது. சென்னை முதன் மந்திரியைச் சந்தித்து சித்த வைத்திய முறையைப் பரப்புவதற்கு ஆதரவு தேடத் தூது செல்லவேண்டுமென்று பொதுச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

திரு. கஜபதி தமது தலைமை உரையில் கீழ்க்கண்டவாறு சொன்னார்;

"தமிழ் நாட்டின் தொன்மையான மருத்துவ முறை மருத்துவமாகும். இத்தொடர்பில் சிறப்பான உண்மைகள் பல திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. தமிழ்ப் பகுதிகளை உள்ளடக்கிக்கொண்டுள்ள மாநில ஆட்சியைப் பெற்றுள்ளோம். அத்துடன் தமிழும் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. எனவே நமது சொந்த மருத்துவ முறையை வளப்படுத்துவதில் நாம் கருத்துச் செலுத்தவேண்டும்."

டாக்டர் டபிள்யூ. வி. பெருமாள் (முன்னாள்பொது சுகாதார துணை அலுவலர்) பேசுகையில், "உள்நாட்டு மருத்துவக் கல்லூரியில், சித்த மருத்துவம் பற்றி ஆராயவும், நன்கு கற்கவும் தேவையான ஏற்பாடுகளை ஆட்சியினர் செய்து தரவேண்டும்" என்றும், டாக்டர் வி. சாதுநாராயணசாமி பேசுகையில், "சித்த மருத்துவம் தனிச்சிறப்புவாய்ந்தது; அம்மருத்துவ முறையை இளைஞர்களுக்குக் கற்பிக்க தமிழ் நாடு முழுதும் பள்ளிகளைத் துவங்கவேண்டும்" என்றும் கூறினார்கள்.

கூட்டத்தில் மந்திரிக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 1956 வருஷத்திய சிறந்த நடிகன் - நடிகை:

## சிவாஜி கணேசன்-பானுமதி

:0:

## சிறந்த தமிழ்ப் படம்: "அலிபாபா...."

0

### சினிமா ரஸிகர் சங்கத்தின் தீர்ப்பு

சென்ற வருஷத்திய சிறந்த தமிழ் நடிகை என்று பானுமதியை சினிமா ரசிகர்கள் சங்கம் தேர்ந்தெடுத்தது. சிறந்த தமிழ் நடிகன் என்று சிவாஜிகணேசனை சினிமா ரசிகர்கள் சங்கம் தேர்ந்து எடுத்தது.

சிவாஜிகணேசன் போன வருஷம் சிறந்த நடிகர் பரிசை வாங்கினார்.

பானுமதி சிறந்த நடிகை பரிசை பெறுவது இது மூன்ருவது தடவை. போனவருஷமும் அதற்கு முன்தின வருஷமும் இந்த பரிசு பானுமதிக்குத்தான் கிடைத்தது.

தி. மு. க. தலைவர் அண்ணுதுரை எழுதிய "ரங்கோன் ராதா" வில் உணர்ச்சிமயமாக நடித்ததற்காக பானுமதி சிறந்த நடிகையாக தேர்ந்தெடுக்கப் பட்டார். அதேபடத்தில் அபாரமாக நடித்ததற்காக சிவாஜி கணேசன் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

#### சிறந்த படம் அலிபாபா

போன வருஷம் தயாரிக்கப் பட்ட படம் "அலிபாபாவும் 40 திருடர்களும்" என்று சங்கம் தேர்ந்து எடுத்தது. மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி. ஆர். சுந்தரம் டைரக்ட் செய்து தயாரித்த படம் இது. தமிழில் வெளி வந்த முதல் முழுநீள கலர் சினிமா படம் இது.

#### குல தெய்வம்

எஸ். கே. பிக்சர்ஸ், ஏ. வி. எம் கூட்டுறவில் தயாரித்த "குலதெய்வம்" சினிமா படம். மற்ருெரு சிறந்த படமாக தேர்ந்தெடுக்கப் பட்டு, அதற்கு விசேஷ பரிசு கொடுக்கப்படும்.

#### ராஜேந்திரன்

"குலதெய்வம்" சினிமாவில் நன்ருக, நடித்ததற்காக, எஸ். எஸ். ராஜேந்திரன் "சிறந்த உப நடிகர்" என்று தேர்ந் தெடுக்கப்பட்டார்.

#### எம். என். ராஜம்

"மாதர்குல மாணிக்கம்" சினிமாவில் திறம்பட நடித்ததற்காக எம். என். ராஜம் சிறந்த உப நடிகையாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

#### சிறந்த டைரக்டர்!

சிறந்த டைரக்டர் என்று 'காலம் மாறிப்போச்சு' சினிமாவின் டைரக்டரான தாபி சாணக்கியா தேர்ந்து எடுக்கப்பட்டார்.

#### அஞ்சலிக்கு பரிசு

சிறந்த தெலுங்கு நடிகை என்று அஞ்சலிதேவியும், சிறந்த தெலுங்கு நடிகர் என்று நாகேசுவரராவும் அறிவிக்கப்பட்டார்கள். "எது நிஜம்" என்ற படம் சிறந்த தெலுங்கு படம் என்று அறிவிக்கப்பட்டது.

"சிறந்த மலேயாள நடிகை அம்பிகா; சிறந்த மலேயாள நடிகர் சத்தியன்; சிறந்த மலேயாள படம் "ராசேன் என்ன பவுரன்" என்று சினிமா ரசிகர் சங்கம் தேர்ந்தெடுத்தது.

வைபவத்துக்கு மந்திரி சுப்பிரமணியம் தலைமை வகித்தார். தமிழ் சினிமா படங்கள் மோசமாக இருப்பது பற்றி வெட்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

திரைப்பட விமர்சனம்:

## எங்கள் வீட்டு மஹாலக்ஷ்மி

கதையிலே நல்ல கருத்து, இசையிலே இனிமை, பேச்சிலே சுவாரஸ்யம், நடிப்பிலே கச்சிதம் மிளிரக் கலகலப்பாக ஓடும் படத்தைக் கொழும்பு சென்ட்ரல் திரையில் மே மாதம் 2ந் திகதி முதல் பார்க்கலாம். ஆம், அதுதான் "எங்கள் வீட்டு மஹாலக்ஷ்மி".

வீட்டுக்கு மஹாலக்ஷ்மியாக விளங்கிவந்த ஒரு சாதாரணப் பெண்ணின் கதை. பிரபல கதாசிரியர் சரத் சந்திரா எழுதியது. எதுவித குளறுபடியுமின்றிச் சலனமாக ஓடும் வகையில் படமாக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொருவர் வீட்டிலும் நடப்பதும் நடக்கக்கூடியதுமான சம்பவங்களே கதையில் வருகின்றன.

எஸ். வி. ரங்கராவ் குடும்பக் கவலையற்ற வக்கீல் கணபதியாக நடிக்கிருர். அவரின் அநுயாசமான குணசித்திர நடிப்பை இப்படத்தில் காணலாம்! மனைவி அன்னபூர்ணு (கண்ணும்பா) குடும்பத்தில் ஏற்படும் கொந்தளிப்பைச் சொல்லி அதைத் தீர்க்க வழி கேட்டாலும் சரி, கணவனென்ற உரிமையின் பேரில் ஏதாவது குஷியாகப் பேச்சுக் கொடுத்தாலும் சரி எதற்கும் பெருந்தன்மையான பொறுப்பற்ற பதில்களை அவர் கொடுத்துவிட்டுத் தானும் தன் வேலையுமாக இருப்பது மிகவும் இயற்கையாக அமைந்து பார்ப்போரைப் பரவசப் படுத்துகிறது. ஸ்ரீதர் எழுதிய சிறு சிறு வசனங்களை சுவையாகச் சொல்லிவிடுகிருர் ரங்கராவ்.

ஹாஸ்ய விருந்தளிக்கும் பொறுப்பை தங்கவேலுவும் சுந்தரிபாயும் ஏற்றுத் திறம்பட அதைச் செய்து முடித்திருக்கிருர்கள். நாலைந்து குழந்தைகளுக்குத் தாய் தந்தையராக அவர்கள் நடிக்கிருர்கள். நடிப்பின் ஒவ்வொரு பகுதியிலும் ஹாஸ்ய ரசம் சொட்டாமலில்லை. "உன்னைத் தூக்கி வெய்யிலே போட" என்ற சொற்ருெடர் இப்போது பலர் வாயிலும் அடிபடத் தொடங்கியிருக்கிறது. இதைத் தங்கவேலுவின் வாயிலிருந்து வரக் கேட்டாற்ருன் அதன் சுவையை உள்ளது உள்ளபடி அனுபவிக்கமுடியும். அடிக்கொரு தடவை இந்தச் சொற்ருெடரை அவர் உபயோகித்தபோதிலும் அவர் இன்னுமின்னும் அப்படிச் சொல்லக்கூடாதா என்று படம் பார்ப்பவர்கள் அங்கலாய்க்குமளவுக்கு அது ரசமாயிருக்கிறது.

ஒரு கட்டத்தில், வைகுந்தமாக நடித்த நம்பியாரோடு சேர்ந்து தனது தம்பி கோபுவாக நடித்த நாகேஸ்வரராவைத் தாக்குகிருர். நம்பியார் நாகேஸ்வரராவுக்கு நீட்டிய துப்பாக்கியைச் சண்டையில் நாகேஸ்வரராவ் பறித்துக்கொள்கிருர். எவருலும் அதைக் கொண்டு தம்பியாரைப் பதிலுக்கு அவர் அச்சுறுத்தவில்லை. "பேடிப் பயலே! போய்த் தொலை. இந்தா உன் துப்பாக்கி" என்று சொல்லி, அதை நம்பியாரிடம் கொடுத்துவிடுகிருர்.

இதைச் சற்று ஒதுங்கி நின்றே பார்த்துவிட்ட தங்கவேலு, "அட! என் தம்பி எவ்வளவு யோக்கியமா நடந்துக்கிட்டான்" என்று சொல்லித் தன் தம்பியின் பண்பை மெச்சிக் கொள்கிருர். இந்தக்கட்டம் ரொம்பவும் அபாரம்.

மொத்தத்தில், தங்கவேலு—சுந்தரிபாய் கூட்டு நடிப்பு உயர்வாகவே இருக்கிறது.

இதுவரை தங்கவேலு தாம் நடித்த படங்களெல்லாவற்றைக் காட்டிலும் எங்கள் வீட்டு மஹாலக்ஷ்மியிலேயே மிகச் சிறப்பாக நடித்திருக்கிருர். இதை அவரே ஒப்புக் கொள்வார்.

வீட்டு மஹாலக்ஷ்மியாகச் சுசீலா பாத்திரமேற்று நடிக்கும் சாவித்திரி வழக்கமான தனது சோபித நடிப்பை இதிலும் நல்கியிருக்கிருர். கோபுவாக நடிக்கும் நாகேஸ்வரராவ், வைகுந்தமாக நடிக்கும் நம்பியார சஞ்சலாவாக நடிக்கும் ராஜசுலோசன இவர்கள் பரவாயில்லை.

கண்ணும்பா தனது இயல்புக்கு மாருக இதில் சாந்த சொரூபியாகக் கச்சிதமாக நடித்திருக்கிருர்.

இப்படத்தில் 'ரூட்' என்ற நாயும் நடித்திருக்கிறது. கடைசிக் கட்டத்தில் நாய் ஓர் முக்கிய அங்கமாக விளங்குகிறது. தஸ்தாவேஜை திருடிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற வைகுந்தத்தைத் துரத்திப்பிடித்து காலிலே காயத்தோடு அதை மீட்டுக்கொண்டு வரும் "ரூட்"டின் அழகான நடிப்பைப் பாராட்டாமலிருக்க முடியாது.

அருமையான பாடல்கள் சில இப்படத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. படப்பிடிப்பிலும் குறைசொல்வதற்கில்லை.

டைரக்டர் ஆதுர்த்தி சுப்பாராவ் எங்கள் வீட்டு மஹாலக்ஷ்மியை ஓர் வெற்றிப்படமாக்கியிருக்கிருர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.



எங்கள் விட்டு மகாலக்ஷ்மியில் நடிக்கும் எஸ். வி. ரங்கராவ் (வக்கீல் கணபதி) கே. ஏ. தங்கவேலு (சுப்பு) கண்ணும்பா (அன்னபூர்ணு) சுந்தரிபாய் (அனுசூயா) ஆகியோரை இப்படத்தில் காணலாம், கொழும்பு சென்ட்ரலில் மே 2-ந் திகதி முதல் இப் படம் காண்பிக்கப்பட விருக்கிறது.

## முத்தம் பற்றி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தூங்க வைத்தல், முழுமையாகத் தூக்கித் திரிதல் முதலான பார்ப்போர் உள்ளத்தில் காதல் கிளர்ச்சியை ஏற்படுத்தி உடலில் கிளு கிளுப்பை உண்டாக்க கூடிய சம்பவங்கள் சேர்க்கப்படுகின்றன.

#### சினிமாவில் நடப்பது சரியா?

"பலபேர் முன்னிலையில் செய்யப்படும் அவ் வேலைகள் மட்டும் மிக ஒழுக்கமானவையா? இவற்ருல், இயற்கையாகவே ஏற்படும் ஆசை அதிகரிக்கப்படுகிறது. ஆசையை அடக்குவது எப்பொழுதும் ஆபத்து. அடக்குவதற்குப் பதில் வரம்பு போட்டு கட்டுப்படுத்துவதே சிறப்பு. முத்தமிடுவதால் ஆசை தணிந்து கொள்கிறது. அனர்த்தம் எதுவும் இல்லை. எனவேதான் மேல் நாடுகளில் முத்தமிடுவது வரவேற்கப் படுகிறது. பெண்கள் மீது பலாத்காரம், கற்பழிப்பு முதலான குற்றங்கள் மற்றும் இவற்றை அடிப்படையாகக் கொண்ட கொலைகள், நம் நாட்டில் அதிகரித்து வருவதற்கு ஒரு காரணம் ஆசையை அடக்க வேண்டும்-முத்தமிடுவது கெட்டது, கேவலம் என்ற கொள்கைகள் நமது சமுதாயத்திலே வேருன்றி இருப்பதுதான்"—இப்படிக் கூறுகிருர்கள் முத்தத்தின் ஆதரவாளர்கள்.

இது பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டிய பொறுப்பு வாசகர்களைப் பொறுத்தது. முத்த யுத்தத்துக்கு முடிவு கட்ட நான் தயாராயில்லை. வாசகர்கள் முடிவு கட்டும் வரை ரீஜெண்ட் தெருவுக்கும் விக்டோரியாப் பூங்காவுக்கும் விடுதலையில்லை. மாலை வேளையில் காதல் ஜோடிகளுக்குக் கரம் [illegible] வரவேற்று உபசரிக்க [illegible] டிய பொறுப்பு அவற்றிற்கு தொடர்ந்து இருந்து வரும்.

### அ. இ. அ. பா. தமிழர் ஆசிரியர் சங்கம்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்க பொலநறுவைக் கிளையின் ஆண்டு விழா சென்ற 30-4-57 மாணிக்கம்பிட்டி அரசினர் தமிழ்ப் பாடசாலையில் பண்டிதர் திரு மு. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. அப்போது பின் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

1. திருமலைத் தியாகி நடராசனின் மரணத்துக்கு அநுதாபம் தெரிவித்தல்.

2. தமிழின் 'நியாயமான அளவு உபயோகம்' என்பது சிங்களத்திற்குரிய அதே அளவு அந்தஸ்தைத் தமிழுக்கும் அளித்தலாய்இருக்க வேண்டும்.

3. அரசினர் சேவையிலுள்ள சகல ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதத்தைக் கவனியாது 2ம் வகுப்பு இலவச புகையிரதச் சீட்டு வழங்கி அரசாங்கம் அவர்களைக் கௌரவிக்க வேண்டும்.

4. பொலநறுவைப் பகுதியில் மூன்று வருடங்களுக்கு, மேற்கடமை பார்த்த ஆசிரியர்களை உடனடியாகவேறு பகுதிகளுக்கு, வசதி நிரம்பிய இடங்களுக்கு—அரசாங்கம் மாற்றிவிட வேண்டும்.

5. வித்துவான் பண்டிதர் பட்டங்கள் பெற்றவர்களைச் சர்வ கலாசாலைப் பட்டதாரிகளின் அந்தஸ்துக்கு உயர்த்த வேண்டும்.

### பத்தாவது ஆண்டு நிறைவு விழா

பண்ணகம் வடக்கு அம்பாள் சனசமூகநிலைய கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா சித்திரை புதுவருடத் தினத்தன்று வலிமேற்குக் காரியாதிகாரி திரு எம். நடராசா தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், ஆசிரியர் வி. பொன்னம்பலம், உள்ளூர் ஆட்சி விசாரணையாளர் திரு வி. சி. சண்முகம், புலவர் கா. வேல்முருகன், திரு ஏ. அமிர்தலிங்கம் எம். பி., செல்வன் வ. சுப்பிரமணியம், சுகாதார பரிசோதகர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். ஈற்றில் புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவுடனும் "வீரவாள்" என்ற சிறந்த நாடகத்துடனும் விழா இனிது முடிவுற்றது.

---

### புரட்சிக் கவிஞரால் ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சில நிமிடங்கள் கழிந்தன. "அல்லாஹ்" என்ற வார்த்தையை கவிஞரின் வாய் உச்சரித்ததும் கண்கள் தாமாக மூடிக்கொண்டன. 1938ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி அதிகாலை 5-15 மணிக்குக் கவிஞர் ஆவி பிரிந்தது.

தனது 65 வயதிலே இவ்வுலக வாழ்வை நீத்த இக்பால் அரபி, உருது இலக்கியங்கள் முன்னேற்றம் அடைய தம் வாழ்நாளையே அர்ப்பணித்தார். அவரது அமரத்துவம் பெற்ற கவிதைகள் [illegible] இன்றும் [illegible] நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன.

### இலங்கை .

(10ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள ஒரு கழகம் இருப்பதைவிட இல்லாமல் இருப்பதே மேல். இங்குள்ள தி. மு. க. வினர்களைக் கொண்டே தாய்த் தமிழகத்திலுள்ள தி. மு. க. வினர்களையும் இங்குள்ளவர்கள் எடைபோடுகிருர்கள். இங்குள்ள தி. மு. கழகம் எப்படியோ அங்குள்ளதும் அப்படியே என்று நம்பிக்கொள்கிருர்கள். இங்குள்ள தி மு. க. தலைவரையும் செயலாளரையும் கொண்டே அங்குள்ள எமது அண்ணு, நெடுஞ்செழியன் ஆகியோர் மதிப்பிடப்படுகின்றனர். எனவே இங்குள்ள கழகத்துக்கும் கழகத்தினருக்கும் தமது பொறுப்பை உணர்ந்து பணி செய்ய முடியாவிட்டால் தாய்த் தமிழகத்துத் தி. மு. க. வுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் இழுக்காவது தேடித் தராமல் இருந்தால் அந்த ஒரு சேவையே போற்றத்தக்கதாகும்.

திரு சீனிவாசன் இலங்கைத், தி. மு. க. வையும் அதிலிருந்து விலகிக்கொண்டதாகச் சொல்லப்பட்ட நபர்களையும் கண்டித்து மேலும் பேசுகையில் இறுதியாகச் சொன்னதாவது:

"இன்றுள்ள நிலையில் இலங்கைத் தி. மு. க. பொறுப்புணர்ச்சியோடு இயங்கி அரியசாதனைகளைச் சாதித்து பெயரும் புகழும் ஈட்டி வளரவேண்டுமானல் கழகத்தில் கிளர்ச்சிக்காரர் (Rebels) அல்ல, புரட்சிக்காரர் (Revolutionaties) தான் வேண்டும். கிளர்ச்சி கழகத்தை தளர்ச்சி யடையச் செய்யும். புரட்சி வளர்ச்சியடையச் செய்யும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத் தமிழ் நங்கை

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஐயோ! அத்தான்! ஐயோ அத்தான்! கண்ணீரும் கம்பலையுமாகச் சொக்கம்மா காட்சி தந்தாள். அழுதாள்; புரண்டாள்; அரற்றினுள். குமுறும் எரிமலையானுள். அவள் கண்களில் அனல் கக்கியது. மறுகணம் அவள் வீரத்தின் திருவுருவானுள். வெள்ளையரைத் தமிழ் நாட்டிலிருந்தே விரட்டி யோட்ட வேண்டுமென்ற வீர உணர்ச்சி அவள் உள்ளத்தில் புத்துயிர் ஊட்டியது. சிரித்தாள். அந்தப் போர்க்களமே அதிரும்படி சிரித்தாள். பின் சங்கற்பம் செய்தாள்.

ஆதிக்க வெறிபிடித்த வெள்ளையரே! வாணிபம் செய்ய வந்து இங்கு வதியும் தமிழ் மக்களை அடக்கிஆளத் துணியும் ஆங்கிலேயரே! தமிழராகத் தப்பிப் பிழைத்து வெள்ளையருக்குத் தன் இனத்தைக் காட்டிக் கொடுக்கக் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கும் கூலிப் படையே! ஒரு வெள்ளையத் தேவனுடன் வீரத் தமிழரது வீராவேசப் போர் முடிந்து விடவில்லை. தமிழ் நாடு—தமிழர் தாழ்ந்துவிடவில்லை. தமிழர் மான வீரம் வீழ்ந்து விடவில்லை. தமிழர் தோல்வி கண்டறியாத திருக் கூட்டத்தினர். ஆயிரமாயிரம் வெள்ளையத் தேவர் உண்டித்த மண்ணில் ஒரு வெள்ளையத் தேவனின் மரணத்தைக் கண்டு வெற்றிச் சிரிப்புச் சிரிக்கும் கும்பினிப்பட்டாளமே! இந்த நாட்டிலுள்ள மூன்று கோடித் தமிழினத்தின் மூல பலத்தை எண்ணிப் பாருங்கள்! உணர்ந்து பாருங்கள். எட்டுத் திக்கும் வெற்றி முரசு கொட்ட பாராண்ட தமிழர் பரம்பரை உங்களை நிச்சயம் கருவறுக்கும். கட்டியடிக்கும். மறத்தை மாய்த்து அறத்தை வளர்க்க—வெள்ளையனின் ஆணவமூட்டறுக்க—ஆதிக்க வெறியை வெட்டி வீழ்த்த எங்கள் கண்ணகி குலம் இதோ விழித்துவிட்டது! வாளேந்தி விட்டது! அவளும் போரிற் பங்கெடுத்தாள். பெண்மையைப் பேணிக் காத்து வளர்க்க முன்னின்று போர் செய்தாள். ஈற்றில் அவள் பொன்னுடலில் ஊறு ஏற்பட்டது. அவள் உடலில் வெட்டுக் காயங்கள். குபீரெனச் செங்குருதி பாய்ந்தது.

"அத்தான்.........!"

"அத்தான்.........!"

"இதோ நானும்.........!"

அழுது துடித்தாள், அனலிற் புழுவானுள். காதலின் அமரத்துவம், நாட்டின் மேற் கொண்ட பாசத்தின் பிரதிபலிப்பு அவள். காதலன் சென்ற இடத்தை நாடி காதலியின் ஆத்மாவும் கணப் பொழுதில் சென்றடைந்தது.

## கடமை

(14ம் பக்கத் தொடர்ச்சி)

லாம். பூமி தன் வேலையைச் செய்கிறது. சந்திரன் தன் வேலையைச் செய்கின்றுன். உரிய காலத்தில் மழை பெய்கிறது. பனி வீசுகிறது. காற்றுக்கள் மாறி வீசுகின்றன. சோர்வின்றி வேற்றுமை பாராட்டாது சமமாகத் தன் கடமைகளை இயற்கை புரிந்து வருதல் போலவே மனிதனும் தன் கடமையைத் தவருது செய்ய வேண்டும்.

—செல்வி பா. விமலசுந்தரி

## சந்திர மண்டலத்துக்குச்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

குச் செல்வது குறித்து அவ்வளவு நம்பிக்கையாய் மதிப்பிடமாட்டேன். இந்த ஆண்டு முதன் முதல் மனிதன் செயற்கைக் கிரகம் செய்துவிட்ட ஆண்டு என்று பெயர் பெறலாம். அது சின்னஞ்சிறிய செயற்கைக் கிரகமாயிருக்கும். ஆயினும் பல கட்டங்களில் வெளிப்பட்டுக் கிளம்பும் 'ராக்கெட்'டில் ஒரு ஆளை வைத்து அவன் சந்திர மண்டலத்து இழுப்புச் சக்தி இயங்கும் இடம்போய்ச் சேரும்படி அந்த ராக்கெட்டை அனுப்பலாம் என்றும் அங்கே அவன் விஞ்ஞானத் துறையில் காண வேண்டியவைகளைக் காணக்கூடும் என்றும் அவன் ஒருவேளை உயிரோடு சந்திரனில் இறங்கி அதன் பின் உலகத்துக்குத் திரும்பி வரவும் கூடும் என்றும் சொல்லும் இவையெல்லாம் ஜுல்ஸ் வெர்ன் காணத்தக்க விண் கனவுகளேயன்றி வேருென்றும் இல்லை. வருங்காலத்தில் விஞ்ஞான முன்னேற்றங்கள் என்னென்னவெல்லாம் ஏற்பட்டாலும், மனிதன் சந்திரனுக்குப் போகும் பயணம் மட்டும் ஒருநாளும் நடைபெருது என்று துணிந்து கூறுவேன். மனிதன் இயற்கையிலே இந்த மண்ணுலகத்துக்கே உரியவன்; இதனை விட்டு விட்டு அவன் வேறு கிரகங்களைத் தேடி வெளிக் கிளம்பியதாக எண்ணக்கூடியது அவனது 'விஞ்ஞானக் கற்பனை' ஒன்றேயாகும்!

இதையெல்லாம் விட்டு விட்டு அவன் தன் தலை சிறந்த பெரிய முயற்சிகளை இந்த உலகத்து இன்றைய நிலைமையைச் சீர்திருத்துவதற்குப் பயன்படுத்திருல் என்ன? மனிதப் பொதுத் துறையிலும் விஞ்ஞானத் துறையிலும் கணக்கிலடங்காத பிரச்னைகள் இங்கே நாம் உடனே உண்மையாக முயன்று தீர்க்க வேண்டிக் கிடக்கின்றனவே.

### வானொலி நிலையங்களின் இன்றியமையாமை

வெவ்வேறு இனத்தாரிடையும் வெவ்வேறு நாட்டினரிடையும் உள்ள தடைகளைப் படிப்படியாய்க் குறைப்பதற்குச் செய்திப் போக்குவரத்துத் துறையில் ரேடியோவை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம். பயன்படுத்துகிருர்கள். இப் போராட்டத்தில் வாய்ஸ் ஆப் அமெரிக்கா சுதந்திர ஐரோப்பா வானொலி இவை போன்ற நிலையங்கள் முன்னணியில் விளங்குகின்றன. அன்ருட நடவடிக்கைகளுக்குத் தாராளமாக உவந்து கொடுக்கும் கோடானு கோடி அமெரிக்கருக்கு அது வியப்பூட்டும்; அவர்கள் தாராளமாக உவந்தளித்தாலும், சுதந்திரத்துக்காக அறப்போர் புரியும் வகையில் இவ்வளவுதூரம் இன்றியமையாமல் இருக்கும் இந்த வானொலி நிலையங்கள் தீவிரமாகவும், கவனமாகத் திட்டமிட்டும், கருமமே கண்ணுகவும் நடப்பதைத் தக்கவாறு கண்டுபிடிக்க முடியாதவர்களாயிருக்கிருர்கள்.


4-வது புகழ்பெற்ற வாரம்!

எல்பின்ஸ்டன் ரெக்ஸி

எம். ஜி. ராமச்சந்திரன், பி. பானுமதி

நடிக்கும்

தாய்க்குப்பின் தாரம்

செல்லமகால்

வைஜயந்திமாலா நடிக்கும்

மர்ம வீரன்

கெயிட்டி

திலிப்குமார், நிம்மி நடிக்கும்

வானரதம்

(தமிழ்)



அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் திரையிடப்படுகிறது

அசோக்குமார் - மீனுகுமாரி - ரூப்குமார் - ஜீவன் - சுனில்டட்

முதலியோர் திறம்பட நடிக்கும்

ஏக்-ஹி-ரஸ்தா (ஓரே வழி) (ஹிந்தி)

சென்ட்ரல் (கொழும்பு)

தினசரி மாலை 6-30, இரவு 9-30,
சனி, ஞாயிறு பகல் காட்சி: பிற்பகல் 3 மணிக்கு
ஞாயிறு காலைக் காட்சி: 10 மணிக்கு.

மகத்தான ரம்ழான் திரை விருந்து!

2-2-57 வியாழன் முதல்! ஏழு திரைகளில் காட்சி !!

எங்கள் வீட்டு மகாலட்சுமி



நடனங்கள்: ஈ. வி. சரோஜா, சோப்ரா.

நடிகர்கள்: நாகேஸ்வரராவ்-சாவித்திரி-பி. கண்ணும்பா-எஸ். வி. ரங்கராவ்

எம். என். நம்பியார்-ராஜசுலோசனு-கே. ஏ. தங்கவேலு-சுந்தரிபாய் முதலியோர்.

கொழும்பில் வெற்றி முரசு கொட்டும் 11வது வாரம்!

சென்ட்ரல் (பருத்தித்துறை) முருகன் (ஜிந்துப்பிட்டி) ஜோதி (திருகோணமலை) சேதுபதி (மகாவெவ) சென்ட்ரல் (நாவலப்பிட்டி) அனேஜா (மட்டக்களப்பு)

சக்கரவர்த்தித் திருமகள்

ராணி (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6, இரவு 9-30
சனி, ஞாயிறு பகல் காட்சி 2,
ஞாயிறு காலை 10 மணி.

மலைக்கள்ளன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்

## வளர்மதி புதிய மருமக்கள்

1496 மீ. சபீயுல் முகமது நபீன், பொத்துவில்.
1497 இ. பஞ்சாட்சரம், நீர்வேலி.
1498 அ. கேதாரேஸ்வரி, காரைதீவு.
1499 அ. ஞானப்பிரகாசம், துறை நீலாவணை.
1500 சு. தில்லை சிவயோகநாதன், புத்தூர்.
1501 சி. யோசேப் வாஸ், வாகரை.
1502 ச. ஆ. மீரா லெவ்வை, பொத்துவில்.
1503 கோ. தில்லநாயகம், நாவலப்பிட்டி.
1504 எம். எம். ஜுனைது, காத்தான்குடி.
1505 வி. சகுந்தலாதேவி, மல்லாகம்.
1506 என். எம். கந்தசாமி, பண்டத்தரிப்பு.
1507 சு. சண்முகலிங்கம், கொழும்புத்துறை கிழக்கு.
1508 பொ. ஜெகநாதன், கொழும்பு 6.
1509 ப. அருள்பிரகாசம், கொள்ளுப்பிட்டி.
1510 சி. சிவபாக்கியம், அனுராதபுரம்.
1511 ஜெ. பேரின்பநாயகம், (செழியன்) மண்டூர்.
1512 செ. பேரின்பநாயகம், மண்டூர்.
1513 பொ. கி. கந்தசாமி, வல்வெட்டித்துறை.
1514 செ. வி. இறெஜினேல்ட், கொட்டாஞ்சேனை.
1515 க. பசுபதி, காந்தியூர்.
1516 அ. இராமச்சந்திரன், பண்ணாகம் தெற்கு.
1517 ஆ. சண்முகலிங்கம், ஆரவாய் கிழக்கு.
1518 பொ. அ. இராசரெத்தினம், தன்மக்கேணி.
1519 யூ. பேதுரு, மூதூர்.
1520 தொ. சரோசா, யாழ்ப்பாணம்.
1521 பொ. பத்மாராணி, மட்டுக்கொல்லை.
1522 வி. இந்திராணி, சுண்டிக்குளி.
1523 கா. குணநாயகம், பருத்தித்துறை.
1524 ஏ. எம். எஸ். ராஜ் நாவலப்பிட்டி.
1525 இ. கு. சிவகுமார், கோப்பாய்.
1526 த. புவனேசசிங்கம், கிரான்குளம்.
1527 த. சண்முகநாதன், இணுவில்
1528 வ. கதிரவேலு, நாதோலை.
1529 தை. மகேந்திரன், மட்டக்களப்பு.
1530 கு. கணேசசர்மா, ஏாரைநகர்.
1531 எஸ். எம். முகம்மது இக்பால், கண்டி.

## குறளோசை!

வள்ளுவன் தந்த
குறளோசை-வளர்
மாணவர்க் கேற்ற
குறளோசை!

தெள்ளு தமிழினிற்
கிள்ளைமொழி-பயில்
தேன் சொட்டு மின்பக்
குறளோசை!

மானில வாழ்வில்
வழிவகுக்க-ஒரு
மாமறை யான
குறளோசை!

தேனில வூடே
திளைத்து மகிழ்-சுனை
திக்கெட்டும் பாயும்
கவியோசை!

—''தில்லைத்துமிலன்''

## ஆசை

ஆசை மனிதர்க்கு மட்டுமன்றி மற்றைய சீவராசிகட்குமுண்டு. அவா, ஆவல், வேட்கை, பற்று, பாசம், விருப்பம், விழைவு, ஆர்வம், பிரியம் என்றெல்லாம் ஆசையைச் சொல்வதுமுண்டு. மக்களுக்கு ஆசை இருக்கத்தான் வேண்டும். ஆனால் அளவுமீறி இருக்கக் கூடாது. சிலருக்கு மண்ணாசை இருக்கும்; சிலருக்குப் பொன்னாசை இருக்கும்; சிலருக்குப் பெண்ணாசை இருக்கும்; சிலருக்கு எல்லா ஆசைகளும் இருந்தாலும் இருக்கும். ஆசைக்கு அளவு கிடையாது. ஆசைக்குக் காரணம் மனம்தான். அறிவு என்னும் கடிவாளத்தை மனம் என்ற குதிரைக்குப் போட்டு வழி நடத்தினல் ஆசை என்ற பெரும் பள்ளத்தில் யாம் விழாமற் தப்ப முடியும்.

—பொ. இராமையா

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 7.

பெயர்.............................................

பாடசாலை.........................................

விலாசம்...........................................

.............................................

................................ ................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## அனுபவம்

நூல்களை மட்டும் படிப்பதால் உண்மை அறிவைப் பெற்றுவிட முடியாது. பலரின் பேச்சுகளைக் கேட்பதாலும் நிறைந்த ஞானத்தை பெற இயலாது. சிந்தித்துத் தெளிந்தபோதிலும் சிறந்த அறிவை எய்த முடியாது. நல்ல பூரணமான உண்மை அறிவைப் பெறுவதற்கு அனுபவம் தேவை.

அனுபவசாலிகளே அறிவாளிகள் உழவு தொழிலைப் பற்றி நூலில் வாசித்தறிபவனோ—மேடையில் நின்று பேசுபவனோ—கவிதை புனைபவனோ—ஓவியம் வரைபவனோ—சிந்தித்துப் பார்ப்பவனோ சிறந்த உழவு தொழிலறிவு பெற்றவனாகான். பல வருடமாக உழவு தொழிலைச் செய்து அதன் ஒவ்வொரு கூறுகளையும் செய்துபார்த்து அந்த அனுபவம்மூலமாய்க் கண்டு தெளிந்தவனே உழுதொழிலறிஞனுவான். அனுபவம்மூலமே மெய்யறிவை அடைய முடியும்.

—மு. நித்தியானந்தன்

## அமைதி

ஒளியின் பின் இருள் உண்டாகிறது. வெயிலின் பின் மழை வருகிறது. அவை போன்றே புயலின் பின் அமைதியும் ஏற்படுகின்றது. குழப்பங்கள் தோன்றிய பின் அமைதி தோன்றும். இளமையில் அதிகம் துடிதுடிப்பவர்கள் பிற்காலத்தில் மிக அமைதியாய் வாழ்வர். எந்த விதமான அசைவாட்டங்களும் சத்தங்களும் இன்றி இருப்பதே அமைதி ஆகும். இயற்கை சில வேளைகளில் புயல், நீர்ப்பெருக்கு, பூகம்பம், பேரிடி மின்னல், கடும்மழை, காட்டுத்தீ போன்ற திருவிளையாடல்களைப் புரிந்து வேடிக்கைபார்க்கும். சில வேளைகளில் ஒன்றுமின்றி மிகவும் அமைதியாக-மௌனமாகச் சாதுபோல் இருக்கும். மனிதர்களிலும் பெரும் குழப்பக்காரர்களுமிருக்கிறார்கள். உலகத்திற்கும் அமைதி தேவை மற்றும் உயிர்வகைகட்கும் அமைதி தேவை. அது போன்றே மனிதர்க்கும் அமைதி அவசியம் தேவை.

—நெ. ஹெய்னுலாப்தீன்.

## புத்தகங்கள்

புத்தகங்கள் கலைப் பொக்கிஷங்கள்-அறிவுச் செல்வங்கள்-கல்விப் பேழைகள். ஆனால் அவை நல்ல அறிஞர்களால் எழுதப்பட்ட நல்ல நூல்களாய் இருத்தல் அவசியம். கெட்ட நூல்களாய் இருந்தால்-தீய புத்தகங்களாய் இருந்தால் அவற்றால் மக்கட்கும்நாட்டிற்கும் விளையும் கெடுதிகள் அதிகமுண்டு. இந்நாட்களில் பல மோசமான புத்தகங்களும் உலவுகின்றன. நல்லவற்றைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டியதே நமது கடமை. [illegible]

—செல்வி மு. புஷ்பம்

## அன்பு

''அன்பின்றி ஆதியில்லை'' என்பது ஒரு முதுமொழியாகும். அன்பென்றால் என்ன? அதன் பண்பென்ன? அது எப்படிப்பட்ட ஒரு பொருள்? அது எங்குண்டு? எவரிடமுண்டு? என்றெல்லாம் பல கேள்விகட்கு இடங்கொடுத்து எம்மை ஆட்டி அசைக்கும் ஒருவித சக்தியாகும். ''அன்பே சிவம்'' அன்புதான் ஆதி; என்றெல்லாம் பலர் கூறுவர். இதையிட்டு நாம் ஆராயுமிடத்து. உண்மையில் அன்புதான் சிவனென்றும், சிவன்தான் அன்பென்றும் சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

அடுத்து பக்தன் ஒருத்தன் சிவனிடம் காட்டும் அன்புக்கு அருளென்றும்; தாய் தன் சேயிடம் காட்டும் அன்புக்கு ஆசை என்றும்; பூனை எலியிடம் காட்டும் அன்புக்குப் போலி என்றும்; காதலன் காதலியிடம் காட்டும் அன்புக்குக் காம மென்றும்; நண்பன் தன் நண்பனிடம் காட்டும் அன்புக்கு நட்பு என்றும் பல விதமாகச் சூழலுக்கும்; மனிதனுக்கும், ஏற்ற விதமாய் அன்பு அமைந்துள்ளது.

—கே. தேவசிகாமணி

## இயற்கை

இயல்பாகவுள்ளவை—தாமாக உண்டாகியவையெல்லாம் இயற்கையே. மனிதனால் உண்டாக்கப்பட்டவையெல்லாம் செயற்கையெனலாம். சூரியன், சந்திரன், பூமி மற்றும் கிரகங்கள், தாரகைகள் எல்லாம் இயற்கைப் பொருட்களே. மலை-கடல்-நதி-மண்-கல்-மரம்-செடி-கொடி-மனிதர்-விலங்குகள்-பறவைகள்-புழு-பூச்சிகள்-புல் பூண்டுகள் யாவும் இயற்கையின் கூறுகளே. காற்று வீசுதல், கடல் இரைதல், நீர் பெருகுதல், மழை பெய்தல், வெய்யில் எரித்தல், மலை தீ கக்குதல், காட்டுத் தீ பற்றல், பனி உறைதல், மின்னுதல், முழங்குதல்போன்றவையெல்லாம் இயற்கை நிகழ்ச்சிகளே. இயற்கை பெரும் புதுமையானது. மக்களைச் சிந்திக்கச் செய்யுந்தன்மையுள்ளது.

—எஸ். பி. ஆர். சண்முகம்

## கடமை

இவ்வுலகிலுள்ள எல்லா மனிதருக்கும் ஏதாவது கடமைகள் இருக்கவே செய்யும். சிலர் தங்கள் கடமையை உணர்ந்து சரியாகச் செய்வார்கள். சிலர் தங்கள் கடமையைச் செய்யாமலே விட்டுவிடுவார்கள். சிலர் இடையிடை கடமையைத் தவறவிட்டும் விடாமலும் செய்வார்கள். இப்படி மனிதர்கள் பலவிதம். மனிதரைப்போலவே அவர்தம் கடமைகளும் பலவிதமாகும். இயற்கை தன் கடமையைத் தவறாமல் முறைப்படி செய்துகொண்டு வருகின்றதை யாம் ஊன்றிப் பார்க்குங்கால் உணர

(13ம்பக்கம் பார்க்க)

## அடக்கம்

''அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்'' என்பது பொய்யாமொழி. ''அடக்கமுடையார் அறிவிலரென்றெண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டாம்'' என்பது நன்னெறி. ''அறிஞர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்'' என்பது வெற்றிவேட்கை. அடக்கம் ஆயிரம் பொன் பெறும் என்பது முதுமொழி. எனவே அடக்கத்தை நாம் ஒரு பொருளாகக் காத்துக் கொள்ள வேண்டும். அதைவிட நம் உயிர்க்கு ஆக்கம் தரத்தக்கது வேறில்லை. எவ்வளவுதான் படித்திருந்தபோதிலும், எல்லாந்தான் எமக்குத் தெரிந்திருந்தபோதிலும், எனக்குத் தெரியும் என்ற வீண் பெருமை காட்டாது, அடக்கமாக இருப்பதே நல்லது.

—செல்வி ஆ. இராஜேஸ்வரி

## மரணம்

ஆண்டியையும் அரசனையும் ஒன்றுபடுத்திச் சமநிலை வழங்குவது மரணம்தான். மமதை பிடித்துக் கொடுஞ்செயல் புரிவோர்க்குத் தக்க பரிசு தருவது மரணம்தான். எதிலிருந்து தப்பினாலும் எவரும் மரணத்திலிருந்து தப்ப முடியாது. சாதி மத வேறுபாடு காட்டாது—பட்டம் பதவியைக் கவனியாது—அழகு ஆயுள் பாராது—தேசம் காலம் நோக்காது சகலருக்கும் சமநீதி வழங்கிவரும் உண்மை நீதவான் மரணமே. மரணம் என்று ஒன்று இருப்பதை அறிந்தும் மக்கள் தம் வாழ்நாட்களில் அதனை உணராது தம் விருப்பப்படியே வாழ்கிறார்கள் பாதகச் செயல்கள் பல புரிகிறார்கள். மரணம் இருந்தும் இப்படி ஆயின் அது இல்லாவிடில் யாதாகும்?

—மா. கணேசன்

## தற்புகழ்ச்சி

ஒருவன் தன்னைப்பற்றி எவ்விடத்திலும் எந்நேரமும் எல்லைமீறிப் பேசிக்கொண்டிருப்பது தற்புகழ்ச்சியேயாகும். புகழ் எவருக்கும் வேண்டும். ஆனால் புகழை நாம் தேடிப்போகத் தேவையில்லை. புகழ் நம்மைத் தேடி வர வேண்டும். அது நாம் வாழும் விதத்திலேயே தங்கியுள்ளது. சிலரின் புகழ் அன்னோர் மறைந்ததும் அழிந்துவிடும். ஆனால் நல்லவரின் புகழோ என்றுமே குன்றாது-பொன்றாது-நின்று நிலவும். அத்தகையோரின் புகழை எவராலும் மறைக்கவும் இயலாது. மறுக்கவும் முடியாது. பாரதியார் இறந்தார். அவரின் புகழ் இறக்கவில்லை. காந்தி மறைந்தார். அவர் புகழ் மடியவில்லை. இவற்றின் காரணம் அவர்கள் வாழ்ந்து காட்டிய நல்ல அன்பு வாழ்க்கையேதான். அதனால் புகழ் அவர்களைச் சரணடைந்து விட்டது.

—பி. சோமநாதன்

## நகைச்சுவை

சிங்காரம், வீரம், நகை, சாந்தம், கருணை, குற்சை, அற்புதம், பயம், கோபம், முதலிய நவரசங்களுள் நகைச்சுவை மிக விசேடமானதாகும். இவ்வுலகிலுள்ள சீவராசிகளுள் மனிதவர்க்கமே நகைப்பைத் தெரிவிக்கக்கூடியது. எதிரியின் மனதையும் இழகச் செய்யும் தன்மைபெற்றது நகைச்சுவையே. இன்னல்களை ஓட்டக்கூடியதும் இதுவே. இதனாலேயே வள்ளுவர்கூட ''இடுக்கண் வருங்கால் நகுக'' என்றியம்பினார். நகைப்பே இந்நாளில் சிரிப்பென வழங்கப்படுகிறது.

—எஸ். பி. கிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மலைநாட்டுத் தமிழரின் உரிமைக்குப் போராடும் கட்சியோடு ஒத்துழைக்க தி. மு. க. எப்பொழுதும் தயார்"

## கொழும்பு தி. மு. க. பொதுக் கூட்டத்தில் தென்னாட்டு தி. மு. க. பிரமுகர் அறிவிப்பு

"நாளைக்கு என்ன ஆகுமோ என்ற கவலையோடு உரிமை இழந்த அரசியல் அநாதைகளாக அடிமை வாழ்வில் கிடந்துழலும் எட்டு லட்சம் மலைநாட்டுத் தமிழருக்கு விடுதலை பெற்றுத் தந்து புனர்வாழ்வளிக்க உள்ளன்போடு முன் வரும் அரசியல் கட்சிக்கு — அதன் போராட்டங்களுக்கு பரிபூரண ஆதரவு தந்து தோளோடு தோள் நின்று உழைக்க இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது. தென்னாட்டுத் தி. மு. க. வும் அவசியம் ஏற்பட்டால் தன்னாலான துணையைச் செய்யத் தயங்கப்போவதில்லை."

இவ்வாறு தென்னாட்டுத் தி. மு. க. பிரமுகர் திரு டி. கே. சீனிவாசன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு நாராயணகுருமண்டபத்தில் நடந்த தி. மு. க. கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

திரு சீனிவாசன் சுமார் ஒன்றரை மணிநேரம் பேசினார். அவர் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:

"வெறும் மேடாயும் காடாயுமிருந்த இலங்கையைப் பொன்கொழிக்கும் நாடாக்கியவர்கள் மலைநாட்டுத் தமிழர்கள். தமது உழைப்பை நல்கி இந்நாட்டு வளத்தைப் பெருக்கித் தந்தவர்கள் மலைநாட்டுத் தமிழர்கள். உழைத்து உழைத்து உருக்குலையும் அவர்கள் இன்று இங்கே உதைத்துத் தள்ளப்படுகிறார்கள்; உரிமை மறுக்கப்படுகிறார்கள்; கேவலமாக மதிக்கப்படுகிறார்கள்; மனிதராக வாழும் வாய்ப்புப் பறிக்கப்பட்டு வேதனையில் ஆழ்த்தப்பட்டு வருகிறார்கள். இந்த நிலையை மாற்றியமைத்து மலைநாட்டுத் தமிழர்களுக்குப் புனர்வாழ்வளிக்கத் தி. மு. க. பாடுபடும். இதே பணியில் ஈடுபடும் எந்தக் கட்சிக்கும் தனது இலட்சிய ஈடேற்றத்துக்காகத் தனது ஒத்துழைப்பையும் உறுதுணையையும் நல்கத் தி. மு. க. எப்பொழுதும் தயார்.

"மலைநாட்டுத் தமிழர்களுக்குத் தென்னாடு பிறந்த வீடென்றால் இலங்கை புகுந்த வீடு. புகுந்த வீட்டில் தகுந்த வகையில் நடந்துகொள்ள அவர்கள் தவறமாட்டார்கள். ஆனால் அவர்களுக்குப் புகுந்த வீட்டில் உரிய மதிப்புக் கொடுக்கப்படவில்லை. இந்த நிலை மாற வேண்டும்.

திரு சீனிவாசன் மதத்துறையில் தி. மு. க. வின் கொள்கையை விளக்கிப் பேசுகையில் கடவுள் உண்டோ இல்லையோ என்ற வீண் வாதத்தில் தி. மு. க. ஈடுபடுவதில்லை என்றும், எனினும் ஏக இறை நம்பிக்கைக்குத் தமது கழகம் விரோதி யல்லவென்றும், கடவுள் பெயரால் நாட்டில் நடைபெறும் அநாச்சாரங்களையும் பகுத்தறிவுக்கொவ்வாத கண்மூடித்தனமான செயல்களையே தாம் கண்டித்துவருவதாகவும் கூறினார்.

### வளர் பிறை வாலிபர் சங்கம்

கிழக்கரை வடக்குத் தெரு வளர் பிறை வாலிபர் சங்கத்தின் உறுதிமொழிக் கூட்டமொன்று சென்ற 3-4.57-ல் மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத் துணைத் தலைவர் ஜனாப் கே. ஏ. சீனிமுகம்மது தலைமை வகிக்க ஜனாப் எஸ். கே. சதக்கத்துல்லா இறைவணக்கம் செய்ய கூட்டம் ஆரம்பமானது. தலைவர் முன்னுரைக்குப்பின் அங்கத்தவர்களான ஜனாப் எம். முகைதீன், இ. ம. மு. முகைதீன், எம். கே. வி அரக்காஸ் முகைதீன், எஸ். ஏ. காதர் (செயலாளர்) ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சொற்பொழிவுக்குப் பின் சங்க வளர்ச்சிக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் சங்க அங்கத்தவர்களின் கட்டுப்பாட்டுக்காக உறுதிமொழி எடுக்கப்பட்டது.

### "மருதம்" ஆண்டு நிறைவு விழா

மருதமுனை—தையலகத்தில் சென்ற 13-4-57-ல் 'மருதம்' இலக்கிய இதழின் இரண்டாவதாண்டு நிறைவு விழா ஆசிரியர் எம். வை. எம். முஸ்லிம் தலைமையில் நடைபெற்றது. விழாவுக்கு மத்திய இலங்கை எழுத்தாளர்களுட்பட அதிகமானோர் சமூகமளித்திருந்தனர். 'இதயநாதம்' ஆசிரியர் ஏ. எல். ஏ. அஸீஸ், எம். என். ஷரிபுத்தீன், ஏ. எம். ஸாஹிர், ஏ.எம். முகம்மது, செல்வி ஹயறுன்நிஸா ஆகியோர் மருதத்தின் சேவைகளைப்பாராட்டிப் பேசினர்.

### பாரதி கான நாடக சபா

பாரதி கான நாடக சபா தலைவர் நடிகமணி திரு வி. கே. எஸ். செல்லப்பா சென்ற 10—4—57 தலைமன்னார் ரயில்மூலம் இந்தியாவுக்குப் பிரயாணமானார். அன்னாருக்கு பாரதிகான நாடக சபாவினர் மலர் மாலை சூட்டி வழி அனுப்பி வைத்தனர்.

### மறுமலர்ச்சிக் கலை மன்றம்

மறுமலர்ச்சிக் கலை மன்ற அரங்கேற்று விழா சென்ற 7-4-57-ல் வெள்ளவத்தையில் திருவாளர். பி. எஸ். எம். சாந்திகுமார் தலைமையில் நடைபெற்றது.

திரு வி. கே. எஸ். செல்லப்பா கலைஞர்களை வரவேற்றுப் பேசினார். சீர்திருத்தக் கருத்துடைய நாடகங்களை நடித்து மக்களின் நலனுக்காக ஐக்கியத்துடன் பணியாற்றினால் மக்களின் ஆதரவில் இம்மன்றம் மலர்ச்சியுடன் உன்னத ஸ்தானத்தில் இருக்குமென்று தலைவர் தமது சொற்பொழிவில் கூறினார். வி. கே. எஸ். செல்லப்பா, பி. எஸ். எம். சாந்திகுமார், டேவிட் மோசேஸ் ஆகியோர் மன்றத்தின் பொறுப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். செல்வி கலாதேவியின் நடனத்துக்குப்பின் டேவிட் மோசேஸின் நன்றியுரையுடன் விழா சிறப்புடன் முடிவுற்றது.

### புதுக்கடை ஐக்கியசேவா சங்கம்

கொழும்பு புதுக்கடை ஐக்கிய சேவா சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் தலைமையில் நடைபெற்றது.

ஐக்கிய சேவா சங்கத்தின் ஆண்டுவிழாவின்போது "ஆண்டுமலர்" ஒன்று வெளியிடுவதெனவும், புது வருடத்தில் டயரி வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### இ. தி. மு. க. கண்டிக் கிளை

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக கண்டிக் கிளையின் உறுப்பினர் கூட்டமொன்று கண்டி சி. சி. பாடசாலை மண்டபத்தில் சென்ற 7—4—57-ல் தோழர் க. ப. சிவம் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் கழகத்தின் கொள்கை விளக்கம் பற்றியும் வருங்காலத்தில் கழகம் மேற்கொள்ள வேண்டிய பணிகள், வேலைத் திட்டங்கள் பற்றியும் தோழர்கள் நம்பிக்கை, மதியழகன், ஏ. எம். முஸ்தபா, ஏ. பெருமாள், எஸ். சின்னத்தம்பி ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

இறுதியாக நடப்பு வருடத்திற்கான செயற்குழு கீழ் வருமாறு தேர்ந்தெடுக்கப்பட்டது:

செயலாளர்: நம்பிக்கை, துணைச்செயலாளர்: சி. து. மதியழகன், பொருளாளர்: ஏ. எம். முஸ்தாபா, ஏ. பெருமாள், எஸ். எஸ். திருநாதன், பி. பி. என்றி, எம். ஐயாசாமி, து. பெரியசாமி, ஐ. வி. பர்ணந்து, க.ப. சிவம், எஸ். எம். ஜவுபர்.

### இளைஞர் மறுமலர்ச்சி மன்றம்

இளைஞர் மறுமலர்ச்சி மன்றத்தின், கலை இலக்கியத் திங்களிதழான இளைஞனின் வெளியீட்டு விழா சென்ற 12-4-57-ல் 140 செம்பட்டாத்தெரு மன்றப் பணிமனையில் மன்றத் தலைவர் திரு பெரி. சுந்தரலிங்கம் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

திருவாளர்கள் மொராயல், மகேந்திரராசா, ரொட்ரிகோ, கு. இளங்கோ இதழாசிரியர்களான திரு மி. ந. முத்துராசன், திரு கு. இராமச்சந்திரன், பதிப்பாசிரியர் சு. தியாகராசா, இளங்கதிர், தருமதாசன், வில்லவன் பொர்க்ஷான் சு. யோவான் ஆகியோர் இளைஞன் வெளியீட்டைப் பாராட்டிப் பேசினர். செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

### இளைஞர் முன்னேற்றக் கழகம்

சென்ஸபஸ்தியான் இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் சொற்பயிற்சிக் கூட்டம் சென்ற 14—4—57-ல் கழகப் பணிமனையில் தோழர் பி. எம். அன்வர் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் எழுத்தாளன் சிறந்தவனா? பேச்சாளன் சிறந்தவனா? என்னும் பொருள் போட்டிப் பயிற்சியாக எடுத்துக்கொள்ளப்பட்டது. தோழர்கள்: எஸ். டி. அபூபக்கர், கே. எம். எம். காதர், என். சிவராமன், பி. எம். சேக்கர் முதலியோர் சொற்பொழிவில் கலந்துகொண்டனர்.

### இளைஞர் மறுமலர்ச்சி மன்றம்

இளைஞர் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் சென்ற 6—4—57-ல் மன்றப் பணிமனையில் மறைந்த மாவீரர் அழகிரி நினைவு நாள் கொண்டாடப்பட்டது.

திருவாளர்கள் எம். கருப்பையா, எஸ். பெருமாள், ஆ. இளங்கோ, எல். தருமதாசன், யோவான் ஆகியோர் அழகிரிசாமி ஆற்றிய சேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

கூட்ட ஆரம்பத்தில் கொடை வள்ளல் டாக்டர் அழகப்பாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

# சமஷ்டி ஆட்சியிலேயே த. பே. மக்கள் தன்மானத்துடன் சுபிட்சமாக வாழ முடியும்

## பாராண்ட இனமும் பழம் பெரும் மொழியும் புறக்கணிக்கப்படுவதேன்?

### காரைதிவு கூட்டத்து பேச்சாளர்கள் கருத்துகள்

"இன்று த. பே. மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்திலிருந்து விடுதலை பெற்று நாம் தன்மானமுள்ள தமிழர்களாய் வாழவேண்டுமேயானால், இலங்கைக்கு ஒரு சமஷ்டி ஆட்சி ஏற்பட வேண்டியது மிக மிக அவசியமாகும்."

இவ்வாறு காரைதீவுவிவேகானந்தா சனசமூக நிலைய நான்காவது ஆண்டு விழாவையொட்டி 15—4—57ல் நடைபெற்ற மாபெரும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசும் பொழுது முன்னைநாள் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் கூறினார்.

திரு. இராசமாணிக்கம் தொடர்ந்து மேலும் பேசுகையில் கூறியதாவது:-

#### பாராண்ட இனம்

தமிழ் மக்களாகிய நாம் பண்டுதொட்டுப் பரம்பரை பரம்பரையாக பண்புள்ளவர்களாக பாராண்ட இனமாக அன்புள்ளங் கொண்டவர்களாக ஆத்மீக சக்தியுடையவர்களாக வாழ்ந்து வந்திருக்கிறோம் என்று பெருமை பேசிக்கொண்டால் மட்டும் போதாது. அன்று நாம் வாழ்ந்த வாழ்க்கையை நினைந்து நினைந்து நெஞ்சுருகிக் கண்ணீர் வடித்தால் மாத்திரம் போதாது. அதே வாழ்க்கை போன்றின்று நாம் வாழ்கின்றோமா? இல்லையா? தன்மானத்தைக் காப்பாற்றிக் கொண்டோமா? இல்லையா? என்று எண்ணிப் பார்த்து அதற்கான பரிகாரத்தைத் தேடக்கூடிய எந்தப் போராட்டமாய் இருந்தாலும் அதிற் குதித்து நமது நாட்டு விடுதலையைத் தேடிக்கொள்ள முன்வரவேண்டுமென்று ஒவ்வொரு வாலிப இளைஞர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

#### அடிபணியோம்

திரு. கே. கே. ஆறுமுகம் பேசுகையில், அரசாங்கம் இது போன்ற நிலையங்கட்கு கொடுத்துதவுஞ் சில உதவிகட்காக நாம் அரசாங்கத்திற்கு அடிபணிந்து வாழ மாட்டோம் என்று கூறினார்.

#### தமிழ் 'கசக்கிறது'

திரு. கி.ச. அ. விநாயக மூர்த்தி பேசுகையில் "உலகமே புகழ் செறிந்த மொழியாகத் திகழ்ந்த தமிழ்இன்று ஆட்சியாளருக்கு கசப்புடைய மொழியாக மாறியது மட்டுமல்லாமல் நாம் கூடக் கள்ளத்தோணிகளாக மாறிவிட்டோம்" என்று கூறினார்.

#### தமிழர் முதலினம்

பண்டிதர் வீ. சீ. செல்லத்துரை பேசுகையில் உலகிலே முதன் முதற்றோன்றியவினம் தமிழரென்றும், முதன் முதலாகத் தோன்றிய மொழி தமிழ் மொழியென்றும் பல மேனாட்டு அறிஞர்கள் கூறிக்கொண்டிருக்கின்றவின்னேரத்திலே நமது மொழியின் பெருமையையறிந்து அதனைப் பேணி வளர்க்க முடியாத நிலையிலே நமக்கெனவோர் சிறந்த சரித்திரத்தையேற்படுத்த நாம் தவறிவிட்டோம். விவேகானந்தரின் பெயருடன் இயங்குகின்ற இந்நிலையம் விவேகானந்தரின் லட்சியங்களை, இந்நாட்டு மக்களிடத்திலே பரப்பி நல்லவோர் நிலையை யுருவாக்க எதிர்காலத்திலே இந்நிலைய நிர்வாகிகள் தவறமாட்டார்களென்று நம்புவதாகக் கூறினார்.

#### வரவேற்புரை

ஆரம்பத்திலே திரு. க. சாமித்தம்பி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இடையிடையே செல்வன் க. வடிவேலு, திரு கே. இராசையா ஆகியோர் தமிழ் வாழ்த்துக்களைப் பாடிச் சபையோரை மகிழ்வித்தனர். நிலையக் காரியதரிசி திரு எஸ். தெய்வநாயகம் நன்றியுரை கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் அடுத்த
மாபெரும் திரையீடு!



நடிகர்கள்:

சிவாஜி கணேசன்,
சாவித்திரி,
கண்ணாம்பா,
நாகையா, நம்பியார்,
எம். கே. ராதா,
தங்கவேலு,
ராஜசுலோசனா.



வணங்காமுடி

மகத்தான 3வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) தீவொளி (நுவரெலியா)
விஜிதா (மஸ்கெலியா) ஜூபிடர் (குருநாகலை)

ஆகிய திரைகளில்



அஞ்சலி தேவி,
என். டி. ராமராவ், ரேலங்கி,
ஆர். நாகேஸ்வரராவ்,
சௌகார் ஜானகி நடித்துள்ள

வெற்றி வீரன்

பணத்தாசை பிடித்த அரசன் - கருணையே சிறிதும் இல்லாத சேனாதிபதி - இவர்கள் கொடுமைக்குப் பலியானான் வெற்றி வீரனான பிரதாபனின் தந்தை. தந்தையைக் கொன்றவனைப் பலிவாங்க சபதம் பூண்டான் பிரதாபன். ஆனால்... தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டான். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பிரதாபனின் முடிவு என்ன?

இவற்றை அறிய எமது வெள்ளித்திரையை நாடுங்கள்!


இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1957 ஏப்ரல் மாதம் 28ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org